Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°c 28°c

www.onlineuthayan.com

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 190 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 21, செவ்வாய் 04.06.2013

இந்தியன்



பக். 06
அமைச்சரவை மாற்றம்

உலகம்



பக். 07
சீனாவுக்குக் கடும் எச்சரிக்கை

விளையாட்டு



பக். 23
கண்காணிப்பு வளையத்தில்
சவான் திருமணம்

# பிரிட்டனில் வாழும் இலங்கைத் தமிழ்த் தம்பதி சென்னையில் கடத்தப்பட்ட பின் மீட்பு

### சந்தேகத்தில் இலங்கையர்கள் இருவர் உட்பட 9 பேர் கைது

சென்னை, ஜூன் 04
சென்னை விமான நிலையத்தில் வைத்து கடத்தப்பட்ட இலங்கைத் தமிழரான பிரிட்டன் தம்பதியரை மீட்டுள்ளனர் பொலிஸார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த இருவர் உட்பட 9 பேரைக் கைது செய்துள்ளனர் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி: பக்கம் 24



மீட்கப்பட்ட தம்பதியர்

# '13' ஒழிப்புக்கு படை திரட்டல்

## ஹெல உறுமயவின் ஏற்பாட்டில் வியாழனன்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூன் 04
13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக நாளைமறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் முக்கிய சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது. ஜாதிக ஹெல உறுமயவுக்கும், கடும்போக்குடைய சிங்களத் தேசிய அமைப்புகளுக்குமிடையில் இந்த முக்கிய சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
பொதுபலசேனா, சிஹல ராவய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சிங்கள தேசிய சங்கம், தர்ம விஜய நிதியம், ராவணபலய உள்ளிட்ட சகல சிங்கள பௌத்த அமைப்புகளும் இச்சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளன. ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழு உறுப்பினரும், மேல் மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில இந்தத் தகவலை நேற்று 'உதயனிடம்' உறுதிப்படுத்தினார்.
இச்சந்திப்பின்போது அரசமைப்பிலிருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்கக்கோரும் ஹெல உறுமயவின் தனிநபர் பிரேரணை, வடக்குத் தேர்தல், மிருகவதைத் தடைச் சட்டவரைவு, வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட சிங்கள மக்களின் மீள்குடியேற்றம் உட்பட முக்கிய பல விடயங்கள் சம்பந்தமாக ஆராயப்படும் என அறியமுடிகின்றது.
அதேவேளை, சிங்கள, பௌத்த அமைப்புகளிடம் மேற்படி விடயங்கள் சம்பந்தமாகக் கருத்துக் கேட்ட பின்னர் அவற்றை அறிக்கையொன்றாகத் தயாரித்து ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு ஹெல உறுமய உத்தேசித்துள்ளது என்றும் தெரியவருகின்றது.
குறிப்பாக, தமது கோரிக்கையை ஏற்காது அரசு வடமாகாண சபைத் தேர்தலுக்கு செல்லுமானால், அவ்வேளையில் தாம் எடுக்கவுள்ள முடிவு தொடர்பிலும் பௌத்த அமைப்புகளுக்கு இச்சந்திப்பின்போது ஹெல உறுமய உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
அத்துடன், அரசமைப்பிலிருந்து 13ஐ அகற்றுமாறு அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு மேற்படி அமைப்புகளிடம் ஹெல உறுமய கோரிக்கையொன்றை முன்வைக்கவுள்ளது எனவும் அறியமுடிகின்றது. (த சி)

## பா.ஜ.கட்சி எம்.பிக்கள் நாளை யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 04
இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்.மாவட்டத்துக்கு நாளை புதன்கிழமை வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
இருப்பினும் இவர்களின் பயண ஒழுங்கை தாம் மேற்கொள்ளவில்லை என இந்தியத் துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.
பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிசங்கர் பிரசாத், சுரேஷ்பாபு மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் விவேக் கயுதிப் ஆகியோரே இலங்கைக்கு இன்று செவ்வாய்க்கிழமை வருகை தரவுள்ளனர்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் இவர்கள், நாளை யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளனர்.
வழமையாக இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகைகளை ஒழுங்கு செய்யும் இந்தியத் துணைத் தூதரகம் பா.ஜ.க.குழுவின் பயணத்தை ஒழுங்கு செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## சீனாவுடனான கூட்டு நாட்டுக்குப் பாதகம்

### அரசை எச்சரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 04
இலங்கை அரசு இந்தியாவை ஏமாற்றிக் கொண்டு சீனாவுடன் கூட்டு சேர்ந்து வருவதுடன் அபிவிருத்தி என்ற பெயரில் கோடிக்கணக்கான பணத்தையும் கடனாகப் பெற்று நாட்டையும், நாட்டு மக்களையும் படுபாதாளத்தில் தள்ளி விடப்பார்க்கிறது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.
நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கும் காரணிகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். அத்தோடு முறையான பொருளாதார மற்றும் இராஜதந்திரக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு

தொடர்ச்சி: பக்கம் 24

## தனயன் அடித்ததில் தந்தை சாவு

கிளிநொச்சி, ஜூன் 04
வீட்டில் தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட தகராறு முற்றியதில் மகனின் தாக்குதலால் தந்தை உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி, கோணாவில் ராஜன் குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
சம்பவத்தில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான அதேயிடத்தைச் சேர்ந்த மு.சுப்பிரமணியம் (வயது-49) என்பவர் உயிரிழந்தார்.
இவரது சடலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
சம்பவத்தை அடுத்து கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேகத்தில் உயிரிழந்தவரின் மகனை நேற்றுக் கைது செய்துள்ளனர்.
மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-6)

## படையினர் விளக்கமும் பத்திரிகை விளக்கமும்

யாழ்ப்பாணம், ஜூன் 04
சுண்டிக்குளம் கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அனுமதியளிக்கப்பட்டவர்களா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பது மட்டுமே இராணுவத்தினரின் பணி என்று தெரிவித்திருக்கிறது பலாலி இராணுவக் கட்டளைத் தலைமையகம்.
'தென்னிலங்கை மீனவர்கள் சுண்டிக்குளத்தில் அத்துமீறல்; படையினரின் உதவியுடன் கடலட்டை பிடிப்பதில் மும்முரம்' என்று 'உதயன்' வெளியிட்ட செய்தி தொடர்பில் பலாலி தலைமையகம் விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முழுமையான விவரம் வருமாறு:
2013.05.03ஆம் திகதி தங்கள் பத்திரிகையின் முன்பக்கத்தில் 'தென்னிலங்கை மீனவர்கள் சுண்டிக்குளத்தில் அத்துமீறல்; படையினரின் உதவியுடன் கடலட்டை பிடிப்பதில் மும்முரம்' என்ற தலைப்பிலான செய்தி தொடர்பாக, அச் செய்தியில் "வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்கள் தொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள சுண்டிக்குளம் கடல் பகுதியில் தென் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இராணுவத்தினரின் அனுமதியுடன் கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்" என

தொடர்ச்சி: பக்கம் 24

## யாழில் இழுவைப் படகுகளை பயன்படுத்தினால் பறிமுதல்

### கடற்றொழில் திணைக்களம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 04
கடற்றொழிலாளர்கள் கடந்த ஏப்ரலில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பார்களேயானால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் படகுகள், வலைகளும் பறிமுதல் செய்யப்படும் என்று யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித்தார்.
யாழ். [illegible] மீனவர்கள் மீண்டும் இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுவது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடற்றொழிலாளர்கள் தாம் இனிமேல் இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கப்போவதில்லை என்று கடந்த ஏப்ரல் மாதம் உடன்பாட்டுக்கு வந்து ஒப்பந்தம் செய்திருந்தனர். இதுவரை [illegible] அந்த ஒப்பந்தத்தை யாராவது மீறுவார்களேயானால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பது சட்ட விரோத செயல் என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்று அப்படித் தெரிந்திருந்தும் திரும்பத் திரும்ப அறிவுறுத்தியும் அந்த முறையைப் பின்பற்றினால் நீதிமன்றினூடாக கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவர். உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படும் என்றார் கணேசமூர்த்தி. (த-4)

## போதைப் பொருளுடன் மன்னாரில் இருவர் கைது

மன்னார் – மடு பிரதான வீதியில் போதைப்பொருளுடன் இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.
மன்னார் – மடு பிரதான வீதிக்கு மாறுவேடத்தில் சென்று கஞ்சாவை வாங்குபவர்கள்போல் நடித்து குறித்த கஞ்சா போதைப் பொருளைக் கைப்பற்றியதோடு இவர்களை பொலிஸார் கைது செய்தனர். குறித்த கஞ்சா பொதி ஒரு கிலோ கிராம் எடை கொண்டது எனவும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தது எனவும் மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயவீரவின் மகளுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 4

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் ரோஹண விஜயவீரவின் மகளை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

தனது தாய் மற்றும் சகோதரனைத் தாக்கியதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்தே இவர் மே மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

மறைந்த ரோஹன விஜயவீரவின் மனைவி செய்த முறைப்பாட்டையடுத்தே அவரது மகள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அவரை வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் அன்றைய தினமே முன்னிலைப்படுத்திய போது அவரை நேற்று 3 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (த)

# 6 ரஷ்யக் ஹெலிகள் வந்தன இலங்கைக்கு

## கூடவே வந்தனர் பொறியியலாளர்களும்

கொழும்பு, ஜூன் 4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பயணங்களை மேற்கொள்ளும் அணிக்கான ஹெலி கொப்டர்கள் ரஷ்யாவிலிருந்து அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

செய்மதி தொலைத் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்ட, எட்டுப் பயணிகள் மற்றும் விமானிகளை ஏற்றிச் செல்லும் ஹெலிகளே ஜனாதிபதியின் பயணத்துக்காகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.


2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கு ரஷ்யா வழங்கிய 350 மில்லியன் டொலர் கடனுதவியிலிருந்து, 14 ஹெலிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இவற்றில் 6 ஹெலிகளே கடந்த வாரம் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இரண்டு பெரிய அன்ரனோவ் -124 விமானங்களிலேயே இந்த ஹெலிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதில் இரண்டு ஹெலிகள் ஜனாதிபதியின் பயணங்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. எம்.ஐ 171- ஈ ரகத்தைச் சேர்ந்த ஹெலிகளே இவ்வாறு பயன்படவுள்ளன.



எம்.ஐ- 171- ஈ ரக ஹெலிகொப்டர்



எம்.ஐ- 171- ஈ ரக ஹெலியின் உட்புறம்



எம்.ஐ- 171- எஸ்.ஏச். ரக ஹெலிகொப்டர்

"2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கு ரஷ்யா வழங்கிய 350 மில்லியன் டொலர் கடனுதவியிலிருந்து, 14 ஹெலிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஏனைய நான்கு ஹெலிகளும் எம்.ஐ 171 - எஸ்.எச் ரகத்தைச் சேர்ந்தவை இவை. இலங்கை விமானப் படைக்கு வழங்கப்படவுள்ளன.

இதைவிட எம்.ஐ 171 துருப்புக் காவி உலங்கு வானூர்திகள் 8 வரையில் ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

ஹெலிகளை ஒருங்கிணைப்பதற்காக ரஷ்யாவிலிருந்து பொறியியலாளர்களும், தொழில் நுட்பவியலாளர்களும் கொழும்பு வந்துள்ளனர். இவர்கள் ஹெலிகளைப் பொருத்தி, சோதனைகளை மேற்கொண்ட பின்னர் இலங்கை விமானப்படையினரிடம் ஒப்படைக்கவுள்ளனர். (த-5)

# ஸ்ரீலங்கா மக்கள் கட்சி வடக்கில் தனித்துப் போட்டி

## 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தவும் கோரிக்கை

கண்டி, ஜூன் 4

13 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரியுள்ள ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, வட மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடவும் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாகவே வடக்கில் தனித்துப் போட்டியிட முடிவு எடுத்ததாக யாழ். மற்றும் வன்னி மாவட்ட பிரதான அமைப்பாளரும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் உபசெயலாளருமான திலக்குமார உடுகம தெரிவித்துள்ளார்.

கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த மே மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. கட்சியின் பிரதான செயலாளர் கலாநிதி ரஞ்சித் நவரத்தினவின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அசங்க நவரத்தின நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் வட மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதென்றும், முதலமைச்சர் வேட்பாளராக திலக் உடுகம களமிறங்குவார் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் யாப்புக்கு அமைவாக நாட்டின் ஏனைய மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மாகாண சபை அதிகாரங்களை வடக்கிலும் நடைமுறைப்படுத்தவும், வடக்கு மக்களின் நலன் நோக்கில் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை அவ்வாறே நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# மண்சரிவால் ரயில் சேவை பாதிப்பு

கண்டி, ஜூன் 4

இதல்கஸ்ஹின்ன 45 ஆவது சுரங்கத்துக்கு அருகில் ஏற்பட்டுள்ள மண்சரிவினால் மலையகத்திற்கான ரயில்சேவை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது என்று ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது.

இந்நிலையில், பதுளையிலிருந்து கொழும்பு கோட்டையை நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயில் இதல்கஸ்ஹின்ன ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது.

சரிந்துள்ள மண்திட்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது. (த)

# குண்டை வெடிக்கச் செய்து வான்படைச் சிப்பாய் சாவு

கொழும்பு, ஜூன் 4

வான்படைச் சிப்பாய் ஒருவர் குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். அனுராதபுரம் வான்படை முகாமில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகாமில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த குண்டு ஒன்றை வெடிக்கச் செய்தே அவர் உயிரிழந்துள்ளார்.

21ஆம் படையணியைச் சேர்ந்த எஸ்.டி.எஸ் சிகுராதிபதி என்ற படைச் சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

என்ன காரணத்துக்காக இவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# தனக்குத்தானே தீ மூட்டியவர் கிணற்றுக்குள் குதித்துச் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 4

தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டியவர் எரிவு தாங்காமல் தீயை அணைக்க முற்பட்டு கிணற்றினுள் குதித்தமையால் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று வைத்தியசாலைத் தரப்புத் தகவல் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் உடுவில் பிரதேச செயலகத்தை அண்மித்து பெரிய மதவடியில் உள்ள அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த சர்வேஸ்வரன் பிருந்தா (வயது-27) என்பவரே உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் இரவு படுக்கைக்குச் சென்ற அவர் யாருக்கும் தெரியாமல் வீட்டின் பின்புறம் உள்ள காணிக்குச் சென்று தீ மூட்டியுள்ளார். எரிவு தாங்க முடியாது தீயை அணைக்க முற்பட்டுக் கிணற்றில் குதித்திருக்கலாம் என்றும் அதன்போதே நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வீட்டுக்காரர் நேற்றுக்காலை எழுந்து குறித்த யுவதியைக் காணாது தேடியபோதே சம்பவம் தெரியவந்தது. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் இரண்டு மாதங்களுக்கு முன்னர் காணாமற் போனார் எனத் தெரிவிக்கப்பட்டுச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் இவர் கொழும்பில் வைத்துப் பெற்றோரால் மீட்கப்பட்டிருந்தார். (த-4-78-86)

# கசப்பான அனுபவங்களை நினைவு கூருவது இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காகவே

## ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 4

பழைமை பேசி, கடந்த காலக் கசப்பான அனுபவங்கள் - பயங்கரவாதத் தாக்குதல்களை நினைவு கூருவது இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காகத்தான். மாறாக மீண்டும் விரோதத்தை பகைமையை ஏற்படுத்துவதற்கல்ல என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிமடை, பொரலந்த, ஹீன் நாரங் கொல்ல, சிறிசுதர்சனாராம விகாரையில் வாகல்கட, தாத்துமந்திர என்பவற்றின் திறப்பு விழா மற்றும் விகாரையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு ஆகியன நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பௌத்தர்கள் ஒரு போதும் இந்த நாட்டில் அடிப்படை வாதிகளில்லை. எமது தேரர்களும் எமது சமூகமும் கூட அடிப்படைவாதமானதல்ல.

எமது இளம் பராயத்தினர் விசாரைகளுடன் இணைந்து நெருங்கிச் செயற்பட வேண்டிய காலமிது. ஏனெனில் இந்த நாட்டின் எதிர்காலம் இன்றைய இளம் சமூகத்தின் கைகளில்தான் உள்ளது. அதனால் அவர்களை இப்போதிருந்தே நல்வழியில் வளர்த்தெடுக்க வேண்டும்.



"பௌத்தர்கள் ஒரு போதும் இந்த நாட்டில் அடிப்படை வாதிகளில்லை. எமது தேரர்களும் எமது சமூகமும் கூட அடிப்படை வாதமானதல்ல.

இன்றைய போன்றதொரு நாளில் தான் அரந்தலாவ தேரர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. அதனை [illegible] வேண்டும். இதனை எமது பிள்ளைகளுக்குக் கூறுவது அவசியம். ஏனென்றால் இப்படியான கொடூர பயங்கரவாத யுகத்தைக் கடந்து தான் நாம் வந்திருக்கின்றோம். [illegible] வேண்டும் - என்றார். (த-5)

# ஊடக நன்னெறி சட்ட வரைவு சமர்ப்பிக்க முன் கட்சிகளுக்கு

கொழும்பு, ஜூன் 4

'ஊடக நன்னெறிகள்' சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் சட்ட வரைவைச் சகல அரசியல் கட்சிகளுக்கும் வழங்கவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்தச் சட்டவரைவு ஆலோசனை குழுவில் நீண்டகாலம் தேக்கநிலையில் இழுபட்டுக் கொண்டிருந்தது.

இந் நிலையில் படித்துக்கொள்வதற்காகவே இந்த சட்ட வரைவு சகல அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

'இது ஒரு புதிய விடயமல்ல, நாம் இது பற்றி அரச சேவையாளர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் வேறு மதிப்புமிக்க தனியாள்கள் ஆகியோரிடம் பேச்சு நடத்தி ஒரு வரைவைத் தயாரித்தோம். அது ஆலோசனைக் குழு நிலையில் நீண்டகாலம் இழுபட்டது பல காரணங்களுக்காக இந்தச் சட்ட வரைவு விரைவுபடுத்தப்படுகின்றது. இப்போது அரசியல் கட்சிகளின் கருத்துக்களை அறிவதற்கு காத்திருக்கின்றோம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தடுப்பார் இன்றி ஒப்பேறி வரும் ஒவ்வாத கைங்கரியங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில், ஒரே இரவில் நான்கு இந்து ஆலயங்கள் இனம் தெரியாதவர்களால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆலயங்கள் நான்கினதும் மூல விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டன; நவக்கிரகங்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

அவற்றுள், சரித்திரப் பிரசித்திபெற்ற பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயமும் குண்டர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. குருக்கள் மடம் செல்லக்கதிர்காமர் ஆலயம், மாங்காடு பிள்ளையார் ஆலயம், கிரான்குளம் ஐயனார் ஆலயம் ஆகியனவும் விஷமிகளால் உடைத்துச் சேதமாக்கப் பட்டிருக்கின்றன.

நான்கு ஆலயங்களிலும் கடவுளர்களின் விக்கிரகங்களை உடைத்தவர்கள், அவற்றில் இருந்து பெறுமதிமிக்க தங்க நகைகளையும் பெருந் தொகைப் பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

நான்கு ஆலயங்களும் ஒரே நாளில், அதே இரவில் உடைக்கப்பட்டமை வெறும் திருட்டு நோக்கத்துடன் நடத்தப்பட்டதாகக் கொள்ளத்தக்கதன்று; முழுக்க முழுக்க மதத் துவேசச் செயற்பாடே அது என்பதில் சந்தேகம் கொள்ள இடமில்லை.

வழமை போன்று விசாரணைகள், புலனாய்வு நடத்திய பின்னரே தீர்க்கமாகச் சொல்ல முடியும் என்று நாள்களைக் கடத்தி, அதர்மம் மிகுந்த சம்பவத்தை சாதாரணமானது ஆக்கிவிடக் கூடாது. ஆயினும் அரச இயந்திரம் அத்தகைய செயல்முறையை விரும்புமா என்பது நாள்கள் நகரத்தான் தெரியவரும்.

உடைக்கப்பட்ட நான்கு இந்து ஆலயங்களும் ஒன்றுக்கு மற்றையது மிக மிக நீண்ட தூரத்தில் உள்ளவை. அதனால் ஒரே திருட்டுக் கூட்டமே, நான்கு ஆலயங்களிலும் திட்டமிட்டு கொள்ளை அடித்ததாகக் கொள்ள முடியாது; தர்க்க ரீதியாக நிறுவவும் இயலாது; நடைமுறை ரீதியாக முடிவுக்கும் வர இயலாது.

மேலும், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் அரசும் அதன் அங்கங்களும் ஏனோதானோ என்ற அசமந்தப் போக்கைக் காட்டுவதனையும் இந்து ஆலயங்கள் நான்கு ஒரே இரவில் உடைக்கப்பட்ட சம்பவங்கள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன.

தம்புள்ளவில் முஸ்லிம்களின் பள்ளிவாசல் மற்றும் மத அனுட்டான நிலையம் என்பன மீது சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் மற்றும் வன்செயல்கள் பல இடங்களுக்கும் பரவியதும் குருநாகலில் பள்ளிவாசல் இயங்குவதற்கு பெரும் எதிர்ப்பும் அச்சுறுத்தலும் என்று வரிசை நீண்டு சென்றதும் மறைக்கக் கூடியனவோ மறுக்கக் கூடியனவோ அல்ல.

அறுபது வருடப் பழைமை வாய்ந்த தம்புள்ளப் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, பௌத்த குருமார்கள் வேடிக்கை பார்த்ததும் அதிவிஷேசம் கொண்டது எனலாம்.

காலியில், முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் மீது நாய் இரத்தம் தெளிக்கப்பட்ட சம்பவமும் இஸ்லாமிய மக்களுக்கு எதிரான வன்செயல்களில் ஒன்று.

இஸ்லாமியருக்கு, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஹக்கீம் கூறுமளவுக்கு, மதவாதிகளால், இனவாதிகளால் அடாத்தான வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டமை இப்போது ''சரித்திரம்'' போலாகிவிட்டது.

அதன் தொடரியாக, அம்பாந்தோட்டை மாவட்டம் வீரகெட்டியாவில் கிறிஸ்தவ எயிட் மிசனைச் சேர்ந்த ஆறு தேவாலயங்கள் மீது கடந்த வருடம் டிசெம்பர் மாதம் தொடக்கம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதனால் நான்காயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதே வரிசையில், இந்துக்களின் ஆலயங்கள் மீதும் மதமிதவாதிகளின் கழுகுக் கண்கள் விழுந்துள்ளன.

வடக்கில் –

வன்னிப் பிரதேசத்தில், கிளிநொச்சி உதிரவேங்கை வைரவர் ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டுப் போயின. அதன் பின்னர் அந்த ஆலயக் காணி சுவீகரிக்கப்பட்டது. அது குறித்து மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து, இப்போது வழக்கு நடைபெறுகிறது.

கிளிநொச்சியில் கிருஷ்ணபுரத்தில் பிள்ளையார் விக்கிரகம் அகற்றப்பட்டு புத்த பெருமானின் சிலை வைக்கப்பட்டது. கடந்த வருடம் ஜூன் மாதம் அது நடைபெற்றது.

கடந்த வருடத்தில் திருக்கேதீஸ்வரம் ஆலயப் பிரதேசத்திலும் விகாரை நிர்மாணிக்கப்பட்டு கௌதம புத்தரின் சிலை வைக்கப்பட்டது. அதனை ஆட்சேபித்தும் நீதிமன்றில் வழக்குப் பதிவாகி உள்ளது.

இவற்றைத் தொடர்ந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் உள்ள பிள்ளையார் கோயிலை – அறுபது வருடங்கள் பழைமை வாய்ந்த பிள்ளையார் கோயிலை– முற்றாக அகற்றுவதற்கு நகர அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆகப் பிந்தி, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களை விஷமிகள் தகர்த்து உடைத்துள்ளார்கள். இந்து ஆலயங்களை அகற்றி அழித்து, அவற்றுக்குப் பதிலாக பௌத்த வணக்க ஸ்தலங்களை நிறுவுவதை பிரதான இலக்காகக் கொண்டு வடக்கு, கிழக்கில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்படும் என்பதற்கான கட்டியம் கூறலாகவே, வடக்குக் கிழக்கில் மேற்சொன்ன கைங்கரியங்கள் தடுப்பாரின்றி ஒப்பேறி வருகின்றன.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தில் மத சுதந்திரத்துக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும் தாம் விரும்பிய மதத்தைப் பின்பற்றவும் உரிமைகள் உண்டு என்று அறிவுறுத்துகிறது அது.

ஆனால் செயலளவில் பெரும்பான்மையினரின் வழிபாட்டுத் தலங்களை கட்டுவதற்கு அந்தச் சுதந்திரத்தை பறிக்க முடியும் என்பது எழுதப்படாத விதியாக ஒப்பேறி வருகிறது.

இந்த இலட்சணத்தில், எத்தனை நல்லிணக்க ஆணைக்குழுக்கள் அமைத்தாலும், பெரும்பான்மையினருக்கு அதீத உரிமைகளும் சிறுபான்மையினருக்கு அநியாயம் விளைக்கும் அதிகாரங்களும் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். அதுவே நிரந்தர செயற்பாட்டு விதி என்ற நிலைக்கு வித்திடப்படுகிறது. தட்டிக் கேட்க எவருமில்லையென்ற எக்காளத்துடன்....?!

# வாக்காளர் விண்ணப்பங்களை விநியோகிப்பதில் கிராம அலுவலர் சிலர் தொடர்ந்து அசமந்தம்

## சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 4



2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்பு நடவடிக்கையின் போது விண்ணப்பப் படிவங்களை கிராம சேவையாளர்கள் வீடு வீடாக விநியோகிக்க வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் அறிவுறுத்தியும், யாழ்.மாவட்டத்தில் பல கிராம சேவையாளர்கள் அந்த நடவடிக்கையைப் பின்பற்றவில்லை.

2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. கடந்த மேத மாதம் 15 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையில் விண்ணப்பப் படிவம் கிராம சேவையாளர்களால் விநியோகிக்கப் பட்டது.

விண்ணப்பப் படிவங்களை கிராம சேவையாளர்கள் வீடு வீடாகச் சென்று விநியோகிக் வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந் தது.

தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மேற்படி அறிவுறுத்தல்களை ஒரு சில கிராம சேவையாளர்களே உரிய முறையில் நடைமுறைப்படுத்தியுள்ளனர். பெரும்பாலான கிராம சேவகர்கள் தமது அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களிடம் அந்தப் பகுதியிலுள்ளவர்களின் விண்ணப்பப் படிவங்களை கொடுத்து உரிமையாளர்களிடம் கொடுக்குமாறு தெரிவித்துள்ளனர்.

வீடுவீடாக விண்ணப்பப் படிவம் விநியோகிக்காத கிராம சேவையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்தும் கிராம சேவையாளர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகத் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

# நிரந்தர செயலாளர்கள் இன்மையால் பிரதேச சபைகள் பெரும் சிக்கலில்

தென்மராட்சி, ஜூன் 4

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில உள்ளூராட்சி சபைகுக்கு இன்னமும் நிரந்தர செயலாளர் நியமிக்கப்படாததால் ஓய்வு பெற்றவர்களின் விண்ணப்பங்கள் உட்பட்ட பல்வேறு ஆவணங்கள் உரிய இடங்களுக்கு அனுப்ப முடியாத நிலையில் உள்ள தாக ஓய்வு பெற விண்ணப்பித்தவர்கள் தெரிவித்தனர்.

> “ நிரந்தர செயலாளர் இல்லாததால் விண்ணப்பங்களை ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பப்படாமையால் மாதக் கணக்கில் வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

சபைகளில் கடமையாற்றி ஓய்வுபெறவுள்ள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை வழங்கிய போதிலும் நிரந்தர செயலாளர் இல்லாததால் அவற்றினை ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பப்பாமல் மாதக் கணக்கில் வைத் திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பாக உரிய திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது பெயருடன் கூடிய இறப்பர் முத்திரை வைத்துள்ள செயலாளர் பரிந்துரை செய்த பின்னரே ஓய்வூதிய விண்ணப்பங்கள் ஓய்வூதி யத் திணைக்களத்துக்கு அனுப்ப முடியுமெனவும், சில உள்ளூராட்சி சபைகளுக்கு செயலாளர் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளதால் அலுவலகம் தொடர்பான முக்கிய ஆவணங்கள் செயலாளரின் கையொப்பத்துக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் இடமாற்றம் இல்லாது அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்வது அவசியமான ஒன்றாகும். (த-9)

## நெடுந்தீவு ம.விக்கு விளையாட்டரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன் 4

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் விளையாட்டரங்கு அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நெடுந்தீவு கடற்படையினரால் கடந்த வியாழக்கிழமை நடத்தப் பட்டது. இந்த விளையாட்டரங்குக்கு என ஆளுநர் 10 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். (த-7)

## மீண்டும் செயற்படும் சனசமூக நிலையம்

வடமராட்சி, ஜூன் 4

நீண்ட காலமாக இயங்காதிருந்த வதிரிகலா நிலைய சனசமூக நிலையம் தற்போது மீண்டும் இயங்கி வருகின்றது. இந்தச் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் சிலர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து நிலையம் புனரமைக்கப்பட்டு, மின் இணைப்புச் செய்யப்பட்டு தினமும் காலை முதல் இரவு வரை இயங்கி வருகின்றது. வாசகர்கள் படிப்பதற்கு தினமும் தினப் பத்திரிகைகள் போடப்படுகின்றன. (த-8)

# தமிழ்-முஸ்லிம் கட்சிகள் பேசி இணக்கத்துக்கு வரவும்

## யாழ்.மாவட்ட முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

காணி,பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக தமிழ் கட்சிகள் முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு மூலம் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று யாழ்.மாவட்ட முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

13ஆவது அரசியல் சட்டத்தில் உள்ள மாகாண சபைக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்க வேண்டுமென ஹெல உறுமயக் கட்சியும், சுதந்திர முன்னணிக் கட்சியும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

அதனால் இந்த அதிகாரங்களை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வரப்படுவதாக ஹெல உறுமயக் கட்சி அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக முஸ்லிம் கட்சிகளுக்கிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. எனவே இது தொடர்பாக தமிழ் கட்சிகள் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து இணக்கப்பாடுகளைக் காண வேண்டும் என அமைச்சின் செயலாளர் எம்.எம்.சபூர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13 ஆவது அரசியல் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் ஏற்கனவே பறிக்கப் பட்டு விட்டன. எஞ்சியுள்ள அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டால், மாகாண சபை முறைமை தேவை இல்லாத ஒன்றாகிவிடும்.

எனவே, இந்த விடயம் தொடர்பாக தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து மாகாண சபை அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர வேண்டும்.

சமகால நிகழ்வுகளில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு அரசும் கடும்போக்கு பௌத்த அமைப்புகளும் புதிதாக நெருக்கடிகளை அதிகரித்துக் கொண்டு போகும் போக்கைக் காணக்கூடிய தாக உள்ளன. இந்த நிலைமையை முறியடிப்பதற்கு தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை மிகத் தேவையாக உள் ளது-என்றார். (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க- திருமலை நகரசபை உடன்பாடு இரத்து

# கிழக்கு ஆளுநர் தலையீட்டால் தமிழ்க் கூட்டமைப்பு அதிருப்தி

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்பாட்டை இடைநிறுத்த திருகோணமலை நகரசபை முடிவுசெய்த விடயத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் தலையீடு இடம் பெற்றிருப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் அதிருப்தியடைந்துள்ளதுடன் இதுகுறித்து நாடாளுமன்றத்திலும் பிரச்சினையை எழுப்பத் தீர்மானித்துள்ளது.

திருகோணமலையில் அமெரிக்கத் தகவல் நிலையத்தை அமைப்பது தொடர்பில் முன்னதாகக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் திருமலை நகரசபையுடன் புரிந்துணர்வு உடன்பாடொன்றைச் செய்திருந்தது.

கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் அமெரிக்க கோணர் என்ற பெயரில் அமெரிக்கத் தகவல் நிலையம் ஏற்கனவே அமைந்திருந்த காரணத்தினால் திருகோணமலை நகரசபை அமெரிக்கத் தூதரகத்துடன் ஒப்பந்தத்தைச் செய்திருந்தது.

எவ்வாறாயினும் உரிய அனுமதி பெறப்படாத காரணத்தினால் இந்த உடன்படிக்கை இடைநிறுத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. எனினும், கிழக்கு மாகாண ஆளுநரால் திருகோணமலை நகர மேயருக்கு வழங்கப்பட்ட அழுத்தத்தின் எதிரொலியாகவே இந்த ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டதாகத் தற்போது செய்திகள் வெளி வந்துள்ளன.

திருகோணமலை நகரசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் இருப்பதால் ஆளுநரின் இந்தத் தலையீடு குறித்து கடும் அதிருப்தியடைந்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, சிவில் நிர்வாக செயற்பாடுகளில் ஆளுநரின் தலையீடு தொடர்பில் நாடாளுமன்றத் தில் குரல் எழுப்பவும் தீர்மானித்துள்ளது.

அமெரிக்கத் தகவல் நிலையத்தின் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை திருகோணமலை மாவட்டத்தின் கல்வி, கலாசார செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை மட்டுமே வழங்கவிருந்த சூழ்நிலையில் ஆளுநரின் செயற்பாடுகள் அவற்றைத் தடுப்பது அநீதியானதெனக் கூட்டமைப்பு கருதுவதாக அறிய முடிகின்றது.

## போர் மூலமான வெற்றி நிரந்தரமானது அல்ல

### அமைச்சர் றெஜினோல்ட் கூரே



கொழும்பு,ஜூன் 04

போரின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றியானது நிரந்தரமானது அல்ல. அது ஒரு தற்காலிக ஒன்றிணைவே இவ்வாறு முன்னர் பல தடவைகள் தற்காலிகமாக நாடு ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சகலரையும் சமமாக நடத்தப்படும் நாளிலேயே எம்மால் உறுதியான ஒன்றிணைவை ஏற்படுத்த முடியும் என்று சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு அமைச்சர் றெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

ஒன்றுபட்ட சகோதரத்துவத்துடன் கூடிய இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் அகலவத்தையில் இடம் பெற்ற மூன்று நாள் பயிற்சிப் பட்டறை இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

நாட்டை ஒரு கொடியின் கீழ் ஒரு சின்னத்தின் கீழ் கொண்டு வருவது மாத்திரம் ஐக்கியமல்ல. போரின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட இந்த வெற்றி நிரந்தரமானதல்ல. எத்தனை தடவைகள் இலங்கை ஒன்றிணைப்பட்டுள்ளது. அவை எதுவுமே நிரந்தரமானவை அல்ல.

இலங்கையில் சகலரும் சமமாக நடத்தப்படும் நாளிலேயே எம்மால் ஐக்கியத்தை உருவாக்க முடியும்- என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தேசிய மொழிகள் ஒருமைப்பாடு அமைச்சர் வரசுதேவ நாணயக்கார:

நாம் இலங்கையர் என்ற இனத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதனை நாம் செய்ய முடியாதுள்ளோம். இந்தச் சவால் எதிர்காலச் சந்ததியினரிடம் உள்ளது- என்றார். (த-5)

## மாணவர்களுக்கு கண் பரிசோதித்து இலவசமாக மூக்கு கண்ணாடிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 04

கண்ணில் குறைபாடு உள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கண் வைத்திய நிபுணர்களால் வைத்திய பரிசோதனை மேற்கொண்டு கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306- பி -1 இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அந்த அடிப்படையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்கும்- நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்களுக்கும் பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கும் கண் வைத்திய நிபுணர்களால் வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் மாவட்டம் 306 பி- 1 இன் ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா தம்பதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஔ-400)

கண்ணீருடன்...



திருமறைக் கலாமன்றத்தின்
ஸ்தாபக உறுப்பினர்களுள்
ஒருவரும் ஈழத்தின் புகழ்பூத்த
சிற்பக் கலைஞரும் சமூக
சேவகனுமாகிய கலாகீர்த்தி
ஏ.வி. ஆனந்தன்
நேற்று 03.06.2013 மறைந்தார்
என்ற செய்தியறிந்து
ஆறாத்துயரடைந்துள்ளோம். அன்னாருக்கு
நெஞ்சம் நெகிழும் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர், அங்கத்தவர்கள்,
திருமறைக்கலாமன்றம்.

மரண அறிவித்தல்கள்

லயன் ஏ.வி. ஆனந்தன்



துர்க்காபுரம் மல்லாகம், சிற்பச் செல்வன் கலாபூஷணம் லயன் ஏ.வீ. ஆனந்தன் நேற்று (03.06.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்லாகம்
0776082335 (37981)

தகவல்:
குடும்பத்தினர்.

கனகசிவநாயகம் பரமேஸ்வரி



தண்ணீர்த்தாழ்வு, கட்டுவன் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கலட்டிலேன் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசிவநாயகம் பரமேஸ்வரி நேற்று (03.06.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் கனகசிவநாயகத்தின் அன்பு மனைவியும் பவிதா (பிரான்ஸ்), பாமினி (Dr.Thellippalai CMO), தாரணி (லண்டன்), கஜேந்திரன் (கஜன், ஆசிரியர் பௌதீகவியல்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவபாதசுந்தரம், சிவபாக்கியம், சிவமணி, சிவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ப.கேசவன் (பிரான்ஸ்), இ.வசந்தராஜ் (இணுவில்), சி.சியாம்சுதன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் கேதாரன், தனாதனன், சியாரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி லேன், கோண்டாவில். (37977)(7-14-16

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆசிரியையின் கைப்பை அவர் முன்பாகவே கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன் 04

வங்கிக்குச் சென்று திரும்பிய ஆசிரியை தனது கைப்பையைச் சைக்கிள் கூடையினுள் வைத்த வண்ணம் பயணித்துள்ளார். இதனை அவதானித்து வங்கியிலிருந்து ஆசிரியையை பின்தொடர்ந்து வந்த ஒருவன் கைப்பையை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றான்.

பெறுமதிமிக்க கைத்தொலைபேசி, பணம், அடையாள அட்டைகள், பாடசாலை ஆவணங்கள் அடங்கிய கைப்பையே அபகரிக்கப்பட்டது.

உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள அவரது வீட்டின் முன்னால் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த ஆசிரியை வங்கிக்குச் சென்று அங்கிருந்து புறப்படும் பொழுது குறித்த மோட்டார் சைக்கிளில் வந்தவன் வங்கியின் முன்பாக நின்றதைக் குறித்த ஆசிரியை அவதானித்துள்ளார். எனினும் அவர், அவனை வங்கிக்குத் தேவை நிமித்தம் வந்துள்ளான் என்று நினைத்து கவனத்தில் எடுக்காமல் சென்றுள்ளார்.

ஆசிரியை தனது கைப்பையைச் சைக்கிள் கூடையினுள் வைத்து விட்டுச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். இதன் போதே அவரை பின் தொடர்ந்த கொள்ளையன் கைப்பையைக் பறித்துக் கொண்டு தப்பிச் சென்று விட்டான்.

குறித்த ஆசிரியை முள்ளிவாய்க்காலில் தனது கணவனை இழந்து விட்டார். ஒரு பிள்ளையின் தாயான அவர் வன்னியில் பணிபுரிந்து சில வாரங்களுக்கு முன்னரே உடுவிலுக்கு வந்து [illegible] வசிக்கிறார் எனக் கூறப்பட்டது. (த-4)

02ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20
03
1930

மறைவு
28
05
2011

அமரர் திருமதி
செல்லையா
சிவபாக்கியம்
திதி: ஏகாதசி
(04.06.2013)
செவ்வாய்க்கிழமை

ஆண்டுகள் இரண்டானாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை
விட்டகலாத தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (37974

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்



செல்லத்தம்பி தர்மலிங்கம்

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தர்மலிங்கம் நேற்று முன்தினம் (01.06.2013) சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.06.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(குறிப்பு: நேற்றைய பத்திரிகையில் புதன்கிழமை இடம்பெறும் என்ற தகவல் தவிர்க்கமுடியாத காரணத்தால் மேற்குறித்த திகதியில் இடம்பெறும்.)

5 ஆம் வட்டாரம், மண்கும்பான் மேற்கு. (99582)

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

அரியகுட்டி சிவராசா (செல்வராசா)



திருநெல்வேலி வளாக ஒழுங்கையைப் வசிப்பிடமாகக் கொண்ட அரியகுட்டி சிவராசா கடந்த 01.06.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2013) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளாக ஒழுங்கை (நல்லாயன் சே அருகில்) திருநெல்வேலி. (37986)

தகவல்:
சி.பிரசன்னா (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிகளையும் இளைஞர்களையும் பகடைக்காய்களாக்கி யாழில் அரசியல்

## சாடுகிறார் அங்கஜன் இராமநாதன்

யாழ்ப்பாணம், ஜுன் 4

இளைஞர்களையும், வேலையற்ற பட்டதாரிகளையும் பகடைக்காய்களாக்கி அரசியல் ஆதாயம் பெற்றுவிட்டு அவர்களை நடுத்தெருவில் விடும் அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரை வேலையற்ற பட்டதாரிகள் சங்கங்கள் பல அரசியல் கட்சிகள் சிலவற்றைச் சார்ந்து இயங்கிவந்தன. சுயநலனில்லாது இந்தச் சங்கத்தை உருவாக்கிப் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளேன்.

இளைஞர்களினதும் வேலையற்ற பட்டதாரிகளினதும் சேவைகளைத் தகுந்த முறையில் நாட்டுக்குப் பயன்படுத்தும் பல்வேறு திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இன்று எமக்குத் தேவையானது நிம்மதியான வாழ்வும், நாம் உயிருக்கு உயிராக நேசிக்கும் கல்வியும், உத்தியோகமும், அபிவிருத்தியும் அதன் மூலமாக எமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே.

ஒருவருடைய சந்தோஷத்தை எழுதும் பென்சில் போலல்லாது குறைந்தது ஒவ்வொருவருடைய துன்பங்களையும் நீக்கக்கூட்டிய அழி இறப்பர்போல் என்றாலும்இருக்க வேண்டுமென்பதே எமது நோக்கம்- என்றார். (த-4)



# அளவுக்கு அதிகமான ஒலியை எழுப்பும் வாகனங்களால் சிரமம்

தென்மராட்சி, ஜூன் 4

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வாகனங்கள் அளவுக்கு அதிகமான ஒலி எழுப்புவதால் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பலதரப்பினர் தெரிவித்தனர்.

காட்டுப் பாதையில் வீதியின் குறுக்கே நிற்கும் மிருகங்களைத் துரத்த பயன்படுத்தும் அளவுக்கு அதிகமான ஒலியை நகர்ப் பகுதியில் எழுப்புவதால் வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.



> "ஒலியை நகர்ப் பகுதியில் எழுப்புவதால் வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வாகனங்கள் அளவுக்கு அதிகமான ஒலி எழுப்புவதைத் தடைசெய்ய உரிய அதிகாரி கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைத்துத் தரப்பினராலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் மிருசுவில் பகுதியில் வீதி வளைவில் இவ்வாறான அளவுக்கு அதிகமான ஒலி எழுப்பப்பட்டதால் எருது ஏற்றிவந்த வண்டிலின் மாடுகள், மிரண்டு ஓடியதில் வண்டிலில் அமர்ந்திருந்தவர் முட்கம்பி வேலிக்குள் இழுபட்டு காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

# பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம் செயலிழந்ததால் தொழிலாளர் பாதிப்பு

வடமராட்சி, ஜூன் 4

வடமராட்சி கிழக்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் செயலிழந்துள்ளதால், சங்க அங்கத்தவர்களான தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

செயல் இழந்துள்ள இந்தச் சங்கத்தை சரியான முறையில் இயங்க வைக்க பிராந்திய கூட்டுறவுத் திணைக்களமும், கள் விற்பனையைக் கண்காணிக்கும் மது வரித் திணைக்களமும் எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

அந்தச் சங்கத்தின் இயக்குநர் சபைத் தலைவர் பதவி விலகியதைத் தொடர்ந்து உப தலைவர் தலைமையில் அது இயங்க முற்பட்ட போது ஏனைய உறுப்பினர்களினதும் அங்கத்தவர்களினதும் ஒத்துழைப்பு இன்மையால் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

14 கிளைகளைக் கொண்ட இந்தச் சங்கத்தின் 8 கிளைகளே கள்ளை வாங்கி விற்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. 6 கிளைச்சங்கங்கள் முற்றாக இயங்கவில்லை. இந்த நிலையில் சங்கத்தின் செயற்பாடுகள் செயல் இழந்ததால் கிளைச் சங்கங்களும் செயற்பாடுகளை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதன் காரணமாக தொழிலாளர்கள் அன்றாடம் சீவும் கள்ளை வீடுகளில் வைத்து விற்பனை செய்து வருவதாகக் கூறப்படுகின்றது. இது குறித்து மதுவரித் திணைக்களம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. வீடுகளில் வைத்து கள்ளை விற்பனை செய்வதால் விரும்பத்தகாத சீர்கேடுகளும் ஏற்படும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சீவல் தொழிலாளர்களிடமிருந்து நாளாந்தம் கள்ளைக் கொள்வனவு செய்து கிளைச் சங்கத் தவறணைகள் ஊடாக விற்பனை செய்வதற்கு சங்கத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எனவே தற்காலிகமாக நியமன இயக்குநர் சபை ஒன்றையாவது அமைத்து இந்தச் சங்கத்தை இயங்க வைக்க பிராந்திய கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-8)

# தூக்கில் தொங்கியவர் சடலமாக மீட்பு

தென்மராட்சி, ஜூன் 4

இரவு உணவு அருந்திவிட்டு படுக்கைக்குச் சென்றவர் காலையில் வீட்டின் உதரத்தில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை வரணி வடக்கில் இடம்பெற்றது.அதே இடத்தைச் சேர்ந்த முருகேசு இரத்தினம் (வயது-59) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

கொடிகாமம் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் றிஸ்வி, கான்ஸ்டபிள் செந்தூரன் ஆகியோரே விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர்.


நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டுச் சடலத்தை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்று பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-9)

# உணவகங்கள் மீது திடீர் சோதனை

வடமராட்சி, ஜூன் 4

மந்திகைப் பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பரிசோதகர்கள் குழு திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டது.

உணவகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார நடவடிக்கைகள், உணவுகளைக் கையாளுதல் ஆகியவற்றை நேரில் கண்காணித்ததுடன் ஏனைய வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவு மற்றும் பொருள்கள் உள்ளனவா எனச் சோதனைகளையும் நடத்தினார்கள்.




பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவினரே இந்தச் சோதனைகளை நடத்தினர். (த-8)

# சாராப்பிட்டி பகுதியில் கிணறுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்.ஜுன் 4

நெடுந்தீவு மேற்கு சாராப்பிட்டி பகுதியில் உள்ள குடிதண்ணீர் கிணறுகளை நீண்ட காலத்தின் பின் புனரமைத்துச் சுத்தம் செய்யும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பகுதியில் சுமார் 15க்கும் அதிகமான குடிதண்ணீர்க் கிணறுகள் பயன்படுத்தப்படாத நிலையில் இருந்துள்ளன.



நெடுந்தீவுக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தீவின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள குடிதண்ணீர் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளத் தீர்மானித்திருந்தது. குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் ஒன்றாக இப்போது சாராப்பிட்டியில் உள்ள கிணறுகளைப் புனரமைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. (த-7)

# உலக சுற்றாடல் தினம் நாளை யாழ். பல்கலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 4

'சேவாலங்கா' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞானப் பிரிவு -ஏ நடத்தும் உலக சுற்றாடல் தினம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ''யோசி, சாப்பிடு, உணவைக் குறை'' என்னும் தலைப்பில் மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையின் கோட்டமட்ட அதிகாரி எம்.ஜீவபாபு, ''உணவு உற்பத்தியை அதிகரித்தல்'' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மிருகவியல் திணைக்களத் தலைவர் வைத்தியர் திருமதி ஆர். ஞானேஸ்வரன், ''உணவில் காபோவைதரேற்றின் அளவு குறைத்தல்'' எனும் தலைப்பில் 'சேவாலங்கா' அமைப்பின் வளங்கள் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் அஜந்தா பாலிகாவதன ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மர நடுகை இடம்பெறும். (த-4)

# சுயதொழில் உதவி கொடுப்பனவைப் பெறலாம்

தென்மராட்சி, ஜூன் 4

தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்த இருவருக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கனகரத்தினம் ரஞ்சினி-பழைய வாய்க்கால் மிருசுவில் (ஆடு வளர்ப்பு), கனகலிங்கம் புஷ்பவதி-வெள்ளாம் போக்கட்டி கொடிகாமம் (கோழி வளர்ப்பு) ஆகியோருக்கான கொடுப்பனவுகளே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ-9)

# காணி பகிர்ந்தளிப்பில் தொடர்ந்து அசமந்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வலி.மேற்கு பிரதேச செயலக பிரதேச செயலர், வடக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளர் சி.ரங்கராஜன், வடமாகாண காணி ஆணையாளர் ஆகியோர் அராலி-சங்கானை காணிகளை பகிர்ந்து வழங்குமாறு இரு தடவைகள் வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகத்தைக் கோரிவிட்டனர்.

எனினும் வலி.மேற்கு பிரதேச சபை இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என சங்கானை அம்பாள் சனசமூக நிலைய நிர்வாகிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

சங்கானை-அராலி காணி பகிர்வு தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக சங்கானையிலும், அராலியிலும் வலி.மேற்கு பிரதேச சபையின் காணிகளில் இருந்து வருகின்றோம்.

எனினும் எமக்கு காணி கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டோம். சபையினர் மாதாந்தக் கூட்டத்தில் கதைப்பதும், பின்னர் பேசாமல் இருப்பதும் வழமையாகிவிட்டது.

வடமாகாணத்தின் முன்னாள் பிரதம செயலாளர், வலி. மேற்கு பிரதேச செயலர், வடமாகாண காணி ஆணையாளர் ஆகியோர் இது குறித்து வலி.மேற்கு பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.


எனினும் சபையின் அலட்சியப் போக்குக் காரணமாக இதுவரை எமக்குக் காணி உறுதிகள் வழங்கப்பட வில்லை.



இதனால் சோர்வடைந்துள்ளோம் என்று கூறினார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90 வயதாகிவிட்டது கலைஞருக்கு....



தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது 90 வது பிறந்த தினமான நேற்று சென்னை கடற்கரையில் உள்ள அண்ணா சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் பெரியார் திடலில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். அப்போது, கருணாநிதியின் 90 ஆவது பிறந்தநாள் மலரை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட கருணாநிதி பெற்றுக் கொண்டார்.

# அமைச்சரவை மாற்றம்

## ஜூன் 15 இல்

டில்லி, ஜூன்.4

மத்திய அமைச்சரவை எதிர்வரும் 15 ஆம் திகதி மாற்றியமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

மத்திய அமைச்சரவை மாற்றியமைக்கப்படலாம் என்று பிரதமர் மன்மோகன் சிங் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இந்தநிலையில் இது குறித்து காங்கிரஸ் தலைவர் ஒருவர் தெரிவித்ததாவது:-

உணவு பாதுகாப்பு பிரேரணை, தெலுங்கானா விவகாரம் குறித்து கட்சி கவனம் செலுத்தி வருகிறது. எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு மத்திய அமைச்சரவை மாற்றியமைக்கப்படும். அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் லோக்சபா தேர்தலுக்கு முன்பு நடத்தப்படும்



கடைசி அமைச்சரவை மாற்றம் இதுவாகத் தான் இருக்கும். சில அமைச்சர்களுக்கு கட்சிப் பணி அளிக்கப்படும். இது குறித்து பிரதமரும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் ஆலோசனை நடத்தினர் என்றார். கடந்த சில மாதங்களாக காங்கிரஸுக்கு பிரச்சினையாக இருந்து வருகிறது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை தி.மு.க. வாபஸ் பெற்றது. அதையடுத்து அக்கட்சி அமைச்சர்கள் 5 பேர் தங்கள் பதவியிலிருந்து விலகினர். மத்திய ரயில்வே அமைச்சர் பன்சால் லஞ்ச விவகாரம் தொடர்பாக தனது பதவியை கடந்த மாதம் பதவியிலிருந்து நீங்கினார். நிலக்கரி ஊழல் விவகாரம் தொடர்பாக அஷ்வனி குமார் சட்ட அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதையடுத்து ரயில்வேத் துறை சாலை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் சி.பி. ஜோஷியிடமும், சட்டத்துறை தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் கபில் சிபலிடமும் ஒப்படைக்கப்பட்டன. (வ)

# எல்லையில் தாக்குதல்

## மூன்று தீவிரவாதிகள் சாவு

காஷ்மீர் எல்லையில் சனிக்கிழமை இரவு தீவிரவாதிகள் சிலர் ஊடுருவ முயன்றனர். அவர்களை நோக்கி இராணுவத்தினர் சுட்டதில் 3 பேர் உயிரிழந்தனர். மற்றவர்கள் தப்பியோடி விட்டனர்.

வடக்கு காஷ்மீர், குப் வாரா மாவட்டத்தில் உள்ள நெகாம் எல்லைப் பகுதியில் எல்லை தாண்டி சிலர் ஊடு ருவ முயன்றனர். அப்போது ஊடுருவல்காரர்களுக்கும், இராணுவ வீரர்களுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நிகழ்ந்தது. இதில், ஊடுருவல்காரர்கள் மூன்று பேர் உயிரிழந்தனர். 4 பேர் தப்பியோடிவிட்டனர் என்று இராணுவ செய்தித் தொடர்பாளர் நரேஷ் விஜ் தெரிவித்தார்.

தீவிரவாதிகள் எல்லையைக் கடந்து செல்வதற்கு வசதியாக இந்திய இராணுவ வீரர்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் இந்திய நிலைகள் மீது துப்பாக்கியால் சுட்டனர். இதில் இந்திய இராணு வத்தைச் சேர்ந்த பிரிகேடியர் ஒருவரும், இரு வீரர்களும் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே ஆர்னியா பகுதியில் எல்லை தாண்டி வந்த பாகிஸ்தானின் சியோல்கோட் பகுதியைச் சேர்ந்த ஆராம் கானை பாதுகாப்புப் படையினர் சனிக்கிழமை கைது செய்தனர். விசாரணையில் அவர் தவறுதலாக எல்லை தாண்டி வந்ததாகத் தெரியவந்தது. இதையடுத்து அவரை பாகிஸ்தானுக்கு இந்திய இராணுவத்தினர் அனுப்பி வைத்தனர்.(வ)

# கேட்கும் போதெல்லாம் தண்ணீர் தர முடியாது

## கர்நாடக முதல்வர் தெரிவிப்பு

பெங்களூர், ஜூன்..4

தமிழ்நாடு கேட்கும் போதெல்லாம் காவிரி நீரைத் திறந்துவிட முடியாது என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் கர்நாடக மாவட்டத்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் சிந்தனூரில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு கூறினார்.

தமிழ்நாட்டுக்கு காவிரி நீரை திறந்துவிட மாட்டோம் என்று நாம் ஒருபோதும் கூறியதில்லை. கர்நாடகத்தில் தண்ணீர் பற்றாக்குறையாக இருந்த போது கூட தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட்டுள்ளோம். எங்களுக்கே தண்ணீர் இல்லாதபோது கேட்டால் எங்களால் திறந்துவிட முடியாது.

காவிரி பகுதியில் கடந்த 2 ஆண்டுகளாக வறட்சி நிலவுவதால் அங்குள்ள நான்கு நீர்த்தேக்கங்களில் தண்ணீர் குறைந்தபட்ச அளவை விட



குறைவாக உள்ளது. அதனால் தற்போதைக்கு தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்துவிடும் பேச்சுக்கே இடமில்லை. கர்நாடக மக்களின் குடிதண்ணீர் தேவை மற்றும் விவசாயத்துக்கே தண்ணீர் போதிய அளவு இல்லை. தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு நல்ல பயனைத் தரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதனால் வறட்சி நிலை இன்னும் சில வாரங்களில் மாறும் என்று எதிர்பார்க்கிறோம். கடந்த 2 தினங்களாக மாநிலத்தில் நல்ல மழை பெய்து வருகிறது. தமிழ்நாடு கேட்கும் போதெல்லாம் தண்ணீர் திறந்துவிட முடியாது - என்றார். (வ)

# இந்தியா கோரிக்கை

## தீவிரவாதி ஹெட்லியை அமெரிக்காவை ஒப்படைக்குமாறு

டில்லி, ஜூன். 4

மும்பை தாக்குதல் வழக்கு குறித்து விசாரணை நடத்த லக்ஷ்கர் இ தொய்பா தீவிராதி டேவிட் ஹெட்லி மற்றும் அவரது நண்பர் தஹாவ்வுர் ஹுஸைன் ராணாவை ஓர் ஆண்டு காலம் தங்களிடம் ஒப்ப டைக்குமாறு இந்தியா அமெரிக்காவை கேட்டுக் கொண்டுள்ளது.

மும்பை தாக்குதல்களில் தொடர்புடைய பாகிஸ்தானிய அமெரிக்கரான லக்ஷ்கர் இ தொய்பா தீவிரவாதி டேவிட் ஹெட்லியை நாடு கடத்த அமெரிக்கா மறுத்துவிட்டது. இதையடுத்து விசாரணைக்காக ஹெட்லியை ஓர் ஆண்டு காலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்குமாறு அமெரிக்காவிடம் மத்திய அரசு கேட்டுள்ளது.

இந்திய–அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு குறித்த பேச்சு வொஷிங் டனில் கடந்த மாதம் நடைபெற்றது. அப்போது தான் இந்தியா அமெரிக்கா



விடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்தியாவின் கோரிக்கையை பரிசீலிப்பதாக அமெரிக்கா உறுதியளித் துள்ளது என்று அந்தக் கூட் டத்தில் கலந்து கொண்ட மூத்த இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஹெட்லியின் நண்பனான ராணாவையும் அனுப்பி வைக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை பரிசீலிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

2008 மும்பை தாக்குதல்

> 2008 மும்பை தாக்குதல் குறித்து ஹெட்லியிடம் விசாரிக்க இந்தியாவுக்கு அமெரிக்க இரண்டாவது முறையாக அனுமதி அளிக்க வுள்ளது.

குறித்து ஹெட்லியிடம் விசாரிக்க இந்தியாவுக்கு அமெரிக்க இரண்டாவது முறையாக அனுமதி அளிக்க வுள்ளது. ஆனால் டென்மார்க் தீவிரவாதத் தாக்குதலுக்கு திட்டமிட்டது குறித்து அமெரிக்க நீதிமன்றத்தால் தண்டனை அளிக்கப்பட்ட ராணாவை விசாரிக்க இது வரை இந்தியாவுக்கு அனுமதி அளிக்கப்பட வில்லை. ராணாவிடம் விசாரித்தால் பல முக்கிய தகவல்கள் வெளிவரும் என்று இந்திய விசாரணையாளர்கள் கருதுகின்றனர். (வ)

## நக்சல் தாக்குதலில் காங்.தலைவர்கள் நால்வருக்கு தொடர்பு

**என்.ஐ.ஏ. தகவல்**

காங்கிரஸ் தலைவர்கள் மீது நடத்தப்பட்ட மிகக் கொடூரமான தாக்குதலில், 4 காங்கிரஸ் தலைவர்களுக்கு தொடர்பிருப்பதாக தேசிய புலனாய்வு அமைப்பின் (என்.ஐ.ஏ) விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சதீஸ்கர் மாநிலத்தில் கடந்த 25 ஆம் திகதி நடத்தப்பட்ட நக்சல் தாக்கு தலில் 28 பேர் உயிழந்தனர். அன்றைய தினம், நான்கு முக்கிய காங்கிரஸ் தலை வர்கள், நக்சலைட்டு அமைப்புடன் தொடர்ந்து தொடர்பில் இருந்துள்ளனர். அவர்கள்தான், காங்கிரஸ் யாத்திரை பாதை மாறி வேறு



வழியில் செல்வது குறித்து நக்சலைட்டுகளுக்கு தகவல் அளித்துள்ளனர்.

காங்கிரஸ் தலைவர்களின் தொலை பேசி அழைப்புகளை விசா ரித்ததில் இந்த தகவல் தேசிய புலனாய்வு அமைப்புக் குத் தெரிய வந்துள்ளது.

# நீதிபதிகள் நியமனம் தொடர்பில் மாற்றம்

## சட்ட அமைச்சர் கபில் சிபல் தகவல்

டில்லி, ஜூன்.4

உச்ச, உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமனம் தொடர்பில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளதாக சட்ட அமைச்சர் கபில் சிபல் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியின்போது தெரிவித்ததாவது:-

உச்ச, உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான 5 நீதிபதிகள் குழு பரிந்துரை செய்து, ஜனாதிபதி நியமிக்கும் முறை தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த முறையில் மாற்றம் [illegible] நீதிபதிகளை நியமனம் செய்யும் தற்போதைய முறை எங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் இல்லை என்று கருதுகிறோம். ஏன். நீதித் துறை எதிர்பார்ப்புக்கு ஏற்றபடிகூட இல்லை என்று சொல்லலாம்.



நீதிபதிகள் வெளிப்படையாக, பாரபட்சமற்ற வகையில் தேர்வு [illegible] இருக்க [illegible] அப்படிப்பட்ட சிறந்த நீதிபதிகளைத்தான் நீதித்துறை பெற்றிருக்க வேண்டும். நீதிபதிகள் நியமனம் விரிவான கலந்தாலோசனையை தொடர்ந்து அமைய வேண்டும். உயர் நீதித்துறையில் நீதிபதிகள் நியமனத்தில் நீதிபதிகளுக்குத் தான் தற்போது அதிக பங்கு உள்ளது.

அதே நேரத்தில் அரசுக்கும் சமபங்கு உள்ளது. உயர் நீதித்துறையில் நீதிபதி நியமனத்தில் நம் இருவருக்கும் சம பங்கு உள்ளதால், இரு தரப்பும் கலந்து ஆலோசனை செய்வது முக்கியம் ஆகும். அரசின் கருத்தும் இதில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்.

குறித்த நீதிபதிகளை நியமனம் செய்வதற்கு 6 உறுப்பினர்களைக் கொண்ட நியமன ஆணையகத்தை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆணையகத்துக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைவராக இருப்பார். மத்திய சட்ட அமைச்சர் அரசின் பிரதிநிதி என்ற வகையில் உறுப்பினராக செயற்படுவார்-என்றார்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கத்தை கெடுப்போம்


## அமெரிக்கர்களுக்கு அல்குவைதா எச்சரிக்கை

சனா, ஜூன் 4
''அமெரிக்காவைத் தாக்குவது ஒன்றும் கடினமான காரியமல்ல. தொடர்ச்சியான தாக்குதல்களால் அமெரிக்கர்களின் தூக்கத்தை நாங்கள் கெடுப்போம்'' என்று எச்சரிக்கை விடுத்துள்ளது ஏமனில் உள்ள அல் குவைதா அமைப்பு.
ஏமனில் இயங்கிவரும் அரேபிய அல்குவைதா அமைப்பின் தலைவர் காசிம் அல் ரிமியே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்த காணொலி ஒன்றை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
''அமெரிக்காவில் தாக்குதல் நடத்துவது ஒன்றும் எங்களுக்குக் கடினமான காரிமல்ல. அண்மையில் போஸ்டன் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட விஷம் தடவிய கடிதங்கள் என்பவற்றில் இருந்தே அமெரிக்காவின் பாதுகாப்பு குளறுபடிகளை விளங்கிக் கொள்ளலாம்.
அமெரிக்கர்களின் பாதுகாப்பு அவர்களின் கைகளில் இல்லை என்பதைப புரிந்து கொண்டிருப்பார்கள். போஸ்டனில் வெடிக்க வைக்கப்பட்டது போன்ற வெடிகுண்டுகளை யாரும் தயாரிக்கமுடியும். இந்த வகையான தாக்குதல்கள் இனிமேல் தொடரும். அமெரிக்கர்களின் தூக்கம் தொலையும்''- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



# பண்ணையில் தீ

## 55 பேர் உடல் கருகிச் சாவு



பீஜிங், ஜூன் 4
சீனாவின் வடகிழக்கு மாகாணமாக ஜிலினில் உள்ள பறவை வளர்ப்பு பண்ணை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 55 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.
தீ விபத்து ஏற்பட்டவேளை சுமார் 350க்கும் அதிகமான பணியாளர்கள் குறித்த பண்ணையில் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.
அதிகாலை வேளை பண்ணையின் கதவுகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. அதனால் விபத்து ஏற்பட்டவுடன் பணியாளர்களால் கட்டடத்தை விட்டு உடனடியாக வெளியேற முடியவில்லை என்று கூறப்பட்டது
தீயணைப்பு வீரர்கள் இதுவரை 55 பேரின் உடல்களை மீட்டுள்ளனர். பலத்த காயங்களுடன் ஏராளமானோர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
மின் ஒழுக்கினால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் கூறுகின்றனர். விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற)



# வெள்ள அபாயம்

## மத்திய ஐரோப்பாவில் மக்கள் இடம்பெயர்வு

பெர்லின், ஜூன் 4
தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் மத்திய ஐரோப்பாவில் உள்ள ஆறுகளின் நீர்மட்டம் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. அதையடுத்து அங்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
ஜேர்மனியின் தென் பிராந்தியம், செக் குடியரசு, ஒஸ்ரியா மற்றும் சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் வெள்ளம் காரணமாக மக்கள் வீடுகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.
செக் குடியரசின் தலைநகரில் கடந்த ஆண்டு ஏற்பட்டதைப் போன்று மிகப்பெரிய வெள்ள இடர் ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ள நிலை யில், நாடளாவிய ரீதியில் அவசர நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.
அதேபோன்று, ஜேர்மனியிலுள்ள இரண்டு மாநிலங்களிலும் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை, அவசர தேவைகளுக்கான உதவிக்கென ஜேர்மனி மற்றும் ஒஸ்ரியா ஆகிய நாடுகள் தமது இராணுவத்தைப் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளன.
இதுவரை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட இடர்களில் சிக்கி செக் குடியரசில் இருவரும், ஒஸ்ரியாவில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.(ற)



கனடாவின் கட்டுப்பாட்டில் உள்ள கும்டோர் தங்கச் சுரங்கத்தை கிர்கிஸ்தான் அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று கோரி பொதுமக்களால் நடத்தப்பட்ட போராட்டங்களில் வன்முறைகள் வெடித்துள்ளன. அதையடுத்து அங்கு அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு முயற்சிகளை எடுத்து வருகின்றது.

# சீனாவுக்கு கடும் எச்சரிக்கை

நியூயோர்க், ஜூன் 4
சீனாவில் இருந்து மேற்கொள்ளப்படும் இணையவழித் தாக்குதல்கள் குறித்து கடும் எச்சரிக்கையை விடுத்திருக்கிறார் அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் சக் ஹெகல்.
இருநாடுகளுக்கும் இடையே முன்னேறிவரும் இராணுவ உறவுகளில் இவ்வாறான செயற்பாடுகள் பெரும் தடங்கலை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இணைத் திருட்டு

அண்மையில் அமெரிக்காவின் இராணுவ ரகசியங்கள் அடங்கிய வலைத் தளத்தை முடக்கியுள்ள சீன மென்பொறியாளர்கள் 20க்கும் மேற்பட்ட போர் விமானங்களின் மாதிரி நகல்களைத் திருடியுள்ளனர். இந்த வலைத்தளம் அமெரிக்க உயர் இராணுவ அதிகாரிகள் மட்டுமே பார்வையிடக் கூடிய வகையில் அமைக்கப்பட்டு, அதில் முக்கிய தரவுகள் இணைக்கப்பட்டிருந்தன. அந்த வலைத் தளத்தில் தரவேற்றப்பட்டிருந்த அமெரிக்க போர் விமானங்களின் மாதிரி வடிவங்களே சீன மென்பொறியியலாளர்களால் திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.
இந்தத் தகவலை அமெரிக்க பத்திரிகையான 'அமெரிக்கா போஸ்ட்' வெளியிட்டுள்ளது.

### ஹெகல் கண்டனம்

''சீனாவில் இருந்து வரும் இணையவழி இடையூறுகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான இடையூறுகள் குறித்து நாம் கவலையடைகின்றோம். இவ்வாறான தலையீடுகளால் எமது செயற்பாடுகளையும் நாம் மாற்றவேண்டிய தேவையில் உள்ளோம்'' என்றும் தெரிவித்துள்ளார் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர்.

### ஆஸியும் அகப்பட்டது

ஆஸ்திரேலியாவின் உளவுப் படை அலுவலகம் மற்றும் அதிகாரிகள் குடியிருப்பின் மாதிரிகளும் சீன மென்பொறியியலாளர்களால் திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. உளவுத்துறையின் வலைத் தளமும் முடக்கப்பட்டு அதிலிருந்த பல தகவல்கள் திருடப்பட்டுள்ளன. இதற்கு ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் போப் கோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
எவ்வாறெனினும் இது போன்ற குற்றச்சாட்டுகளை சீன அரசு தொடர்ச்சியாக மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)



# 5 குழந்தைகள் ஒரே பிரசவத்தில்

பிரேக், ஜூன் 4
செகோஸ்லோவேக்கியா நாட்டை சேர்ந்த 23 வயது இளம் பெண்ணுக்கு ஒரே பிரசவத் தில் 5 குழந்தைகள் பிறந்துள்ளன.
செகோஸ்லோவேக்கியாவை சேர்ந்த அலெக்சாண்டிரா கினோவா (வயது 23) என்ற பெண் பிரசவத்திற்காக மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டார். 'சிசேரியன்' முறையில் நடைபெற்ற பிரசவத்தில் 4 ஆண் குழந்தைகளும், 1 பெண் குழந்தையும் பிறந்தன. இயற்கையான முறையில் கருத்தரித்த இந்த 5 குழந்தைகளும் 1.05 கிலோவுக்கும் 1.34 கிலோவுக்கும் இடைப்பட்ட எடையில் நல்ல நிலையில் உள்ளன என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.
கினோவாவுக்கு ஏற்கனவே ஓர் ஆண் குழந்தை உள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதுபோன்று ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள் பிறப்பது அரிது என்பதால் பிரசவத்தின்போது சுமார் 40 மருத்துவர்கள் இணைந்து பணியாற்றினர் என்று கூறுகின்றது ஆஸ்பத்திரி நிர்வாகம்.
1949ஆம் ஆண்டிற்குப் பின்னரான காலப்பகுதியில், அந்த நாட்டின் பதிவுகளில் ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள் பிறந்திருப்பது இதுவே முதல்முறையாகும். (ற)



# கடாபியின் சொத்துக்கள் தென்னாபிரிக்காவில்

நியூயோர்க், ஜூன் 4
லிபியாவின் முன்னாள் தலைவர் முஹம்மர் கடாபியுடன் தொடர்புடைய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துக்கள் தென்னாபிரிக்காவில் உள்ளன என்று கூறப்படுகிறது.
கடாபியின் பெருந்தொகையான வைரங்கள், தங்கம் மற்றும் பணம் ஆகியவற்றை மீளப் பெற்றுக்கொள்வதற்கான உதவிகளை வழங்குமாறு லிபியா தொடர்ச்சியாக உலகநாடுகளிடம் கோரிக்கை விடுத்து வருகின்றது.
இந்நிலையில், தென்னாபிரிக்காவிலுள்ள நான்கு வங்கிகள் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களிலேயே இந்த சொத்துக்கள் உள்ளன என்று லிபிய விசாரணையாளர்கள் கூறுகின்றனர்.
கடாபியிடம் சுமார் 80 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டுச் சொத்துக்கள் இருக்கக்கூடும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற லிபியப் புரட்சியின் போது சிறைபிடிக்கப்பட்ட முஹம்மர் கடாபி பின்னர் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)



துருக்கியில் பூங்கா ஒன்றை அகற்றுவதற்கு எதிராக ஆரம்பித்த போராட்டம் தற்போது அரச எதிர்ப்புப் போராட்டமாக மாறியுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். அவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு, தண்ணீர் பீரங்கிகள் என்பவற்றைக் கொண்டு தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர். இதிலிருந்து தப்புவதற்கான முன்னேற்பாடுகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஒருவர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு அழுத்தம்; உடன்படிக்கை இடைநிறுத்தம்

## திருமலை நகரசபை முடிவு


திருகோணமலை,ஜூன் 4
திருகோணமலையில் அமெரிக்க தகவல் நிலையத்தை அமைப்பது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்பாட்டை இடைநிறுத்த திருகோணமலை நகரசபை முடிவு செய்துள்ளது.
இந்தத் தகவலை திருகோணமலை நகரசபை செயலர் அப்துல் லதீப் முகமட் நபீல் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

> உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்கிறது வெளிவிவகார அமைச்சு

இந்த இணக்கப்பாடு ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு திருகோணமலை நகரசபைக்கு அறிவித்துள்ளதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
கிழக்கு மாகாணசபையும், இந்த உடன்பாட்டைத் தொடர்வதற்கு அனுமதி பெறப்பட வேண்டும் என்று தமக்குத் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.
திருகோணமலையில் அமெரிக்க தகவல் நிலையத்தை அமைப்பதற்கு, அமெரிக்கத் தூதரகம் தம்மிடம் அனுமதி கோரவில்லை என்று இலங்கை அரசு தெரிவித்திருந்தது.
இதேவேளை ஏற்கனவே கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் அமெரிக்கன் கோனர் திறக்கப்பட்டபோது கையாளப்பட்ட நடைமுறைகளையே இங்கும் பின்பற்றியதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நீண்ட காலத்துக்கு பின்னர் கிட்டங்கி பாலம் புனரமைப்பு

### நாளை மக்கள் பாவனைக்காகத் திறப்பு



கல்முனை,ஜூன் 4
கல்முனை நகரையும், நாவிதன்வெளி நிலப்பரப்பையும் இணைக்கும் கிட்டங்கி பாலம் நீண்ட காலத்துக்குப் பின்னர் புனரமைக்கப்பட்டு வருகின்றன.
அதன் நிர்மாண வேலைகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இந்தப் பாலம் பெரும்பாலும் நாளை புதன்கிழமை மக்களின் போக்குவரத்துக்காகக் திறந்துவிடப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இந்தப் பால நிர்மாண வேலைகள் முடிவுற்றதும் கல்முனை தொடக்கம் கிட்டங்கி வரையிலான பிரதான வீதியின் இரண்டாம் கட்ட விஸ்தரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று அந்த அதிகாரி குறிப்பிட்டார். (ச)

## சுற்றாடல் தினத்தையொட்டி மட்டக்களப்பில் சிரமதானம்

மட்டக்களப்பு, ஜூன் 4
உலக சுற்றாடல் தினத்தையொட்டி மட்டக்களப்பு சிறைச்சாலையின் ஏற்பாட்டில் சிரமதானப் பணி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
வைத்தியசாலை, சிறைச்சாலை, வைத்தியசாலை வீதி உட்பட பல இடங்களில் சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சர் கித்சிறி பண்டார தலைமையில் நடைபெற்ற



இந்தச் சிரமதானப் பணியில் மட்டக்களப்பு சிறைச்சாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகியன ஈடுபட்டன. இதன் போது மட்டக்களப்பு போதனா
இந்தநிகழ்வில் சிறைச்சாலை நலன்புரி அதிகாரி கே.ஸ்ரீனிவாசன், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சிறைச்சாலை அதிகாரிகள், சிறைக்கைதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ச)



மட்டக்களப்பு, ஏறாவூர் வாவிக் கரையோர சிறுவர் பூங்காவுக்கு பிரான்ஸ் தூதர் கிறிஸ்ரின் ரொபிசொன் அம்மையார் சென்று .அழகுபடுத்தல் திட்டத்தை பார்வையிட்டார்.

## கிண்ணியாவில் ரிவி திருட்டு


திருகோணமலை, ஜூன் 4
திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய கிண்ணியா பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து சுமார் 70,000 ரூபா பெறுமதியான ரிவி திருடப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அந்த வீட்டின் பின்பக்க வழியாக வந்த இனந்தெரியாதோரே தொலைக்காட்சியை திருடிச் சென்றுள்ளனர் என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.



வீட்டு உரிமையாளர் அதிகாலை தொழுகைக்காக எழுந்தபோது வீட்டிலிருந்த ரிவி காணாமல் போயுள்ளமை தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் கூறினர்.
இந்தக் திருட்டுத் தொடர்பில் மேலதிக விசாரணையை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## சட்டவிரோத மின்பாவனை; 23 பேர் வசமாக மாட்டினர்

மட்டக்களப்பு,ஜூன் 4
மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 3,55,653 ரூபா அபராதம் பெறப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் புலனாய்வு அதிகாரி எம்.



ஆர்.எம்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.
இலங்கை மின்சார சபையின் விசேட குழுவினர் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வந்து திடீர் சோதனை நடத்தியுள்ளனர். இதன் போதே சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்ட 23 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச)

## நீண்ட கால இழுபறிக்குப் பின் திருமலையில் மீன் சந்தை திறப்பு

திருகோணமலை,ஜூன் 4
திருகோணமலையில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் கட்டப்பட்ட மொத்த விற்பனை மீன் சந்தை நீண்ட கால இழுபறிக்குப் பின்னர் சனிக்கிழமை கடற்றொழிலாளர் சங்கத்தின் உப தலைவர் சாந்த கேரத்தால் திறந்து வைக்கப்பட்டது.



இந்தச் சந்தைக் கட்டடம் கட்டப்பட்டு சுமார் ஒரு வருடம் கடந்த நிலையில் முன்னாள் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயால் கடந்த 26ஆம் திகதி திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டும் கடைத்தொகுதிக்கான வாடகை இழுபறியில் அன்று திறப்பு விழா கைவிடப்பட்டது.
62 கடைத்தொகுதிகளை கொண்ட இந்தக் கட்டடம் 56 சிறிய கடைகளையும் 6 பெரிய கடைகளையும் கொண்டதாகும். அதற்கான வாடகைப் பணம் அதிகரித்த தொகை என்று வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்ததனால் இந்த இழுபறி நிலைமை ஏற்பட்டது. எனினும் இந்தக் கட்டம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.
கடைத்தொகுதியின் வாடகை பிரச்சினையில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை. அதனால் எல்லா வியாபாரிகளும் அவர்களது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை.இது தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ச)

## வேறுபாடுகளை மறந்துவிட்டு ஒன்றிணைந்து செயலாற்றுங்கள்

### கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 4
நமக்குள் இருக்கும் சிறிய சிறிய வேறுபாடுகளை மறப்போம். பல்கலைக்கழக அபிவிருத்தியையும், தேச அபிவிருத்தியையும் நோக்கி ஒற்றுமையாக கைகோர்ப்போம் என்று கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் கிட்டினன் கோபிந்தராஜா தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-
விரிவுரையாளர்களுக்கு உத்தியோக ரீதியான துன்பங்களும், குறைகளும் இதுவரை நிவர்த்தி செய்யப்படாமல் இருந்தால் அவற்றை உரிய வழிகளில் எழுத்து மூலம் எனக்கு தெரியப்படுத்துங்கள்.
அவற்றை நிவர்த்தி செய்ய நான் காத்திருக்கிறேன். என்னால் முடியுமான அளவு முழு முயற்சிகளையும் எடுத்து அவற்றை நிவர்த்தி செய்ய முழு மனதோடு காத்திருக்கிறேன்.
நமக்குள் இருக்கும் சிறிய சிறிய வேறுபாடுகளை மறப்போம். பல்கலைக்கழக அபிவிருத்தியையும், தேச அபிவிருத்தியையும் நோக்கி ஒற்றுமையாக கைகோர்ப்போம்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய உதவித் திட்டத்தின் கீழ் பாடசாலை மாடி கட்டடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 4

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி-நாவற்குழி அ.த.க.பாடசாலையில் பூர்த்தி செய்யப்படாமல் இருந்து வந்த மாடிக்கட்டட வேலைகள் இந்திய உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கென 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாடிக் கட்டட வகுப்பறைத் தொகுதிக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு யாழ். மாவட்ட கட்டடத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தெரிவித்தார்.


தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மீள் குடியமர்வு இடம்பெற்ற வேளையில் மாகாண பாடசாலைகள் அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து

> இதற்கென 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாடி வகுப்பறைத் தொகுதியின் தளவேலைகள் மேற்கொள்ளப்பட்டு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் வீடமைப்புத் திட்டத்தை மேற்கொண்டு வரும் இந்திய வீடமைப்புத் திட்டப் பிரிவினர் மாடிக் கட்டடத்தை நிர்மாணிக்க முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

## திருவிழாவை ஒட்டி வீதி திருத்தம்



குருநகர், ஜூன் 04

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஆரம்பமாகியதைத் தொடர்ந்து திருவிழாவின் கொடியேற்றத்தினமாகிய கடந்த சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வீதி. வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அவசர அவசரமாக திருத்தியமைக்கப்பட்டது.

இவ்வளவு காலமும் கவனிப்பாரற்ற நிலையில் இருந்த இவ்வீதி திருவிழா காலத்தில் திருத்தியமைக்கப்படுவது பொதுமக்களின் பாராட்டைப் பெறுவதற்கான முயற்சியே என பொதுமக்கள் தெரிவித்தனர்.

வீதி செப்பனிடுவதை படத்தில் காணலாம். (ஒ- 51)


## மீசாலை வீரசிங்கத்தில் ஆய்வுகூடம் அமைக்க நிதியுதவி

மீசாலை,ஜூன் 4

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் பாடசாலைகள் தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்க விசேட நிதித் திட்டத்தில் வீரசிங்கம் மத்திய கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் தேசிய பாடசாலையான



சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (வ-9)

## 'தபால் பட்டு வாடா' புலோலியில் ஆரம்பம்

வடமராட்சி, ஜூன் 4

புலோலி உபதபால் நிலையப் பகுதியில் தபால் பட்டு வாடா (விநியோகம்) பிரிவு ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் புலோலி உபதபால் நிலையத்தில் தபால்களை தரம்பிரித்து விநியோகித்தலும் தபால்களைச் சேகரித்து வெளியூர்களுக்கு அனுப்பும் (பட்டுவாடா) பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்பகாலத்திலிருந்தே இந்தப் பகுதியில் தபால்களை விநியோகிக்கவும் சேகரிப்பதற்கெனவும் இரு தபாற் சேவகர் பிரிவுகளே இருந்து வந்தன.

நீண்ட, பெரியதொரு பகுதியில் தபால்களை விநியோகிக்கவோ, அன்றேல் சேகரிக்கவோ இரு தபால் சேவகர் பிரிவுகள் போதாது என்றும் அதனை மூன்றாக அதிகரிக்க வேண்டும் என இந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் பலவும் பல வருடங்களாகத் தபால் திணைக்களத்துக்கு போதிய காரணங்களை முன்வைத்துக் கோரிக்கைகளை விடுத்திருந்தன.

இந்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து புலோலி உப தபால் நிலையப் பகுதி மூன்று வலயங்களாகப் பிரிக்கப்பட்டு மேலும் ஒரு தபாற் சேவகர் நியமிக்கப்பட்டு தபால்கள் விநியோகமும் தபால்களைச் சேகரிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை காலமும் தபால் விநியோகித்தலில் இருந்து வந்த தாமதம் நீங்கியுள்ளது. (ஒ-8)

### ஊட்டப்பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் புனரமைக்கப்பட்ட

## 19 பாடசாலைகளின் திறப்பு விழா நாளை

தென்மராட்சி,ஜூன் 4

மஹிந்த சிந்தனையின் 5 ஆயிரம் ஊட்டப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் தென்மராட்சி கல்வி வலயத்தில் புனரமைக்கப்பட்ட 19 பாடசாலைகளின் திருத்தத்துக்குப் பின்னரான ஆரம்ப விழா நாளை 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, போக்கட்டி றோ.க.த.க பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் ஆரம்ப நிகழ்வை விழாவாக நடத்த பாடசாலை சமூகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

19 பாடசாலைகளுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் தலா 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த நிதியுடன் பாடசாலை சமூகத்தின் பெரும் பங்களிப்புடன் இந்தப் பாடசாலைகள் அழகு படுத்தப்பட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் புத்துயிர் அளிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தெரிவித்தார். (வ-9)

## சமுர்த்தி அபிவிருத்தி மன்றங்களுக்கு தகுந்த ஒத்துழைப்பு வழுங்குக

### யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஜூன் 4

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றங்களின் வேலைத் திட்டங்கள் வாழ்வாதார மேம்பாட்டையும் சமூக அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டவை. இதற்கு அனைத்துத் தரப்பினரும் பொருத்தமான முறையில் தமது உதவி ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன்.

கோப்பாய் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை ஒட்டி கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு

> கோப்பாய் சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தால் நடத்தப்பட்ட புத்தாண்டு வாழ்வாதாரச் சந்தை யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

சமுர்த்தி அபிவிருத்தி மன்றங்கள் வாழ்வாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களின் மேம்பாட்டையும் சமூக மேம்பாட்டையும் மேல்நிலைப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. பின்தங்கிய வறிய நிலையில் உள்ள குடும்பங்கள் மற்றும் மாணவர்களின் கல்வித் தேவைகள், வசதிகள் மேம்பாடடையும் போது சமுதாயம் மேல்நிலைபெறும். யாழ்.மாவட்டத்தில் கூடிய வீதத்தினர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களே.

கோப்பாய் சமுர்த்தி அபிவிருத்தி மன்ற செயற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் உயர் நிலையில் உள்ளன. கோப்பாய் சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தால் நடத்தப்பட்ட புத்தாண்டு வாழ்வாதாரச் சந்தை யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு [illegible] மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு நடத்தப்படும் கொடித் தினத்தின் மூலம் திரட்டப்பட்ட நிதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணம், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி, சைக்கிள் மற்றும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் என்ற வகையில் கையளிக்கப்படுகின்றன. இதன் மூலம் சமூகம் மேல் நிலைபெறும். கல்லூரியில் ஏற்படுகின்ற மறுமலர்ச்சியும் அபிவிருத்தியும் நிரந்தரமான முன்னேற்றத்துக்கு வகை செய்யும். இந்த வகையில் கல்வி சார் உதவிகளை பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் அதனை உரிய முறையில் பயன்படுத்தி கல்வியில் உயர் நிலை பெற வேண்டும். அதனூடாக எதிர்காலத்தில் சமூக அபிவிருத்திக்கும் கல்வி முன்னேற்றத்துக்கும் [illegible] உதவிகள் ஒத்துழைப்பை தாராளமாக வழங்க வேண்டும்- என்றார். (வ-11)

## தென்மராட்சி வர்த்தகர்கள் 15 பேருக்கு அபராதம்

### காலாவதியான பொருள்கள் விற்றமை விலைபட்டியல் காட்சிப்படுத்தாத குற்றங்களுக்காக

தென்மராட்சி, ஜூன் 4

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த மற்றும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத 15 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 71 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிமன்றுக்கு சமூகமளிக்காத இரு வர்த்தகர்களுக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. கடந்த மாதம் பிரதேசத்தில் யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன்போது திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்த 15 வர்த்தகர்களுக்கு எதிராகவும் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாத இரு வர்த்தகர்களுக்கு எதிராகவும் அதிகார சபையின் மாவட்ட அலுவலர் ந.சிவசீலன் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

திகதி காலாவதியான பொருள்களை விற்பனை வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 15 வர்த்தகர்களில் 13 பேர் வருகை தந்து குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிமன்றுக்கு வருகை தராத இரு வர்த்தகர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பொருள்களின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத இரு வர்த்தகர்களும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்தப்பட்டது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிவிழாக் காணும் நாயகியை வாழ்த்துகின்றோம்

திருமதி சாவித்திரிதேவி யோகதாசன்

(உப அதிபர்,SLTS - I யா/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை)

எமது பாடசாலையில் 31 ஆண்டுகள் அளப்பரிய சேவையாற்றி இன்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெறும் தங்களை மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(37931(6) யா/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை


# 'வென்றிலேற்றர்' இல்லை நோயாளர்கள் நெருக்கடி

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 04

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் செயற்கை சுவாசம் மூலம் காற்று உட் செலுத்தும் சாதனம் (வென்றிலேற்றர்) இல்லாததால் அவசர நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இளவாலையைச் சேர்ந்த பெண் ஒருவர் ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் செயற்கை சுவாசம் வழங்கும் சாதனம் இல்லாத காரணத்தால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த நோயாளியை அவசரமாக வேறு வைத்தியசாலைக்கு மாற்ற வேண்டி ஏற்பட்டது.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் அதிகளவு நோயாளர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்படுவதால் வெளியில் இருந்து வரும் அவசர நோயாளர்களுக்கு செயற்கை சுவாசம் வழங்குவதிலும் நெருக்கடி தோன்றியுள்ளது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் நாளாந்தம் அவசர நோயாளர் சிகிச்சைக்காக சேர்க்கப்படும் நிலையில் செயற்கை சுவாசம் தேவைப்படுபவர்களுக்கு உடனடி மருத்துவம் வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது.

இந்த நிலையில் அவசர நோயாளர்கள் அம்புலன்ஸ் வண்டிகள் ஊடாக வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றும் போது உயிராபத்தான நிலையில் நோயாளர்கள் அவதிப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் தேவைக்கு ஏற்ப குறைந்தது ஒரு செயற்கை சுவாசம் உட் செலுத்தும் கருவியாவது தேவையாகவுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

(ஐ-14-36-86)


மரண அறிவித்தல்

கந்தவனம் சண்முகநாதன்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் சண்முகநாதன் (01.06.2013) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துத்துரை - சீவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சுப்பிரமணியம் மற்றும் கந்தசாமி, கோணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மஞ்சுளாதேவி (கொழும்பு), நிர்மலாதேவி (லண்டன்), ரமேஸ் (லண்டன்), கோமளன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜ்குமார், சுரேஸ்குமார் (லண்டன்), தயாளினி (லண்டன்), சிவாஜினி பிரான்ஸ் ஆகியோரின் ஆகியோரின் அன்பு மாமனும் அலிசிகா, எறோன், சுதர்சன், சுமன், நித்தாரா, கம்சிகா, அனுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.06.2013 செவ்வாய்க் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (37948)

தகவல்:
குடும்பத்தினர்.
0770773810



31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
16.07.1984

உதிர்வு
06.05.2013

அமரர்
ஸ்ரீஸ்கந்தராஜா கஜரூபன் (ரூபன்)

(உரிமையாளர் Top World Communication)

கடந்த 06.05.2013 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு ஓடிவந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், நண்பர்களுக்கும், அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் இருகரம் கூப்பி எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (05.06.2013) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல.06, கற்பகவிநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(சீவரெத்தினம் மாமா)

(37804)(10,6,7)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
15.03.1930

உதிர்வு
06.05.2013



அமரர் அப்பாத்துரை சண்முகநாதன்

கடந்த (06.05.2013) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் அப்பாத்துரை சண்முகநாதன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் (02.6.2013) ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த்தகரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.06.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் மேற்கு,
வட்டுவினி, இணுவில். (37922)(6.7.1)

குடும்பத்தினர்.



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பும்

மண்மகிழ
1935.04.14

கண்நெகிழ
2013.05.06





அமரர் தனலக்ஷ்மி சங்கரப்பிள்ளை

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைபதம் எய்திய எங்கள் அன்புத் தாயின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இன்று(04.06.2013) செவ்வாய்க்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் நாளை(05.06.2013) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோவில் மடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி. (சி.9578.17.14)

குடும்பத்தினர்.





மரண அறிவித்தல்

சின்னத்தம்பி கந்தையா

(முன்னாள் ஊழியர், காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்)

தியேட்டர்லேன் இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா கடந்த (30.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வன்னியர்-தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், அருள்மொழி, அருள்நிதி, அருள்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருமைநாயகம், தவேந் திரன், கேமன் ஆகியோரின் அன்பு மாமனும், டொறின் ஆனல்டா, ஜோய், பிரவீன், கவின், மினோல்டா, கெவின், கெய்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (05.06.2013) புதன்கிழமை பி.ப. 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் திருச்சபை மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
021 720 0006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கராஜ வனத்துக்கு 2000 ஹெக்ரெயர் காணி

### சுசில் பிரேம ஜயந்த தகவல்

கொழும்பு, ஜூன் 4
காணி மறுசீரமைப்புச் சபைக்குச் சொந்தமான 2000 ஹெக் ரெயர்கள் வரையிலான நிலப்பரப்பு சிங்கராஜ வனத்துக்கு உடைமையாக்கப்படவுள்ளது.
இந்தத் தகவலை சுற்றாடல் மற்றும் புனர் உற்பத்தி எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.
அது தொடர்பான அளவீட்டுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அளவீட்டுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் தேசிய உரிமைகள் மற்றும் காட்டு நிலங்கள் சட்



டத்தின் கீழ் சிங்கராஜவனத்தின் 11000 ஏக்கர் நிலப்பரப்புடன் இந்த 2000 ஹெக் ரெயர் நிலப்பரப்பையும் இணைத்து வர்த்தகமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்படும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-22)

## தலதா மாளிகைக்கு சென்று வழிபட்டார் தாய்லாந்து பிரதமர்



கொழும்பு.ஜூன் 4
தாய்லாந்துப் பிரதமர் யின்லக் சினவத்ரா சனிக்கிழமை காலை தலதா மாளிகைக்கு சென்று விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டார்.
சனிக்கிழமை நண்பகல் தனது இலங்கைக்கான சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புவதற்கு முன்பு தலதா மாளிகைக்கு சென்ற தாய்லாந்துப் பிரதமர் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீட மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளதுடன் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளார். (ச)




நல்லெண்ண நோக்க அடிப்படையில் ஆஸ்திரேலியா கடற்படைக்குச் சொந்தமான 'ஹமஸ்ட் டூவும்பா' எனும் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பல் இன்று செவ்வாய்க்கிழமை வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ள தயார்

## நிவாரணம் வழங்க நிதி வழங்கப்பட்டுள்ளது என்கிறார் இடர் முகாமைத்துவ அமைச்சர்

கொழும்பு, ஜூன் 4
எதிர்வரும் காலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் பட்சத்தில் அதனை எதிர்கொள்ள நாம் தயார் நிலையிலுள்ளோம் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள மழையுடன் கூடிய காலநிலையால் மக்கள் பல்வேறுபட்ட இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.
ஐந்து மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இதேவேளை நில்வள கங்கை பெருக்கெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு மாத்தறை மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சமன்பால சூரிய தெரிவித்தார். (ச)



ஐந்து மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

## பௌத்த அமைப்புக்கள் குறித்து புலனாய்வுப் பிரிவு விசாரணை

கொழும்பு, ஜூன் 4
ஜாதிக ஹெல உறுமய, பொது பலசேனா, ராவணா பலய, சிங்கள ராவய, தேசிய சங்க சம்மேளனம் உள்ளிட்ட சிங்கள பௌத்த அமைப்புக்கள் குறித்து இரகசிய கண்காணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
குறித்த அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது.
இந்த அமைப்புக்களுக்கு எவ்வாறு நிதி கிடைக்கின்றது என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.
இந்த அமைப்புக்களின் முக்கிய செயற்பாட்டாளர்களினது தனிப்பட்ட தகவல்க்ள் அடங்கிய கோவைகள் புலனாய்வுப் பிரிவினரால் பேணப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது. (ச)

## புலி உறுப்பினர் தப்பிச் செல்ல உதவிய அதிகாரிகள் குறித்து விசாரணை

கொழும்பு, ஜூன் 4
மாத்தறை வெசாக் வலயத்தில் இருந்து விடுதலைப் புலி உறுப்பினர் தப்பிச் செல்ல உதவிய இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் குறித்து சிறைச்சாலை மற்றும் பொலிஸ் துறையைச் சேர்ந்த இரண்டு குழுக்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றன.
மாத்தறை வெசாக் வலயத்திலிருந்து விடுதலைப் புலி உறுப்பினர் தப்பிச் செல்ல உதவிய சிறைச்சாலை அதிகாரிகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.
இந்த இரண்டு அதிகாரிகள் லட்சக்கணக்கான பணத்தை பெற்றுக்கொண்டு, குறித்த சந்தேகநபர் தப்பிச் செல்ல உதவியுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது. (ச)

## வர்த்தக நிறுவனங்களாக மாறும் தனியார் வைத்தியசாலைகள்

கொழும்பு,ஜூன் 4
தனியார் வைத்தியசாலைகள் இன்று நோயாளிகளிடமிருந்து நியாயமற்ற முறையில் பணத்தைப் பறிக்கும் வர்த்தக நிறுவனங்களாக மாறி வருகின்றன.
தனியார் வைத்தியசாலைகள் சத்திர சிகிச்சை, மருத்துவ சிகிச்சை, பிரசவம் போன்ற அனைத்து சிகிச்சைகளுக்கும் ஆயிரக்கணக்கில் பணத்தை நோயாளிளிடமிருந்து அறவிடுகின்றன.
அரச வைத்தியசாலையை விட தனியார் வைத்தியசாலைகளில் சிறந்த பராமரிப்பும் வைத்திய சிகிச்சையும் இருப்பதனால், அரச வைத்தியசாலைகளில் தங்கியிருந்து நோயைக் குணமாக்குவதற்கு முடியாத நிலையில் உள்ள செல்வந்தர்கள் மட்டுமின்றி சராசரி வருமானம் பெறுபவர்கள் கூட, தனியார் வைத்தியசாலைளை நோயைக் குணமாக்குவதற்கு நாடிச் செல்கின்றனர். இதற்கென அவர்கள் கைவசம் இருக்கும் பணத்தை செலவிட்ட பின்னர் மேலதிகமாக கடன்பட்டு தனியார் வைத்தியசாலைகளுக்கான கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளது.
இதேவேளை தனியார் வைத்தியசாலைகளை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு அதிகாரம் இல்லை என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் கூறினார். (ச)

**சத்திர சிகிச்சை, மருத்துவ சிகிச்சை, பிரசவம் போன்ற அனைத்துக்கும் ஆயிரக்கணக்கில் பணம் அறவிடப் படுகின்றது.**

## லஞ்ச ஊழல் பிரிவினர் நாளாந்தம் கெடுபிடி

### ஷிராணி அதிருப்தி



கொழும்பு.ஜூன்4
லஞ்ச ஊழல் பிரிவினர் என்னிடம் அடிக்கடி விசாரணை நடத்துகின்றனர். தினமும் தகவல்களை திரட்டுகின்றனர். அதனால் இயல்பு வாழ்க்கையைத் தொடர்வதில் சிக்கல் காணப்படுகின்றது என்று முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்தார்.
சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நான் வீட்டுக் காவலில் இருப்பதனைப் போன்று உணர்கிறேன் என்று அவர் சுட்டிக் காட்டினார்.
எனக்கும், கணவருக்கும், மகனுக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## உயர்தர மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பாடநெறி

### 7 இல் ஜனாதிபதியால் அறிமுகம்

கொழும்பு.ஜூன் 4
உயர்தர மாணவர்களுக்கான புதிய தொழில்நுட்ப பாடநெறியை அறிமுகம் செய்யும் நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
தேசிய விஞ்ஞான, கணித ஒலிம்பியாட் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
கிராமப்புற மாணவர்களுக்கே பலதரப்பட்ட போட்டிகளில் நிர்மாணத் தகைமைகள் உள்ளமை தெரிகிறது. கிராமப்புற மாணவர்களுக்கு அதிக வசதிகளை வழங்குவதன் மூலம் கல்வி முழுமைப்படுத்தப்படுகி



றது என்று அவர் சுட்டிக் காட்டினார்.
மஹிந்த சிந்தனை கோட்பாட்டின் மூலம் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களின் நிர்மாணம் இந்த வருட இறுதிக்குள் நிறைவு பெறும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
இல 9 வீதி, கட்டிடக் கோக்கு, கிளிநொச்சி (... வீதி திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
... வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
... சந்தை ரோட், சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: ... அல்வாய்: 021 226 3206. நெல்லியடி ... நெல்லியடி: 021 490 1519. ... 023 222 2052 ... கண்டி வீதி, ... தெற்கு: 021 227 0399. ... காங்கேசன்துறை வீதி ... : 0752824478. கொடிகாமம் ... கொடிகாமம்: 0774937585. ... : 0779598917. ... சிவன் கோவிலடி ... : 0775035571.

# அங்கும் அடிதான்

மரமொன்றில் காகக் குடும்பம் ஒன்று மகிழ்வோடு வாழ்ந்து வந்தது. பருவ காலம் ஒன்றில் பெண் காகம் தன் வாரிசுகளை உருவாக்குவதற்காக முட்டையிட்டு அடை காத்து வந்தது. ஆனால் காகம் முட்டையிட்டதை எப்படியோ உணர்ந்துகொண்ட பாம்பொன்று அந்தக் கூட்டுக்குள் புகுந்து கொண்டது. தினமும் ஒவ்வொரு முட்டை வீதம் குடித்த பின் அந்தக் கூட்டுக்குள்ளேயே பாம்பு ஓய்வெடுத்துக் கொண்டது.

தன் கண்முன்னாலேயே தனது முட்டைகளை பாம்பு விழுங்குவதை தூரத்தில் உள்ள கிளைக்கு இடம் பெயர்ந்துபோன பெண் காகம் கவலையோடு பார்த்தது. பாம்பை எப்படியாவது விரட்ட நினைத்து தடிக்குச்சிகளை பறந்தபடியே பாம்பின் மீது போட்டது. அப்படியும் பாம்பு போகவில்லை. பாம்பின் மீது தனது கூட்டத்தாருடன் வந்து எச்சமிட்டு பார்த்தது. அப்போதும் அசையவில்லை பாம்பு. கடைசியில் காகம் ஒரு திட்டம் போட்டது.

அந்த நாட்டின் மகாராணி ஆற்றில் குளிக்கச் சென்ற சமயம் அவரின் மணிமாலையை கவர்ந்து வந்து தனது கூட்டுக்குள் போட்டு விட்டது.

மணி மாலையைத் தேடி காகத்தைப் பின்தொடர்ந்த அரச சேவகர்கள் அது ஒரு கூட்டுக்குள் இருப்பதைக் கண்டார்கள். ஆயினும் அதற்குள் பாம்பு இருந்ததால் அவர்களால் எடுக்க முடியவில்லை. எனவே பாம்பை அடித்துக்கொன்ற பின்னர் மணிமாலையை எடுத்துக் கொண்டு போனார்கள். தனது எஞ்சிய முட்டைகளை ஆனந்தமாக அடை காக்கத்தொடங்கியது பெண் காகம்.

சிறுவயதில் படித்த பஞ்சதந்திரக் கதைகளில் இதுவும் ஒன்று. தனது முட்டைகளையும் கூட்டையும் காப்பாற்றுவதற்கு காகம் எடுத்த விதவிதமான முயற்சிகளை இந்தக் கதை சொல்கிறது. இதுபோலவே தமக்குப் பிடிக்காத விடயங்களை பிறரில் இருந்து நீக்குவதற்கு இப்போதும் மனிதர்கள் பகீரதப் பிரயத்தனமான காரியங்களை தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறார்கள். சாம, தான, பேத வழிகளை உபயோகித்து தமக்குச் சாதகமான நிலையை உருவாக்க பாடுபடுபவர்கள் அவை சாத்தியமல்லாத போது கடைசியில் தண்ட வழியை கையில் எடுக்கிறார்கள். காகமும் தண்ட வழி மூலமே பாம்பை கொல்ல முடிந்தது.

ஆஸ்திரேலியாவுக்கு படகில் செல்லும் இலங்கையர்களை கட்டுப்படுத்த அந்த நாடு பல்வேறு முயற்சிகளை எடுக்கத் தொடங்கியுள்ளது. முதலில் குடிவரவு சட்டத்தை இறுக்கமாக்கியது. பின்னர் படகு மூலம் உள் நுழைவோரை ஆஸ்திரேலியாவுக்கு அண்மையில் உள்ள நவ்று தீவுகளில் கொண்டுபோய் விட்டது. இலங்கையில் எல்லா ஊடகங்களிலும் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வரவேண்டாம் என்று அறிவிப்பு மீது அறிவிப்பாக சொல்லிக்கொண்டே இருக்கிறது. ஆயினும் படகுப் பயணிகளின் வரத்து குறைவதாக இல்லை.

இந்த நிலையில் தான் ஆஸியில் வசிக்கும் இலங்கை அகதிகளின் வீடுகள் மீது காடையர் கும்பல் ஒன்று தன் கைவரிசையைக் காட்டியுள்ளது. 4 ஈழ அகதிகள் இதன்போது படுகாயமடைய நேரிட்டது. இப்போது தாக்குதல் நடந்த மெல்போர்ன் நகரில் இனி எப்போது காடையரின் கைவரிசை நிகழுமோ என்ற அச்சத்துடனேயே ஈழ அகதிகள் உள்ளனர். சில வேளைகளில் இலங்கைப் படகுப் பயணிகளின் வரவைக் குறைக்க ஆஸி. அரசு தண்ட வழியை கையில் எடுத்துள்ளதோ தெரியவில்லை. ஏனெனில் இங்கு அடி விழும் என்ற அச்சத்தில் தானே ஆஸிக்குச் செல்கிறார்கள். அங்கும் அடி விழும் என்றால் வருவோர் எண்ணிக்கை குறைந்துவிடும் அல்லவா? இதனால் மெல்போர்னில் இலங்கை அகதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில் ஆஸி. அரசு இருக்கலாம் என்ற சந்தேகம் பலமாக அங்குள்ள ஈழத்தவர்களிடம் எழுந்துள்ளது. எல்லாம் ஆண்டவனுக்கே வெளிச்சம்.

# வடக்கு மாகாண தேர்தல் நடக்குமா, நடக்காதா?

## எதிரும் புதிருமாகத் தொடரும் கேள்விகள்

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

1980 ஆம் ஆண்டு தேர்தல்கள் தொடர்பான சட்டத்தின் 44 இலக்கப் பிரிவில் காணப்படும் குறிப்பிட்ட சில தேவைகளைப் பூர்த்தி செய்வதிலிருந்து உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு விலக்களிப்பது தொடர்பான விஷேட பிரிவுகளைக் கொண்ட ஒருசட்ட முன் வரைவின் செல்லுந் தன்மை குறித்து உயர் நீதிமன்றம் வருகின்ற வாரங்களில் தீர்ப்பளிக்கவிருக்கின்றது. அந்தத் தீர்ப்பு வெளியானதன் பின்னர் சட்ட முன் வரைவு நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்து கொள்ளப்படும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆள்கள் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் தாம் வாழ்ந்திருந்த தேர்தல் தொகுதியில் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருந்தால் வாக்களிக்கும் உரிமையை இது வழங்குகின்றது. 2009 ஆம் ஆண்டின் இறுதி வரையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எந்த ஓர் ஆண்டிலாவது தேர்தல் தொகுதியில் ஒருவரின் (ஆண், பெண் ) ஏதாகிலும் பெயர் தேருநர் பதிவட்டையில் காணப்படுமானால் அந்த குடிமக்களின் பிள்ளைகளும் கூட 18 வயதுக்கு மேற்பட்டவராயிருப்பின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தற்போது வசிக்கும் பகுதி கிராம சேவையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றையும் சமர்ப்பிப்பின் தேருநராக பதிவு செய்து கொள்ளலாம்.

இது குறித்து நீதித்துறை அமைச்சர் ஹக்கீம் ஏனைய தமது அமைச்சர் சகாக்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் 30 ஆண்டுகாலமாக நடைபெற்று வந்துள்ள போரின் காரணமாக ஏராளமான பொதுமக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கில் தாம் வாழ்ந்த இடங்களை விடுத்து இடம்பெயர நேர்ந்தது. அவ்வாறு இடம்பெயர்ந்த குடும்பங்களும் தனிப்பட்டவர்களும் தமது காணிகளையும் சொத்துக்களையும் கைவிட்டு இலங்கையின் வேறு இடங்களில் தற்காலிக இருப்பிடங்களை தேடிக்கொண்டவர்கள் அல்லது முகாம்களில் தங்கியிருந்துள்ளார்கள். 1980 ஆம் ஆண்டு தேர்தல் சட்டம் 44 ஆம் பிரிவின்படி தேருநராக பதிவு செய்ய விண்ணப்பிக்கும் ஒருவர் , 18 வயதை அடைந்துள்ளவராகவும் அந்தத் தொகுதியில் பதிவு செய்யக் கோரும் பகுதியில் அந்த வருடத்தின் ஜூன் முதலாம் திகதி வசித்தவராகவும் இருக்க வேண்டும்.

அந்த வருடத்தின் ஜூன் முதலாம் நாள் அவர் சாதாரணமாக தங்கியிருந்த இடம் அவரது முகவரியாகக் கணிக்கப்படும். ஆனால் இந்த சட்டத்தேவைகளை அநேகமான இடம்பெயர்ந்தவர்களால் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது என்று அமைச்சர் தமது சுற்றறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தார். சட்ட வரைவின் மேலும் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இணைப்பு பதிவேடு ஒன்றுக்கு அது வழி சமைக்கின்றது. பதிவு அதிகாரி ஒருவர் ஆள்களின் பெயர் பட்டியல் ஒன்றை தயாரித்து வர்த்தமானியிலும் ஒரு சிங்கள , ஆங்கில மற்றும் தமிழ்ப்பத்திரிகைகளிலும் அதனைப்பற்றி அறிவித்து தேர்தல் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை ஆய்வு செய்ய முடியும் என்று அறிவிப்பார். அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் ஒரு வாரத்துக்குள் தமது பெயர்ப்பட்டியலில் காணப்படாதவிடத்து ஏற்கனவே விண்ணப்பம் செய்திருந்தவர் மேல் முறையீட்டினை எழுத்து மூலம் முன் வைக்க வேண்டும். விசாரணையின் பின் குறித்த நபரின் பெயரை இணை பதிவேட்டில் பதியத் தேவையில்லையென பதிவு செய்யும் அதிகாரி முடிவு செய்வாரானால் பாதிக்கப்பட்டவர் ஒரு வார காலத்துக்குள் மீள் ஆய்வு செய்யும் அதிகாரிக்கு மேல் முறைப்பாடு செய்யலாம்.

இணைப்புப் பட்டியலில் பெயர் காணப்படும் எந்த ஒரு நபரும் வேறு பட்டியலில் எதிலும் பெயர் பதிவு செய்யலாகாது. ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் தொகுதிகளில் வாக்களிப்பவர்கள் குற்றம் புரிந்தவர்களாகக் கணிக்கப்படுவார்கள். குற்றம் நிரூபிக்கப்பட்டால் இரண்டு வருடச் சிறை அல்லது ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படாத தண்டம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

இந்த உத்தேசச் சட்டமானது இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும். அந்த வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கச் செய்யலாம். பொய்யான தகவல் அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் நபர் எவரும் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் ஓர் ஆண் சிறை அல்லது ரூ.50 ஆயிரம் தண்டம் அல்லது இரண்டு தண்டனைகளுக்கும் உள்ளாவார்.

இப்படியான ஒரு கட்டளையானது அது வெளியிடப்பட்டு மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

முன்பு வெளியிடப்பட்டது போலவே வடக்கு மாகாணத் தேர்தல் தொடர்பான அறிவித்தல் ஒன்றினை ஜூன் 26 ஆம் திகதி ஜனாதிபதி வெளியிடுவார் என்று தெரிகின்றது. அதையடுத்து அந்தத் தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளருக்கு அவர் ஆணை பிறப்பிப்பார்.

### 13 ஆவது திருத்தம் குறித்த புதிய திருப்பம்

வடமாகாண சபைத் தேர்தல் மற்றும் 13 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையானது கடந்த வாரம் புதிய திருப்பம் ஒன்றைக் கண்டது. இது குறிப்பாக மாகாணங்களுக்கு அரசமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பற்றியதாகும்.

அரசுக்கு பிரத்தியேக சட்டவாளர்கள் தரப்பிலிருந்து ஆலோசனை வழங்கும் ஒரு பிரிவினர் பொலிஸ்- காணி அதிகாரங்கள் காலாவதியாகிவிட்டதாகவும் காரணம் மேற்படி அரசமைப்புத் திருத்தத்தில் பிற்காலத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டமை என்றும் வாதிட்டுள்ளார்கள். இப்பொழுது அதுபற்றி விரிவாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு விளக்கும்படி சட்டத்துறை பேராசிரியரான வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கேட்கப்பட்டுள்ளார்.

இவைபற்றி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில்ராஜபக்ஷ கூறுகையில் , அரசமைப்பு திருத்தம் தொடர்பாக நாங்கள் இன்னமும் ஓர் இறுதி முடிவுக்கு வரவில்லை. ஜே.எச்.யூ ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எழுதியிருக்கிறது. அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டிலிருக்கிறார். அரசில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியிடமிருந்து இப்படி ஒரு ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. அதை நாங்கள் விவாதிக்க வேண்டும். இதற்காக ஜனாதிபதியுடன் ஒரு நாள் ஏற்பாடு செய்தாக வேண்டும். அதன் பிறகு அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடனும் விவாதிக்க வேண்டும் என்றார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் விளங்குகின்ற பஸில் ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்; தேசிய பாதுகாப்பு தொடர்பாக எழுகின்ற விடயங்களை நாம் அசட்டை செய்துவிடமுடியாது.

இந்தப்பிரச்சினை அதிகாரிகளாலும் கூட எழுப்பப்பட்டுள்ளது. இந்தக் கவலை வெகுகாலமாகவே இருந்து வருகின்றது. அரசமைப்பை பாதுகாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அதில் காணப்படும் சில பிரிவுகளை மூன்றில் இரண்டு பங்கு மேலதிக வாக்கினாலும் மாற்றிவிடமுடியாது. அமரர் கொல்வின் ஆர்.டி.சில்வாவினால் உருவாக்கப்பட்ட அரசமைப்பில் அவை உண்டு. ஜே.ஆர்.ஜயவர்த்தனா உருவாக்கிய அரசமைப்பிலும் அது இருக்கிறது. இவை பற்றி யாரும் சுட்டிக்காட்டும்போது நாம் ஆராய வேண்டும். நாம் திறந்த மனதுடனேயே இருக்கிறோம். அதே சமயம் எமக்கு அக்கறைகளும் உண்டு என்கிறார். அதிகாரிகள் என்று பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டிருப்பது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையாகும். 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக கோத்தபாய சில கவலைகளை வெளியிட்டிருக்கிறார். 13ஆவது திருத்தத்தில் இருந்து பொலிஸ் காணி அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும் என்பதில் கடுமையான கருத்துக் கொண்டவராக அவர் இருக்கிறார்.

### ராஜபக்ஷ ஆட்சியை கவிழ்க்க புதிய அரசமைப்பு


நாடாளுமன்ற கட்டடத் தொகுதியின் குழுக்களுக்கான அறை 'ஏ' இல் ஐ.தே. கட்சியினர் புதிய அரசமைப்புக்கான விவாத பத்திரிகையை வெளியிட்டனர். சமயத் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனைகளில் ஊழல் ஒழிப்புத் தொடர்பான அம்சங்களும் அவை தனியார் துறையையும் உள்ளடக்குவதாய் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டபோது பலத்த ஆரவாரம் எழுந்தது. இந்தப் பிரிவானது கடந்துபோன காலத்திலிருந்து செயல்படுத்தப்படுவதாய் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள் உத்தேச அரசமைப்பு நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், நீதித்துறை உறுப்பினர்கள், தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சியின் உறுப்பினர்களுக்கான ஒழுக்கவிதிக் கோவையொன்றும் சர்வதேச தரத்துக்கு ஒப்ப உருவாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஐ.தே.க. மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு இந்த அறிக்கை பற்றிப் பேசும்போது, எவராவது ராஜபக்ஷ அரசில் உறுப்பினராய் இருந்ததால் அவர் நாட்டின் சட்டங்களின்படி ஆளப்படுபவராய் இருக்கத் தேவையில்லை. மற்றவர்களைப் பொறுத்தவரை அவர்களை அழிப்பதற்காகப் அவைகளைப் பயன்படுத்துவார்கள். இப்பொழுது என்ன நடக்கிறது என்றால் ராஜபக்ஷ ஆட்சியின் அதிகாரம்தான் நடைபெறுகிறது. இன்று இலவசக் கல்வி தகர்க்கப்பட்டுவிட்டது. இலவச மருத்துவம் அழிக்கப்பட்டு விட்டது. எந்தக் காரணமும் இன்றி மின்கட்டணமும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்றார்.

தமது புதிய அரசமைப்பின் யோசனைகளின் ஆவணத்தை வெளியிட்டு அவர் பேசுகையில் இதன் மூலம்1978 ஆம் ஆண்டு உருவான இரண்டாவது அரசமைப்பு ஒழிக்கப்படும் . இதன் முக்கிய நோக்கம் ராஜபக்ஷ சர்வாதிகாரத்தை ஒழிப்பதாகவே இருக்கும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

து.ஜெயராஜா,
முதுகலை மாணவன்,
சென்னை பல்கலைக்கழகம்.




# இதுவும் ஒரு சுற்றுலா மையம்

அறிவுசார் சமூகமொன்று தேடிக் கொண்ட கூட்டுத் தேட்டமாக நூலகங்கள் விளங்குகின்றன. யாழ்ப்பாண சமூகத்தினதும், அறிவுசார் பண்பாட்டு விருத்தியினதும் கூட்டு அடையாளமாக விளங்குவதே யாழ். பொது நூலகம் ஆகும். தமிழர்களின் தனித்துவ அடையாளமாக இது விளங்கியதால் காலத்துக்கு காலம் அரசியல் நீரோட்டங்களுக்குள் அடித்துச் செல்லப்பட்ட சம்பவங்களும், தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்த வண்ணமே இருந்திருக்கின்றன.

### வாசிப்பதற்கான நூலகங்கள்

1981 ஆம் ஆண்டு அவ்வாறானதொரு துயர சம்பவத்தை யாழ். நூலகம் சந்தித்ததோடு அது முற்றாக அழிந்துபோனது. அறிவுசார் தேட்டத்தின் திட்டமிட்ட படுகொலையாக சிங்கள அரசியல் சக்திகளால் மேற்கொள்ளப்பட்டதை வரலாறு இன்னும் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றது. அந்த அறிவுப் பெட்டகப் படுகொலை நிகழ்ந்து 32 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இப்போது எப்படியிருக்கின்றது? புதிதாக கட்டமைக்கப்பட்டுள்ள யாழ். நூலக வளாகத்துக்குள் வந்துசெல்பவர்களின் நோக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எப்படியானது?

### அரசியல் கலப்பில் பிறந்த நூலகம்

2007 ஆம் ஆண்டு பெரும் அரசியல் சர்ச்சைகளுக்கு மத்தியில் யாழ். பொது நூலகத்தின் மீள் பிரசவம் நடந்தது. ஆனாலும் சுதந்திரமான நூலக உள்நுழைவுக்கு தொடர்ந்தும் தடைகள் இருந்து வந்தன. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட வலயத்துக்குள் புதிய நூலகம் நூல் மீட்பர்களுக்காக காத்துக் கிடந்தது. போரோய்வுடன் சிறிது சிறிதாக அதற்கு சுதந்திரம் கிடைக்க முக்கிய அரசியல் சந்திப்புக்களின் மையமாக அது மாறியது. இந்தியக் குழுவினரும், சீனக் குழுவினரும் யாழ். பிரதிநிதிகளைச் சந்தித்துக் கைகுலுக்கிக் கொள்ளும் இடமாக அந்தப் புத்தகத் தளம் மாற்றம்பெற்றது.

அண்மையில் வைக்கப்பட்ட யாழ். பொதுநூலக திறப்பு விழா தொடர்பான கல்வெட்டில் அரசியல் விளையாடியிருக்கின்றது. இந்த நூலகத்தை இரண்டாம் முறை புனரமைத்து திறப்பு விழா செய்வதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. அதனால் குறித்த ஆண்டில், ஏற்கனவே திட்டமிட்ட திகதியில் திறக்க முடியாமல் போனமையும், அதன்போது நிகழ்ந்த சம்பவங்களும் யாழ்.மக்கள் அறிந்ததே. அதனால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதம் கழித்தே யாழ். நூலகத் திறப்பு விழா நடந்தேறியது. ஆனால் இப்போது பொறிக்கப்பட்டுள்ள அந்தக் கல்வெட்டில் உண்மையில் நூலகம் திறக்கப்பட்ட திகதி மறைக்கப்பட்டு, ஏற்கனவே திட்டமிடப்பட்ட திகதியே பொறிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பின்னால் இருக்கின்ற அரசியலை நினைவுபடுத்திக் கொள்வது இலகுவானதே.

### அதுவும் சுற்றுலாச் சந்தை

2009 ஆம் ஆண்டு போர் முடிந்த கையோடு, இலங்கையின் வட பாகத்தை மையப்படுத்திய போர்ச் சுற்றுலா என்ற வணிகம் களைகட்டத் தொடங்கியது. தெற்கிலிருந்து படையெடுக்கும் சிங்கள மக்கள் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த போரின் தடயங்களைப் பார்வையிடுவதில் ஆர்வம் காட்டினர். அந்த வரவிலேயே தாமே எரித்து, தாமே மீளவும் கட்டிக் கொடுத்த யாழ். நூலகத்தையும் பெருமையுடன் தொட்டுத் தடவிப் பார்க்க விரும்பினர். நாள் தோறும் பெருந்திரளான சிங்கள சுற்றுலாவிகள் யாழ்.நூலகத்தில் இந்த அனுபவத்தைப் பெறுவதற்காகவே இன்றும் வந்து செல்கின்றனர். அவர்களின் இந்த திரளான நூலகம் நோக்கிய படையெடுப்புக்குப் பின்னாலும் அரசியல் இருக் கின்றது.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் அழித்த தமிழர்களின் அறிவுச் சொத்தை, சுதந்திரக் கட்சியினராகிய நாம் மீளமைத்து சுபீட்சத்தைக் கொடுத்திருக்கின்றோம் என்ற தொனிப்பொருளிலான அரசியல் சிந்தனையை சிங்கள மக்கள் மத்தியில் பரப்புவதற்கான சந்தர்ப்பமாக இந்தப் பயணங்களை ஆளும் அரசு பயன்படுத்திக் கொள்கின்றது.

வந்து செல்பவர்களும் ஆளும் அரசை நோக்கிய ஆதரவு மனப்பான்மையுடன் யாழ். நூலகத்தை தடவிச் செல்கின்றனர். தம் இனிய நினைவுகளில் ஒன்றாக அதையும் எடுத்துப் போகின்றனர்.

### இப்போதும் கலாசார சின்னமே அது


ஆனால் வெளிநாடுகளிலிருந்து வரும் பிற இனத்தவர்கள் யாழ்.நூலகத்தை நோக்குவதோ வேறுவிதமானது. தமிழர்களின் பண்பாடு, அரசியல் குறித்த தேடல் தளமாகவே இந்த நூலகத்தை அவர்கள் பார்க்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் இதுவொரு கலாசார சின்னம். மீண்டும், மீண்டும் அழிக்கப்பட்ட தமிழர்களின் அறிவுசார் அடையாளத்தின் எச்சசொச்சம் என்ற மனப்பதிவை பெற்றுச் செல்கின்றனர். தென்னாசிய சமூகங்களின் ஆய்வு சார்ந்த விடயப்பொருள்களுக்கான ஆதார ஊக்கியாக இப்போதும் யாழ்.நூலககத்தை நம்பிவரும் வெளிநாட்டவர்களும் இருக்கின்றனர்.

### நுனிப்புல் மேயும் மையமாகும் நூலகம்

இந்த நூலகத்தை நோக்கி படையெடுக்கும் உள்ளகவாசிகளின் நோக்கங்களோ விநோதமானதாக மாறிவருகின்றது. பத்திரிகை படிப்பவர்கள் மட்டுமே தமது நோக்கத்தில் கருத்துடையவர்களாய் இருக்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்களும், பாடசாலை மாணவர்களும், ஆய்வு மாணவர்களும் குறிப்பெடுப்பதற்காகவும், அவற்றை நிழல் பிரதி செய்து எடுத்துச் செல்வதற்காகவுமே அநேகர் வருகின்றனர். நமது கல்விப் பாரம்பரியத்தில் வீழ்ந்திருக்கும் பெரும் ஓட்டையும், கற்பித்தல் நடைமுறைகளில் ஏற்பட்டிருக்கின்ற இலகுத்தனங்களும் இதுபோன்ற தேடல் அற்ற, வாசிப்பை தேவையற்றதாக்கிய மாணவச் சூழல் உருவாக்கத்திற்கு காரணமாகியிருக்கின்றது. அந்த மாணவர்கள் புத்தகங்களை வாசிப்பதற்காக தேடுவதனைவிட, நிழல் பிரதி எடுப்பதற்காக தேடுவதிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர்.

### இப்போது அதிக வசதி வாய்ப்புகள்?

முன்னரைவிட இப்போதிருக்கின்ற நூலகமானது அதிக வசதிகளைப் பெற்றுள்ளது. கணினி துறை சார்ந்த பயிற்சிகளும், விளையாட்டுக்களும், சிறார்களை மையப்படுத்திய கதை சொல்லும் நேரம் போன்ற வாராந்த நிகழ்வுகளும், இணைய வசதிகளும் இப்போது புதிதாய் கிடைத்திருக்கின்ற வசதிகள். ஆனால் பண்டைக்கால நூல்களும், தமிழரின் வரலாற்று எச்சங்களான ஓலைச் சுவடிகளும் இல்லாமலே போனமை மிகப்பெரும் இழப்பாகும். ஆயிரம் வசதி வாய்ப்புக்கள் இந்த நூலகத்தை அலங்கரித்தாலும் அவற்றுக் இணையாக எதுவும் வராது என்ற உண்மையை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.




**தாமே எரித்து, தாமே மீளவும் கட்டிக்கொடுத்த யாழ். நூலகத்தையும் பெருமையுடன் தொட்டுத் தடவிப் பார்க்க விரும்பினர். நாள் தோறும் பெருந்திரளான சிங்கள சுற்றுலாவிகள் யாழ்.நூலகத்தில் இந்த அனுபவத்தைப் பெறுவதற்காகவே இன்றும் வந்து செல்கின்றனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
30.04.1935

மறைவு
06.03.2013



## சின்னத்தம்பி சிவகுரு

கடந்த (06.03.2013) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் சின்னத்தம்பி சிவகுரு அவர்களின் மறைவின் போது துயரில் பங்குகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் செய்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 90 ஆம் நாள் நினைவு இன்று (04.06.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகிரி இல்லம்,
வெங்களா றோட், மீசாலை.

குடும்பத்தினர்.
0779401614

(©9574)(10,6,7)


# 73 பில்லியன் நட்டம் மின்சார சபைக்கு

## பவித்ரா வன்னியாராச்சி தகவல்



கொழும்பு, ஜூன் 4

இலங்கை மின்சார சபை 73 பில்லியன் ரூபா நட்டத்துடனேயே இயங்குகிறது என்று மின்சக்தி, எரி சக்தி அமைச்சர் திருமதி பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்சார உற்பத்தியில் நூற் றுக்கு 77 வீதம் எரி எண்ணெய் மூலமாக இயங்கும் இயந்திரங்கள் ஊடாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன

நூற்றுக்கு 23 வீதமே நீர்மின் உற்பத்தி செய்யப்படுகின்றது.

நான் மின்சக்தி, எரிசக்தி அமைச்சைப் பொறுப்பேற்றுக் கொண்டபோது மின்சார சபைக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த 364 பில்லியன் ரூபா பெறுமதி கொண்ட நிறுவனச் சிட்டைகள் இருந்துள்ளன.

அரசின் முழு நிதியையும் மின்சார சபைக்காக செலவிட முடியாது என்று மின்சக்தி அமைச்சின் அறிவித்த லொன்றில் தெரிவிக்கப்படுகிறது.

உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கும்போது அதைத் தாங்கிக் கொள்வது மின்சார சபைக்குச் சிரமமானது.

எதிர்காலத்தில் அனல்மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டதன் பின்னர் எரி எண்ணெயைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மின்சார உற்பத்தி குறைக்கப்படும்.- என்றார். (ச-22)

## நுங்கு வெட்ட ஏறியவர் விழுந்து படுகாயம்

தென்மராட்சி, ஜூன் 4

நுங்கு வெட்ட 50 அடி உயர மரத்தில் ஏறிய குடும் பஸ்தர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

சனிக்கிழமை மந்துவிலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மந்துவில் கிழக்கைச் சேர்ந்த ப.யோகராசா (வயது-48) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-9)

## புத்தூர் ஆலயத்தின் விக்கிரகம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 4

புத்தூர் வீரவாணி நாகதம்பிரான் ஆலயம் வெள்ளிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு விக்கிரகம் திருடப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 30 கிலோ எடையுள்ள செப்பு விக்கிரகம் திருடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-ரி)


# பிறந்த நாளில் ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

## யோகரட்ணம் கீதன்

தோற்றம்
04.06.1980

மறைவு
31.05.2008



கருணையே உருவமாகி பொறுமையையே பொக்கிஷமாக்கிய
பாசத்தின் உறைவிடமே-கீதா
உன் வாழ்க்கையை பிறருக்கு நிழல் கொடுக்கும்
ஆலமரமாக்கிக் கொண்டாய் - அதனால்
ஆத்மார்த்தமாய் நீ நேசிக்கப்படுகிறாய்
இப்போது உன் வாழ்க்கை நல்ல மனங்களால்-பூஜிக்கப்படுகின்றது.
அகமும் புறமும் ஒன்றானவன் - கீதன் என்பதால்
ஒப்பீட்டளவில் அவன் வளர்ச்சி உணரப்பட்டது.

மரணம் எப்படியும் வரலாம் எந்தக் கணத்திலும் வரலாம்
என்ற தத்துவத்தை நீ உணராத வயதில்
உன் இலட்சிய வாழ்க்கையை ஒரு நொடிப்பொழுதினில்
சிதறடித்து துகள்களாக்கினான் காலனவன்

தினம் தினம் ஒவ்வொரு இரவிலும் - எனக்கான
உன் உயிர் வாழ்க்கையின் ஞாபகங்களின் ஊர்வலம்
விடியாத பல இரவுகளின் பின் தெய்வ வாக்கின் பிரகாரம்
ஈர் உயிராய் விடியலைத் தந்தாய்
உன் இழப்பு எம் வாழ்வில் இழப்புத்தான்
நாம் இந்த உலகில் வாழும்வரை அதில் இருந்து மீள முடியாது
இருப்பினும் உன் வாழ்வில் அது முற்றுப்புள்ளியல்ல
வாழ்வின் தொடக்கம் என்பதை நிரூபித்துக்காட்டிய
தெய்வத் திருமகன் அவதார மைந்தனாய் அவதரித்தாய்

இருப்பினும் பெற்றோர்க்கு உன் இடத்தை ஈடு செய்ய
யாரும் இல்லாத அலைகடல் துரும்பாக தத்தளிக்கும்

இல. 18/1, காட்டு கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

இதயங்கள்.

(37940)(10.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள்



நெளுக்குளம், ஜூன் 4
அண்மைக்காலமாக வவுனியாவில் அமைந்துள்ள வணக்கத் தலங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை மக்களிடையே கவலையைத் தோற்றுவித்துள்ளது.
வெசாக் காலத்தில் கண்டி வீதியில் அமைந்துள்ள விகாரை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு பெருமளவு பணம் களவாடப்பட்டுள்ளது.
இதைப் போன்று வைரவ புளியங்குளத்தில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தின் உண்டியலும் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.
கண்டி வீதியில் அமைந்துள்ள பௌத்த விகாரைப் பகுதியில் பெருமளவு பொலிஸார் கடமையில் இருந்த போதிலும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை இங்குள்ள பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.
சில தினங்களுக்கு முன்னர் வவுனியா வடக்கு நெடுங்கேணி ஐயனார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த பெரியளவிலான உண்டியல், பணத்துடன் வாகனமொன்றில் வந்தவர்களால் எடுத்துச் செல்லப்பட்டமை இங்குள்ள மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# 119 ஆசிரியர் பற்றாக்குறை


## அவலத்தில் துணுக்காய் பாடசாலைகள்

மாங்குளம், ஜூன் 4
துணுக்காய் கல்வி வலயத்தில் இயங்கும் பாடசாலைகள் 119 ஆசிரியர்களின் பற்றாக்குறையுடன் இயங்கி வருவதாக கல்வியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இங்கு ஆரம்பக் கல்விக்கு 32 ஆசிரியர்களும், ஆங்கிலப் பாடத்துக்கு 42 ஆசிரியர்களும், இடைநிலைப்பிரிவு விஞ்ஞான பாடத்துக்கு 4 ஆசிரியர்களும், க.பொ.த. உயர் தரத்தில் வரலாற்றுப் பாடத்துக்கு 6 ஆசிரியர்களும், புவியியல் பாடத்துக்கு 2 ஆசிரியர்களும், தமிழ் பாடத்துக்கு 2 ஆசிரியர்களும், பொருளியல் பாடத்துக்கு 4 ஆசிரியர்களும் பற்றாக்குறையாகவுள்ளனர்.
இதனை விட இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் வருகை தந்த ஆசிரியர்களின் ஒரு தொகுதியினர் எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் தமது சேவையை நிறைவு செய்யவுள்ளனர்.
அதேபோன்று கடந்த ஆண்டு இடமாற்ற மேன்முறையீடு செய்த ஆசிரியர்களில் 7 பேர் இடமாற்றம் பெறவுள்ளனர்.
எனவே ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து 119 ஆசிரியர்களின் பற்றாக்குறை துணுக்காய் கல்வி வலயத்தில் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.
கடந்த காலங்களில் க.பொ.த. உயர்தரம், சாதாரண தரப் பெறுபேறுகளின் சித்தி வீதம் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறை நிகழுமானால் சித்தி வீதம் குறைவடைவதற்கான வாய்ப்பு ஏற்படும் எனவும் கல்வியியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
மன்னார் மாவட்டத்தில் மாகாணப் பாடசாலைகளுக்குரிய 72 ஆசிரியர்கள் தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றுகின்றனர். இதனால் மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
மன்னார் மாவட்டத்திலுள்ள சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, சென். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, சென்.புனித சவேரியார் பெண்கள் கல்லூரி ஆகிய 3 பாடசாலைகளில் வடக்கு மாகாணத்துக்குரிய 72 ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகத் தெரிய வந்துள்ளது.
இதேவேளை, வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் போன்ற முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிய வருகின்றது. (க-422)

## வெடிகளால் அதிர்ந்து வரும் முத்துஐயன்கட்டுப் பிரதேசம்

கிளிநொச்சி, ஜூன் 4
கல்லை உடைப்பதற்கு வைக்கப்படும் வெடிகளால் முத்துஐயன்கட்டுப் பிரதேசம் அதிர்வதால் மக்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.
முத்துஐயன்கட்டுப் பகுதியில் கல்லை உடைத்து எடுப்பதற்காக வெடிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வெடிகளின் ஒலி மற்றும் அதிர்வுகளால் அச்சத்துக்கும், அதிர்ச்சிக்கும் சிறுவர் முதல் பெரியோர் வரை உள்ளாகி வருகின்றனர்.
மேலும் நேர வித்தியாசம் இல்லாது திடீரென பெரிய சத்தத்துடன் வெடியோசை கேட்பதால் மக்கள் அதிர்ச்சியடைவதைக் காண முடிகின்றது. போரின் போது இத்தகைய வெடியோசைகளாலும், அவலங்களாலும் அச்சமடைந்த சிறுவர்கள் தற்போது மீண்டும் போர் ஏற்பட்டுள்ளதா என எண்ணி அஞ்சுகின்றனர்.
முத்துஐயன்கட்டிலிருந்து சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரத்திலுள்ள கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளிலும் பேரோசையுடன் வெடிச் சத்தங்கள் கேட்பதுடன் நிலமும் அதிர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## நெற்பயிர்களில் நோய்த் தாக்கம்



முல்லைத்தீவு, ஜூன் 4
முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் நோய்களின் தாக்கம் காணப்படுவதால் விவசாயிகள் கவலையில் மூழ்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது.
நெற்பயிர்களில் புழுக்களின் தாக்கம் காணப்படுகின்றது. மேலும் இலைகள் காய்ந்த நிலையில் மஞ்சள் நோயும் பரவியுள்ளது. விவசாயிகள் அதிக பணம் செலவழித்து பல்வேறு கிருமிநாசினிகளைத் தெளித்த போதிலும் இவை கட்டுப்படுவதாகத் தெரியவில்லை.
காலபோகத்தின்போது நெற்செய்கையில் நஷ்டத்தை எதிர்கொண்ட விவசாயிகள் சிறுபோகத்தின் போதும் இந்த நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற கவலையில் இருப்பதையும் காணமுடிகின்றது. (க-500)

## சந்தை நுழைவாயிலில் விபத்துக்களுக்கான சாத்தியம்

துணுக்காய், ஜூன் 4
உருத்திரபுரம் கூழாவடியில் உள்ள பொதுச்சந்தையின் நுழைவாயில் பகுதியில் பஸ்கள் தரித்து நிற்பதால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.
சந்தையின் நுழைவாயில் பகுதியில் பஸ்கள் தரித்து நிற்பதால் சந்தையில் பொருள்களை வாங்க வருவோர் இடையூறுகளை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த 28 ஆம் திகதி சந்தையின் நுழைவாயில் பகுதியில் விபத்து ஒன்று நிகழ்ந்ததால் இருவர் படுகாயம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-415)

## புனரமைக்கப்படாத நிலையில் தபால் நிலையக் கட்டடம்

துணுக்காய், ஜூன் 4
மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலிநகர் பகுதியில் அமைந்துள்ள உபதபால் நிலையக் கட்டடம் புனரமைக்கப்படாமல் உள்ளதால் மக்கள் பல்வேறு சிரமங்களுடன் தமது அஞ்சல் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.
இந்த உப தபால் நிலையம் போருக்கு முன்னர் சீரான முறையில் இயங்கி வந்தது. போரின் போது இந்தத் தபால் நிலையக் கட்டடமும் பாதிக்கப்பட்டது.
தற்போது பாலிநகர் பகுதியில் அமைந்த தனியார் கட்டடமொன்றில் வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. இதனால் இங்கு வரும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
முன்னைய தபால் கட்டடம் பற்றைக் காடாகக் காட்சியளிப்பதால் மக்கள் அதனை சிரமதானம் மூலமாக துப்புரவு செய்து வருகின்றனர்.
இந்தக் கட்டடத்தைப் புனரமைப்பதற்கு எவரும் முன்வராமை குறித்து இந்தப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். (க-415)

## நிறைவுபெற்றது பயிற்சி நெறி

அக்கராயன், ஜூன் 4
மாந்தை கிழக்கில் இடம்பெற்ற பனை உற்பத்திகள் தொடர்பான பயிற்சி நெறிகளின் நிறைவுநாள் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலகமும் பனை அபிவிருத்தி சபையும் இணைந்து இந்தப் பனை உற்பத்திசார் பயிற்சிநெறிகளை நடத்தியிருந்தன.
மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன் தலைமையில் இடம்பெற்ற நிறைவு நாள் நிகழ்வில் பயிற்சியை நிறைவு செய்த 30 பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பயிற்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பனைசார் உற்பத்திப் பொருள்களின் விற்பனையும் இங்கு இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன்; ''பனைசார் பயிற்சி நெறிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு உதவி அமைப்புக்கள் உதவுவதற்கு முன்வர வேண்டும். உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு அதிக சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். மாந்தை கிழக்கின் பனை வளம் உரிய வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
அன்றைய தினம் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பனைசார் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன.
இதேவேளை மாந்தை கிழக்கின் செல்வபுரம், பாலிநகர் ஆகிய இரு இடங்களில் பனைசார் பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-18)



## செஞ்சிலுவைக் கிளைக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு





மன்னார்,ஜூன் 4
இலங்கை செஞ்சிலுவைச் சங்க மன்னார் மாவட்டக் கிளையின் ஆண்டுப் பொதுச் சபைக் கூட்டமும் கிளைக் குழுத் தேர்தலும் கடந்த 25 ஆம் திகதி மன்னார் மாவட்டக் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தினை தலைமைச் செயலகத்தின் சார்பில் அவதானிப்பதற்கு யாழ்.கிளையின் தலைவரான பாலகிருஷ்ணன் வருகை தந்திருந்தார்.
இதில் புதிய நிர்வாகக் குழுவும் தெரிந்தெடுக்கப்பட்டது.
இதன்போது கிளைத் தலைவராக-ஜோசப் ஜோன் கெனடி, உப-தலைவராக -பிரான்சிஸ்பிள்ளை றெஜி ஜெயபாலன், செயலாளராக- குழந்தைவேலு ரகுசங்கர், பொருளாளராக-பத்திநாதன் ஜெறோம் எமிலியான்ஸ்பிள்ளை மற்றும் கிளைக் குழு உறுப்பினர்களாக அந்திரேஸ் யூட்பஸில் சோசை, அப்துல் கபூர் முகமட் பஸில், அந்தோனி மார்க், பிரான்சிஸ் அன்ரனி நிமால், செல்வக்கண்டு லோகநாதன், செபஸ்ரியான் ஜோன்சத்திய சீலன் குலாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-12)

## வவுனியாவில் சிறுவர் தொடர்பான கலாசார விழா

நெளுக்குளம், ஜூன் 4
வவுனியா நகர கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி சிறுவர் உரிமைகள், திறன் விருத்தி கலாசார மேம்பாடு தொடர்பான கலாசார விழாவொன்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளதாக வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரியான த.செல்வக்குமார் தெரிவித்தார்.
போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர்கள் உட்பட பலதரப்பட்ட சிறுவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதுடன் அவர்கள் மத்தியில் சிறுவர் உரிமைகள், வன்முறைகளில் இருந்து விடுபடல் துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல், உட்படப் பல்வேறு விழிப்புணர்வு ஊட்டல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் இந்த மகிழ்வுடன் கூடிய கலாசார விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உறவினர், நண்பர்களால் சங்கடங்கள் வரும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். அசதி, சோர்வு வந்து விலகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும்.

**இடபர்:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனர்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**கடகர்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். தந்தைவழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**சிங்கர்:** சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம்.

**கன்னி:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

## நாளை

வைகாசி-22 புதன்கிழமை 05.06.2013
திதி: துவாதி பி.ப. 05.14 வரை
நட்சத்திரம்: அச்சுவினி பி.ப. 02.19 வரை
சுபநேரம்: 07.22- 08.52 வரை
இராகுகாலம்: 11.52 - 01.22 வரை

**துலாபர்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**விருச்சிகர்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**தனுசு:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**மகரர்:** எடுத்த வேலையை தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கும்பர்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பண வரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்துக் கொள்வார்கள்.

**மீனர்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். உறவினர், நண்பர்கள் சிலர் நன்றி மறந்து பேசுவார்கள். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 1 | | 7 | | | 9 | |
| 7 | | | | | 8 | | 4 | 6 |
| | | | 6 | 9 | | 7 | | |
| | 1 | | 2 | 5 | | 6 | | 3 |
| | | | 4 | 3 | 7 | | | |
| 5 | | 3 | | 6 | 1 | | 7 | |
| | | 4 | | 8 | 6 | | | |
| 3 | 8 | | 7 | | | | | 4 |
| | 7 | | | 4 | | 2 | 6 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 3 | 7 | 4 | 8 | 9 | 2 |
| 7 | 3 | 9 | 1 | 2 | 8 | 5 | 4 | 6 |
| 8 | 4 | 2 | 6 | 9 | 5 | 7 | 3 | 1 |
| 4 | 1 | 7 | 2 | 5 | 9 | 6 | 8 | 3 |
| 9 | 6 | 8 | 4 | 3 | 7 | 1 | 2 | 5 |
| 5 | 2 | 3 | 8 | 6 | 1 | 4 | 7 | 9 |
| 2 | 9 | 4 | 5 | 8 | 6 | 3 | 1 | 7 |
| 3 | 8 | 6 | 7 | 1 | 2 | 9 | 5 | 4 |
| 1 | 7 | 5 | 9 | 4 | 3 | 2 | 6 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3 X 3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
29.04.1934

உதிர்வு
06.05.2013

*திதி: ஏகாதசி*

## திருமதி பாறுபதிப்பிள்ளை படவீரசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)
(மந்துவில் கிழக்கை பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

அன்பான கணவனுடன் தமிழ்ப் பண்புடன்
நற்குணமுள்ள பெண்ணாய் வாழ்ந்தீர்கள் ....
அண்ணி என்று அழைப்பதன் அர்த்தத்தின்
முழு உருவமாய் திகழ்ந்தீர்கள்....
எங்கள் வாழ்வே உங்கள் வாழ்வென என்றென்றும்
நினைத்து மெழுகுவர்த்தியாய் வாழ்ந்த ஆசையம்மாவே...
உங்கள் உடல் மட்டும் தான் எம்மை விட்டு போனதம்மா...
உங்கள் ஆத்மா எங்கள் உயிருள்ளவரை
எங்களை விட்டு போகாது ஆசையம்மாவே...

கடந்த (06.05.2013) இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.06.2013) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அம்பனில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பன், குடத்தனை.

கணவர், பெறாமகள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர், மைத்துனர், மைத்துனிமார்.


(37853) (10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி மருந்தக புதிய கட்டடத்துக்கு 'ஆட்டம்' கண்ட பழைய தளபாடங்கள்

## 'பெயின்ற்' அடித்து மெரு கூட்டினால் போதுமா?

கைதடி, ஜூன் 4
கைதடி மத்திய மருந்தகத்தின் புதிய கட்டடத்தில் பாவனையிலுள்ள தளபாடங்கள் யாவும் மிகப் பழைமையானதுடன் அவற்றில் சில பாவனைக்கு உதவாத நிலையில் காணப் படுகின்றன என்று அங்கு செல்லும் நோயாளர்கள் தெரிவிக் கின்றனர்.
மேற்படி மருந்தகம் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக கைதடி முதியோர் இல்லத்துக்கு தெற்குப் பக்கமாக ஏ-9 வீதியின் அருகே இருந்ததாகவும் வடக்கு மாகாண சபையின் கட்டடம் அந்த இடத்தில் அமைக்கப்பட்டு வருவதனால் இந்த மத்திய மருந்தகம் நவீல்ட் பாடசாலை வீதியில் புதிதாக அமைக்கப்பட்டு தற்போது அங்கு இயங்கி வருவதாகவும் ஆனால் அங்கு நோயாளர்களுக்கென பாவிக்கப்படும் இருக்கைகள் மற்றும் அலுமாரி, மேசைகள் உட்பட பல தளபாடங்கள் மிகப் பழைமையாக இருப்பதாகவும் அவற்றில் சில ''ஆட்டம்'' கண்ட தளபாடங்கள் எனவும் கூறப்படுகி றது.
இதேவேளை இந்தத் தளபாடங்களுக்கு வர்ணம் பூசித் தருமாறு நிர்வாகம் கோரியிருப்பதாகவும் தெரியவருகி றது.
மேலும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, வடக்கு மாகாண சுகாதார திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரத் திணைக்களம் என்பன இங்கு பல இடங்களில் பல கட்ட டங்களை உருவாக்கி வரும் இந்தவேளை வடக்கு மாகாண சபையின் கட்டடத்துக்கு அரு கில் இருக்கும் இம்மத்திய மருந் தகத்துக்கு புதிய தளபாடங்கள் வழங் காதது ஏன் என்று என இந்தப் பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
எனவே, இனியாவது இந்த விடயத்தில் கவனமெடுத்து நோயாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு உடனடியாக புதிய தளபாடங்களை இந்த மத்திய மருந்தகத்துக்கு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-288)





வலி.வடக்கு, ஜூன் 4
கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
தொடர்ந்து நவநாள் ஆராதனை இடம்பெற்ற, எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை நற்கருணை வழிபாடுகளும் மறுநாள் 13 ஆம் திகதி வியாழக்கிழமை கூட்டுத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் நடைபெறும்.
நவநாள் ஆராதனை தினங்களில் கிளரேஷியன் மறைப் பணியாளர்களின் மறையுரை இடம்பெறும். கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு எமில்போல் அடிகளார் உற்சவத்தை நடத்தி வைப்பார். (ஒ-8)

* * *

வலி.வடக்கு, ஜூன் 4
வடமராட்சி கிழக்கு மணற்காடு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை அலங்காரக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
4 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை திருவிழாக் கொடியேற்றமும் தொடர்ந்து தினமும் மாலை 4.30 மணிக்கு நவநாள் வழிபாடு ஆராதனைகளும், எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் திருப்பலியும், மறுநாள் 13 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 7 மணிக்கு திருவிழாப் பூசையும், கூட்டுத் திருப்பலியும் நடைபெற்று திருச்சொரூபப் பவனியுடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும்.
வருடாந்தத் திருவிழா ஆராதனை வழிபாடுகள் மணற்காடு பங்குத் தந்தை அருட்திரு எல்மோ அடிகளார் நடத்தி வைப்பார். (ஒ-8)

## திராட்சைப்பழ 'சீசன்' ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்.மாவட்டத்தில் விளைவிக்கப்பட்ட திராட்சைப்பழம் தற்போது யாழ்.நகரிலுள்ள பழக்கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளது.
கிலோ ரூபா 400 ஆக இது விற்பனை செய்யப் படுகிறது.
அதே நேரத்தில் வெளியூர் திராட்சைப் பழம் சிவப்பு நிறத் திலானது கிலோ ரூபா 800 ஆகவும், கறுப்பு நிறத்திலானது கிலோ ரூபா 720 ஆகவும் பழ வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது. (ந-51)






பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.



மந்திகை கண்ணகை அம்மன் கோயிலில் வைகாசி விசாகப் பொங்கல் இடம்பெற்ற போது பக்தர்கள் கோயிலுக்கு வந்து தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். அதன் போது... (ந-253)


## இடமாற்றம்

மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆளணி மீள் நிரப்பல் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றும் இரண்டு தொழில் நுட்ப அலுவலர்கள் யாழ். மாநகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
தொழில்நுட்பவியலாளர் சேவை விசேட தரத்தைச் சேர்ந்த நடராஜா சிவபாத சுந்தரம், சேவையின் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த நடராசா கேதீஸ்வரன் ஆகியோரே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ந-9)

## தற்கொலை எண்ணத்தில் இருந்து விடுபட இலவச ஆலோசனை மையம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
தற்கொலை உணர்வில் உளப் பாதிப்புக்கு உள்ளவர்களின் மனமாற்றத்துக்கான ஆலோசனைகளை இலவசமாக வழங்க யாழ்ப்பாணத்தில் கைகொடுக்கும் நண்பர்கள் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிலையத் தலைவர் தி.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சுமத்ரயோ தொண்டு நிறுவனத்தின் 11 ஆவது கிளையாக யாழ்ப்பாணத்தில் கடந்த 4 மாத காலமாக 'கைகொடுக்கும் நண்பர்கள்' சேவையை ஆரம்பித்துள்ளது. இங்கு தற்போதைய சூழலுக்கு ஏற்ப தற்கொலையைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
இல. 104, நான்காம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது நிலையத்தில் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர்கள் சமூக சேவைகளுக்காக எம்முடன் இணைந்து இலவச சேவையை வழங்கி வருகிறார்கள்.
தினமும் 4 மணி நேரம் நடைபெறும் எமது சேவைகளை தற்கொலை எண்ணத்துடன் உள ரீதியாகப் பாதிப்படைந்து அவதிப்படுவோர் எம்மோடு இணைந்து ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ்ப்பாணத்தில் தற்போதைய சூழலில் இவ்வாறான மனநிலைகளில் பலர் அவதிப்படுகின்றனர். ஆனால் அதற்கான வழிமுறைகள், ஆலோசனைகள் இல்லாமல் திண்டாடுகிறார்கள். இதனால் எதிர்பாராத தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.
எனவே எமது நிலையத்தில் உள்ள உளவள ஆலோசகர்களிடம் தேவையான ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ந-14)

## நல்லூரில் இன்று கற்பூரத் திருவிழா



தொல்லைவினை தீர்க்கும் நல்லைக் கந்தன் ஆலயத்திலே இன்று கற்பூரத் திருவிழா. அழகன் முருகன் அலங்காரக் கந்தனாக அடியார்க் கருளும் பெருமானாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் தலம் நல்லூராகும்.
இன்று மணவாளக்கோலம் காணும் நல்லைக் கந்தப் பெருமானுக்கு பகல் சகஸ்ர சங்காபிஷேகம். இந்த அருள்மிகு அபிஷேகத்தைக் கண் குளிரக் கண்டுகளிக்க அடியார் கூட்டம் அலைமோதும் காட்சி பக்திபூர்வமானது.
முருகன் என்றாலே அழகன்தானே! அந்த அழகே உருவான ஆறுமுகப் பெருமானுக்கு இன்று மாலை திருக் கல்யாணம். மாப்பிள்ளைக் கோலத்திலே வள்ளி தெய்வானையுடன் வீற்றிருக்கும் அழகுகாண பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். அத்தனை அழகு இந்த அருட்காட்சி.
அழகான தண்டிகையிலே ஷண்முகப் பெருமான் திருவீதி வலம் வருகின்ற காட்சி அற்புதமானது. வள்ளி தேவசேனாபதியாக முருகன் வலம் வரும் போது முன்னே கற்பூர ஒளி பிரகாசிக்கும். அந்த ஒளியிலே ஆறுமுகனைக் கண்டு ஆனந்தமடையும் பொன்னான நன்னாள் இன்றாகும். இது அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்.
புனித புண்ணிய ஸ்தலமான இந்த நல்லூரில் மட்டும் அடியார் கூட்டம் அலைமோதக் காரணம் என்ன? இங்கு எழுந்தருளியுள்ள வேல் மிகவும் சக்தி வாய்ந்தது. வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் சக்திவேல் இந்த நல்லூர் மூலஸ் தானத்திலே ஒளிவீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.
அடியவர்களின் அல்லல் போக்கி ஆனந்த வாழ்வளிக்கும் அருட்கந்தன் பேரருட்கருணை சொல்லில் அடங்காது. அடியார்களின் நேர்த்திகளை எல்லாம் பூர்த்திபண்ணுகின்ற வேலாயுதமாக வீற்றிருக்கும் முருகனின் அருட்பிரவாகம் எல்லையில்லாதது. அந்த அழகன் முருகனின் ஆனந்த கோலாகலமான அற்புதக் கற்பூரத் திருவிழாவை இன்று கண்டு தரிசித்து அவனது அருட்பிரவாகத்திலே மூழ்கித்திளைக்க நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

*இராசையா ஸ்ரீதரன்*

## 3 வீதத்தால் அதிகரித்தது தாய் சேய் இறப்பு வீதம்

### யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் தாய், சேய் இறப்பு வீதம் அதிகரித்துள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
முன்னதாக 11 வீதமாக இருந்த தாய் சேய் இறப்பு வீதம் கடந்த வருடம் 3 வீதத்தால் அதிகரித்து 14 வீதமாக உள்ளது.
மத்திய சுகாதார அமைச்சிலிருந்து வருகை தந்த அதிகாரிகள் யாழ்.மாவட்டத்தில் தாய், சேய் இறப்பு வீதம் தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.
அதன்போதே யாழ்.மாவட்டத்தில் முன்னைய வருடத்தை விட கடந்த வருடம் தாய் சேய் இறப்பு வீதம் அதிகரித்துள்ளமை தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.
தாய் சேய் இறப்புக்கான காரணம், அதனைத் தடுப்பதற்கான [illegible] கள் தொடர்பில் இதன்போது ஆலோசனை வழங்கப்பட்டது.
யாழ்.மாநகர சபை உட்பட சில பிரிவுகளில் குடும்பநல தாதியர் பற்றாக் குறை காணப்படுகிறது. அதுவும் தாய் சேய் இறப்புக்கு காரணம் என்று கூறப்பட்டது.
இது தொடர்பில் கேட்ட போது:
40 குடும்ப நல தாதியருக்குப் பற்றாக் குறை நிலவுகிறது. யாழ்.மாநகர சபையிலும் குடும்ப நல தாதியருக் குப் பற்றாக்குறை நிலவுகிறது. அங்கு [illegible] பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்றார் மருத்துவர் கேதீஸ்வரன். (ந-4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு வயது வித்தியாசமின்றி தோற்றலாம்

## புதிய பிரமாணக் குறிப்பு பாடசாலைகளுக்கு

கொழும்பு,ஜூன் 4

அரச பாடசாலை மாணவர்களுக்காக பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் சகல மாணவர்களும் வயது வித்தியாசமின்றி தோற்ற அனுமதிக்கப்படுவர்.

இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் டப்ளியூ.எம்.எம்.ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இந்நடைமுறை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் இருந்து பின்பற்றப் படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைவாக திருத்தப்பட்ட பரீட்சை பிரமாணக் குறிப்பு சகல பாடசாலை களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தப் புதிய பிரமாணக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஐந்தாம் தர புலமைப் பரீட்சையின் அடிப்படையில் உதவிப் பணம் வழங்குவதெற்கென பதினொரு வயதுக்கு குறைந்த, பத்து வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மாத் திரம் தகைமை பெறுவர். பரீட்சைக்கு தோற்றி 70 புள்ளிகளைப் பெறும் சகல மாணவர்களுக் கும் சான்றி தழ்கள் வழங்கப்படும். எனினும் சித்தி என்ற பதம் பயன்படுத்தப்படமாட்டாது.

சில பாடசாலைகளில் இந்தப் பரீட்சைக்கு திறமையான மாணவர்களை மாத் திரம் தோற்ற வைத்து சித்தி வீதத்தை காட்டி பிரபல்யப் படுத்தும் நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கிலும், சகல மாணவர்களையும் பரீட்சைக்கு தோற்ற வைக்கும் நோக் கிலும் புதிய பிரமாண விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கைதடி வளர்மதியில் சிறப்பாக நடக்கும் மாலைநேர வகுப்புகள்

கைதடி, ஜூன் 4

பாடசாலை மாணவர்களின் நலன்கருதி கைதடி வளர்மதி கல்விக் கழகம் மாலை நேர வகுப்புக்களை நடத்தி வருவதாக வளர்மதி கல்விக் கழகத் தலைவர் திருமதி.த.பிரேமலா தெரிவித்தார்.

தகுதிமிக்க ஆசிரியர்கள் பலர் இந்தக் கற்றல் சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத் துடன் இந்த மாலை நேர கற்கை நெறியில் பங்கு கொள்வதாகவும், மாணவர்களின் நலன் கருதி சுவிஸ் வாழ் அங்கத்தவர் சி.குவிந்தன் தம்பதிகள் மாணவர்களுக்கு இலவசமாக கற்றல் உபகரணங்களை வழங்க முன் வந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, பெற்றோர்களும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை நேரடியாக வந்து அவதானிக்கின்றனர் என்று மகிழ்ச்சி தெரிவித்தார். (ஒ-288)

**Laptop-for Sale**

Model No. X402CA-WX060H(Brand new)
Intel®core™ i7-3517U,1.9GHz boost upto
3.0GHz, 4GB Ram, 500GB Hard disk,
Slim Model,1.65kg Rs. 129,000
Tel: 077 566 0414
(37939/5-6)

**TVகள் மலிவு விற்பனை**

மலிவு விலையில் Sony Wega Flat TV கள் 21" - 12,000/= முதல், 25" 13,000/=, 29" - 16,000/=,
பனசோனிக் (Panasonic) 29" 15,000/=,
DTS அம்பளிபயர், Box வகைகள்,DVD - 3,000/=.
தொடர்பு: 077 044 0570
(37956)(4&5) 56, K.K.S. றோட், சுன்னாகம்.

## மோ.சைக்கிள் சறுக்கி காயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம்,ஜூன் 4

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் வீதியில் போடப்பட்டிருந்த சல்லிக் கற்கள் சறுக்கி விழுந்து படுகாயமடைந்து கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது மறுநாள் அவர் உயிரிழந்தார். மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தை அண்மித்த பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றிருந்தது.

சம்பவத்தில் சரசாலை தெற்கைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி (வயது-50) என்பவரே சாவடைந்தவர் ஆவார்.

வழமையாக அவர் மது அருந்துபவர் என்றும் அவ்வாறான நிலையிலேயே சல்லிக் கற்கள் மீது பயணித்த வேளை சறுக்கி விழுந்து தலையில் படுகாயமடைந்தார் என்றும் உறவினர்கள் மரண விசாரணையில் தெரிவித்தனர். விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப் படைக்கப்பட்டது. (ஒ-ஐ-4)

## பருத்தித்துறை வைத்தியசாலைக்கு குழந்தை வைத்திய நிபுணரை நியமிக்குமாறு கோரிக்கை

வடமராட்சி,ஜூன் 4

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு குழந்தை வைத்திய நிபுணர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முதியோர் விடுதியைத் திறக்க வந்திருந்த மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் திருமதி ஜூடி, மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆர்.ரவீந்திரன், யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோரிடம், வைத்திய அத்தியட்சகர் டாக்டர் தா.விநோதன், மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சியாமளன் ஆகியோர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

மகப்பேற்று சிகிச்சைகள் சிறப்பாக நடைபெறுவதால் பிரசவிக்கும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க குழந்தை வைத்திய நிபுணர் அவசியம் என அந்தக் கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

குழந்தை வைத்திய நிபுணர் ஒருவரை நியமிக்க உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என மாகாண வைத்திய அதிகாரிகள் குழுவினர் உறுதி அளித்தனர். (ஒ-8)

## நட்புறவுக் கழகத்துக்கு புதிய நிர்வாக சபை

கைதடி, ஜூன் 4

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவுகள் கடந்த வாரம் கைதடி வளர்மதி சனசமூக நிலையக் கேட்போர் கூடத்தில் கழகத்தின் தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றன.

மேற்படி கழகத்தின் இந்த ஆண்டுக்கான தலைவராக கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர் இ.கந்தசாமியும், செயலாளராக யாழ். போதனா வைத்தியசாலையின் ஓய்வுநிலை உத்தியோகத்தர் வே.சின்னத் தம்பியும், பொருளாளராக யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர் சி.நிஷாகரனும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் பதினாறு பேர் கொண்ட புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ஒ-288)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த,
32 வயது, 2இல் செவ்வாய், 14½ பாவம்,
Soft ware Engineer
High Skill Migration U.K.
(தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்)
தொடர்பு 071 057 2519 (37961)(5-6)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா — கௌரவ சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்)

எமது வாழ்விற்கு ஒளி ஏற்றிய
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
கௌரவ சில்வேஸ்திரி அலன்ரின் (SA. உதயன்) அவர்களையும்
ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்
கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்களையும்
நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், நல்லூர் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளருமான
அம்பலம் இரவீந்திரதாசன் (J.P) அவர்களையும்
மக்கள் பணி தொடரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கந்தசாமி கமலேந்திரன் (கமல்) [37967](2.6) — அம்பலம் இரவீந்திரதாசன் (J.P)

நல்லூர் பிரதேசம், புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்.

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை மத்தியாஸ்

*(முன்னாள் உபதலைவர், நகரசபை பருத்தித்துறை)*



பருத்தித்துறை, கடற்கரை வீதியை பிறப்பிடமாகவும் போயிட்டி, இளவாலையை வசிப்பிடமாகவும் தற்பொழுது நோர்வேயை வாழ்விடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை மத்தியாஸ் 01.06.2013 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ்-எலிசபெத் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மேரி புஸ்பம் மரியாம்பிள்ளையின் அன்புக் கணவரும், அன்ரன் ஜீவா (நோர்வே), ஆன் பற்றிமாதேவி (இலங்கை), லூட்ஸ் எலிசபெத்ராணி (நோர்வே), ஆவே மரியா வதனி (நோர்வே), எமில் தோமஸ் பாபுஜி (ஜேர்மனி), டொன்வின்சலஸ் ராஜன் (நோர்வே), பீற்றர்பிள்ளை ரஞ்சன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவறஞ்சிதம் ஜீவா, F.X நிக்கலஸ், அன்ரன் செல்வராஜா, காலஞ்சென்றவரான அருள்ஞானமலர் (ஐயாமணி) மற்றும் யூலியற் பாபுஜி, மேரி கொசெப்ரா ராஜன், விஜயராணி ரஞ்சன் ஆகி யோரின் பாசமிகு மாமனாரும், பிரபா, யது, ஜென்சன், ஜேன் காலஞ்சென்ற றொபேட் மற்றும் றொட்ணி, கங்கா, வதனா, றொபின், மினி, நிர்மலன், வஜிரா, ஜொஸ், கிறிசாந், மெறிற்றா, கிறிஸ்வின், நிரோஷ், டெனிஸ், தர்மமாலினி, ஜெஸ்லி குமுதினி, றஜனி, உதயன், ராசன், ஞானம், ராணி, சுஜீபன் ஆகியோரின் பாச மிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:

| | |
|---|---|
| ஜீவா (மகன்-நோர்வே) | : 0047 450 22363 |
| பாபுஜி (மகன்- ஜேர்மனி) | : 0049 2464 8737/ 0049 1521 182 7765 |
| ராஜன் (மகன்-நோர்வே) | : 0047 9062 5010 |
| ரஞ்சன் (மகன்-நோர்வே) | : 0047 9224 9187 |
| தேவி (மகள்-இலங்கை) | : 0094 2137 35055 |
| செல்வா (மருமகன்-நோர்வே) | : 0047 401 41512 |

(37958) (6.11)

தகவல் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி சுந்தரம் (ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை போக்குவரத்துச் சபை)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரம் 02.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கந்தத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னு- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், ஆறுமுகம், சிவக்கொழுந்து (கனடா), காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சபாபதி, நடராஜா ஆகியோரின் சகோதரனும், சரஸ்வதி,புனிதவதி,பகவதி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சறோசா,தேவிகா, விஜயகுமார்(லண்டன்),வசந்தகுமார் (லண்டன்), சித்ரா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம்(அப்புலிங்கம்) மற்றும் தயாளினி(லண்டன்), செல்வி (லண்டன்), நகுலேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், தஷாங்கன்,கிருத்திகா, கஜலக்சிகா (லண்டன்), கீர்த்தனா(லண்டன்), கார்த்திகா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.06.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00மணியளவில் தகனக்கிரியைக்காக சுன்னாகம்,கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம். (37956)(5.6) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தம்பிஜயா அன்ரன் துரைசிங்கம் (J.P)

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)



யாழ்ப்பாணம், இளவாலை வடக்கு, பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும், இல.23, மகாறம்பைக்குளம் வீதி, பூந்தோட்டம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட தம்பிஜயா அன்ரன் துரைசிங்கம் நேற்று (03.06.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இம்மனுவேல் தம்பிஜயா (ஆயுள் வேத வைத்தியர்- ஓய்வுபெற்ற PWD ஓவசியர்) - திரேசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும்,புஸ்பவதி துரைசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி வவுனியா கிளை) அவர்களின் பாசமிகு கணவரும், ஜெயந்தன் (மோட்டார் போக்குவரத்து அலுவலர், பிரதேச செயலகம் - வவுனியா), ஜெசிந்திரன் (நில அளவை உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம், கிளிநொச்சி), ஜெயானந்தன் (ஆசிரியர் - வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், சட்டபீடம் கொழும்பு திறந்த பல்கலைக்கழகம்), ஜெயாகரன் (பேராதனை பல்கலைக்கழகம் பொறியியல் பீட 2ஆம் வருட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகன சுதாயினி, நர்த்தனா (யாழ். வைத்தியசாலை ஆய்வு கூட பரிசோதகர்) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஞானரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அன்ரன் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி), பற்றிமா, இராஜகுலசிங்கம், றீற்றா, மரியா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அஜந்தன், சுயந்தன், சிந்துஜன், அஜீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.06.2013) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இல.23, மகாறம்பைக்குளம் வீதி, பூந்தோட்டம், வவுனியாவில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இருந்து இறுதித் திருப்பலிக்காக வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

இல.23, மகாறம்பைக்குளம் வீதி,
பூந்தோட்டம், வவுனியா. (35262)(45.6) தொ.பே. 024 492 5799

சின்னப்பல்லவராயன்கட்டு கிராமத்தில்

## நிரந்தர வீட்டுத் திட்டத்துக்கு தெரிவான 3 குடும்பங்கள் நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு

பூநகரி, ஜூன் 4

பூநகரியின் சின்னப்பல்லவராயன்கட்டுக் கிராமத்தில் நிரந்தர வீடுகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களில் மூன்று குடும்பங்களின் பெயர்கள் நீக்கப்பட்டமைக்கு கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சின்னப்பல்லவராயன்கட்டு கிராமத்தில் 48 குடும்பங்கள் வசித்து வருகின்ற போதிலும் முதற் தடவையாக 25 குடும்பங்கள் நிரந்தர வீடுகளை பெற்றுக் கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டு பெயர் விவரங்களும் வெளியாகின. தற்போது மூன்று குடும்பங்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து கிராம மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பெயர்கள் நீக்கப்பட்டமைக்கு இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமது திருமணப் பதிவை 2010 ஆம் ஆண்டு மேற்கொண்டதாகக் கிராம அலுவலரினால் கூறப்பட்டது.

ஆனால் 2011 ஆம் ஆண்டு திருமணப் பதிவை மேற்கொண்ட குடும்பங்களுக்கும் நிரந்தர வீடுகளை வழங்குவதற்கான பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக பிரதேச செயலரிடம் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வீடுகளை அமைப்பதற்கு சின்னப்பல்லவராயன் கட்டிலுள்ள தென்னங்காணியில் அரை ஏக்கர் வீதம் நிலம் வழங்கப்பட்டுள்ளது.**

வீடுகளை அமைப்பதற்கு சின்னப்பல்லவராயன்கட்டிலுள்ள தென்னங்காணியில் அரை ஏக்கர் வீதம் நிலம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

**TATA லொறி தண்ணீர் பவுசர் விற்பனைக்கு**

வீதி புனரமைப்பு வேலையுடன் கூடிய தண்ணீர் பவுசர் லொறி ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 411 2809

## நன்றி தெரிவிப்பு



எமது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் இவர்களின் பிள்ளைகளின் ஆரம்ப கணினி அறிவை விருத்தி செய்யும் நோக்கத்துடன் சமாசப் பணிமனையில் பயிற்சி நிலையம் ஆரம்பித்து கணினிப்பயிற்சி வழங்குவதற்காக


**கௌரவ கே.என் டக்ளஸ் தேவானந்தா**

அமைச்சர் (பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு) அவர்களிடம் கணினி இயந்திரங்கள் வழங்கி உதவுமாறு கோரிக்கை விடுத்ததற்கு அமைவாக 05 கணினி இயந்திரங்களை வழங்கி உதவியமைக்காக எமது அங்கத்துவ நிறுவனங்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)
இல. 52, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 5072 (C/9586)(6.7.11)

# மரண அறிவித்தல்

## V.R. வடிவேற்கரசன்



(பிரபல வர்த்தகரும், முன்னாள் ஸ்ரீ லங்கா டயர் அசோசியேசன்ஸ் தலைவரும், யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின், முன்னாள் தலைவரும், கிரீன்லேன்ஸ் ஹோட்டல் முன்னாள் தலைவர்/ நிர்வாகப் பணிப்பாளரும், ஸ்ரீ பிரதர்ஸ், வி.ஆர்.வி.டி. ரவல்ஸ், வி.ஆர்.வடிவேற் கரசன் நிறுவனங்களின் தலைவரும் ஆவார்)

தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி பிள்ளை இராஜசேகரம் வடிவேற்கரசன் அவர்கள் 01.06.2013 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜசேகரம் - அரசரத்தினம் அம்மா இராஜசேகரம் ஆகியோரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான நீதிராஜா (முன்னாள் செனட்டர்) - திலகவதி நீதிராஜா அவர்களின் மருமகனும், கப்பலோட்டிய தமிழன் வீரகத்திபிள்ளையின் பேரனும், பத்மினி தேவியின் பாசமிகு கணவரும், திபாகரன், திபாகரி, தயாகரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஸ்தூரி, சபேசன், தினேஷ்குமார் ஆகியோரின் மாமனாரும், தாஷினி, தினா, தரன், பிரித்திகா, கேஷினி, அட்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தற்பொழுது அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. நாளை (05.06.2013) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 11 மணியள்வில் கனத்தை இந்து மயானத்தில் இந்து முறைப்படி தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

(C/8699)(2.6)

இல.25, 27 ஆவது ஒழுங்கை (Off 5 th Lane), கொழும்பு - 03. தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வராவில் உலக சுற்றாடல் தினம்

தென்மராட்சி,ஜூன் 4

உலக சுற்றாடல் தினத்தையொட்டி மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் நாளை புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ளது. காலை பிரார்த்தனையை அடுத்து "அநாவசிய நுகர்வினை கைவிடு வோம்" என்னும் தலைப்பிலான உரையும், அதனைத் தொடர்ந்து கழிவு முகாமைத் துவம் தொடர்பான உரையும் செய் முறை விளக்கமும் மாணவர் களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செய் முறை விளக்கமும் வழங்கப்படும். மிக விரைவில் உலகம் முழுவதும் சுத்தமான நீர் அரிதாகும் என உறுதியான எச் சரிக்கை விடும் அளவுக்கு நிலைமை மாறி யுள்ளதால் ஒவ்வொரு மாணவரும் மரநடு கையை மேற்கொள்வதற்கு ஏதுவாக வித்தியா லய வளாகத்தில் மரம் நடுகையும் இடம்பெற வுள்ளது. (ஒ-9)


## கூறுவிலை கோரல்

கல்லூரியின் விளையாட்டுத் துறைக்கான பின்வரும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குனர் களிட மிருந்து கோரப்படுகின்றன.

1. கோலூன்றிப் பாய்தல் கோல் (pole) - 02
2. கோலூன்றிப் பாய்தல் குறுக்குச் சட்டம் - 01
3. உயரம் பாய்தல் மெத்தை - 01
4. சட்டவேலி - 40

மேற்படி பொருள்களை வழங்க முன்வருவோர் தமது கேள்விப் பத்திரங்களை அளவெட்டியில் அமைந்துள்ள யா/அருணோதயக் கல்லூரியின் அலுவலகத்தில் 05.06.2013 ஆம் திகதி மு.ப. 10.00 மணி யிலிருந்து 20.06.2013 வரை அலுவலக நேரத்தில் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 100/= ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மூடிய கூறுவிலை அனைத்தும் 21.06.2013 மு.ப. 10.00 மணிவரை பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். கூறுவிலைகள் அனைத்தும் 21.06.2013 மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும். மேலதிக விவரங்களை 0212241072 இலக்க தொலைபேசி ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**யா/அருணோதயக்கல்லூரி** (சி/9589)(10.6)

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - அளவெட்டி.**


## மாடுகளுக்கு கால்வாய் நோய் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்து

கரவெட்டி ,ஜூன் 4

கரவெட்டி பிரதேச அரசினர் கால் நடை வைத்திய நிலையத்தில் மாடுகளுக்கு கால்வாய் மற் றும் கொள்ளை நோய்களுக் கான சிகிச்சைகள் அளிக்கப் பட்டு வருகின்றன.

மாடுகள் மத்தியில் இந்த நோய் கள் தற்போது அதிகமாகக் காணப்படுவதால் கால்நடைகளை வளர்ப்போர் மாடுகளுடன் வைத்திய நிலையத் துக்கு வந்து சிகிச்சைகளை மேற் கொள்ளுமாறு கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி சு.மகேந்திரராஜா கேட் டுள்ளார்.

அத்துடன் மாடுகளுக்கு காதில் இலக்கமிட்டுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. மாடுகளின் பாதுகாப்புக் கருதி இலக்கத்தை இட வைத்திய நிலையத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-8)

## ஆசிரியையின் சங்கிலி தப்பியது பறிபோனது அவரின் கைப்பை

### திருநெல்வேலியில் நேற்று துணிகரம்

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண் டிருந்த ஆசிரியையின் மூன்று பவுண் தங்கச் சங்கிலியை பறிக்க முயன்ற போதும் அது தோல் வியில் முடிந்தது. ஆசிரியை குடையால் மறைத்து குளறிய போது தடுமாறிய இரு வாலிபர்கள் சைக்கிள் 'ஹாண்டி'லில் தூக்கியிருந்த கைப்பையைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் திருநெல் வேலி வேதாந்த மடத்துக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் கற்பிக் கும் திருமதி சுபாங்கி சுஜீபன் பாடசாலை முடிந்து பரமேஸ்வரா வீதியில் உள்ள வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கும் போது மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இரண்டு வாலிபர்கள் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுப்பதற்கு முயன்றனர். ஆசிரியை சுதாகரித்துக் கொண்டு குடையால் தடுத்து சத்தமிட்டார். அதை அடுத்து அவர்கள் தப்பியோடும் போது கைப்பையை கழற் றிக் கொண்டு ஓடித்தப்பினர். கைப்பையில் தேசிய அடையாள அட்டை மற்றும் கல்வித் திணைக்களம் வழங்கும் ஆசிரியர் அடைய்ாள அட்டை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-11)

## மரண அறிவித்தல்கள்

### செ.வேலுப்பிள்ளை கனகசிங்கம்
*(முன்னாள் உரிமையாளர் - தெணிவாசா பேக்கரி)*



பருத்தித்துறை, 2 ஆம் குறுக்குத்தெருவைப் பிறப் பிடமாகவும், ஆஸ்திரே லியா மெல்பேர்னை வசிப் பிடமாகவும் கொண்ட செ.வேலுப்பிள்ளை கனக சிங்கம் 01.06. 2013 மெல் பேர்னில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான வேலுப்பிள்ளை - நாக முத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், செல்வி தில்லை நாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), செல்வி தனலட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை), Dr. காசிநாதன் (ஆஸ்திரேலியா), கிருஷ்ணன் (கனடா), திருமதி திலகவதி (கனடா), கமலநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரனும், ஜெகநாதன், வசந்தி, நளினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2013) செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியா நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு தகனம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை,
021 226 3619 (2.6)(சி/9588)

தகவல்: சகோதரர்கள்
**சி.பத்மநாதன் (J.P)**
(துணைத் தவிசாளர்)

### வேலும்மயிலும் நித்தியானந்தர்
(ஆனந்தன்) (உரிமையாளர்- டிவாசினி ஸ்ரோர்ஸ், 191, கொழும்பு வீதி, கண்டி )



பொலிகண்டியைப் பிறப்பிட மாகவும் கண்டியை வசிப்பிட மாகவும் கொண்ட வே. நித்தியா னந்தம் 02.06.2013 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந் துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான வேலும்மயிலும் - செல் லம்மா தம்பதியரின் அன்பு மகனும், கதிர்காமத்தம்பி - காந்த மணியம்மா தம்பதியரின் மருமகனும், மதுமதியின் அன்புக் கணவரும், டிவாசினி, சுபிகரன், தனுஷிகா, கரிகரன் ஆகியோரின் அன்புத் தந் தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2013) செவ்வாய்க்கிழமை காலை பொலி கண்டியில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்திரகாளிகோயிலடி,
பொலிகண்டி, (35394) (45.8)

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 033 3398

## சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் 10 பேர் கௌரவிப்பு

அச்சுவேலி, ஜூன் 4

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பத்து சமுர்த்தி அபி விருத்தி அலுவலர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது.

சர்வதேச புகை எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கொடித் தினத்தில் ஆகக் கூடுதலான தொகையை திரட்டியவர்கள் என்ற வகையில் பத்துப் பேர் பாராட்டிக் கௌரவிக் கப்பட்டனர்.

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி குமாரசுவாமி மண்ட பத்தில் நடைபெற்றது.

கௌரவிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் பெயர் விவரம் வருமாறு:- சிவசுப்பிரமணியம் கேதீஸ்வரன், அருந்தவ ராசா வதனராசா, குமரகுருநாதன் சிவகுமார், மாணிக்கம் சந்திரசேகரம், செல்லத்துரை சிவ குமார், பரமானந்தம் சேவற்கொடியோன், மகாதேவன் சுதர்ஸன், மனோரஞ்சன் குமு தினி, சிவசுப்பிரமணியம் கருணாகரன், தர்மலிங்கம் கோகிலாந்தன். (ஒ-11)

கரணவாய் ச.ச.நிலைய கட்டடப் பணிக்கு

## 5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்க

வடமராட்சி, ஜூன் 4

கரணவாய் தெற்கு, செல்வா புரம், இளங்கோ சனசமூக நிலையத்தின் கட்டடப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கரவெட்டி பிரதேச அபிவிருத்திக் குழுவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

குழுவின் தலைவரும், கரவெட்டிப் பிரதேச செய லரு மான ச.சிவஸ்ரீயிடம் இளங்கோ சனசமூக நிலையச் செயலாளர்கள் மகாலிங்கம் அந்தக் கோரிக்கைக்கான மனுவை சமர்ப்பித்துள்ளார். பின் தங்கிய கிராமத்தின் அறிவு வளர்ச்சி மற்றும் தகவல்களை அறிந்து கொள்ள வசதியாக செல்வா புரம் கிராமத்தில் சனசமூக நிலையம் ஒன்று நிர்மாணிக்கபட்டு வருகின்றது.

இதற்கென ஆரம்பத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்டத் தின் மூலமும், அதனைத் தொடர்ந்து மாகாண சபை மூலமும் தலா 5 லட் சம் ரூபா நிதி கிடைத்தது. இந்த நிதிகள் மூலம் கட்டட நிர்மாணப் பணி களின் பெரும் பகுதி யைப் பூர்த்தி செய்துள்ளோம். எஞ்சிய பகுதி வேலை களைப் பூர்த்தி செய்ய இன்னமும் 5 லட்சம் ரூபா தேவைப்படுகின்றது. அந்த நிதியை ஒதுக்கி உதவுமாறு வேண்டுகின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)


### வீடும் காணியும் விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய் வீதியில், ஆலடி யில் வீடும், கிணறும், தென்னை களும் அடங்கிய 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொ. பே: 077 968 0518 / 021 373 5278


## கண்ணீர் அஞ்சலி



எமது சக அலுவலர்
**செ.பிருந்தன்** அவர்களின்
அன்புத் தந்தையாரான

**அருணாசலம்**
**செந்திவேலாயுதம்**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சக அலுவலர்கள்**
**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
**464 ஏ, ரி.பி. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10.**
(37971) (10,6)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வைத்திலிங்கம் சிவபாக்கியம்



தனங்கிளப்பு, சாவகச்சேரியை பிறப்பிட மாகவும் பழங்கிணற்றடி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவபாக்கியம் (30.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறு முகம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.05.2013) வியாழக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழங்கிணற்றடி,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (c/9587) (6.7.11)

தகவல்:
குமாரசாமி பசிந்தா (மருமகள்)
(நல்லூர் பிரதேச சபை நூலகர்)

### கந்தையா திருஞானசம்பந்தர் (அம்பிகாபதி)
*(ஓய்வுபெற்ற வைத்தியசாலை, பரிசாரகர்)*



சுண்டுக்குளியைப் பிறப்பிட மாகவும், அப்பிலாணை லேன், கோப்பாய் மத்தியை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா திருஞானசம்பந்தர் 02.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கந்தையா - கற்பகம் தம்பதி யரின் பாசமிகு மகனும் காலஞ் சென்றவர்களான இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூரணத் தின் அன்புக் கணவரும் ரோகினி (கனடா), சோதிலிங்கம் ஆகி யோரின் அன்புச் சகோதரரும், லலிதாதேவி, சாரதாதேவி, நிர்மலாதேவி (இத்தாலி), குலதேவா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் கனகரத்தினம், பத்மநாதன் (இத்தாலி), சாந்தினி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும், தாரணி - கபிலன், முகுந்தன், ஐங்கரன், சிந்துஜா, சரவணன், பால்ராஜ் (இத்தாலி), சுதர்சன் (இத்தாலி), நிறஞ்சனா (இத்தாலி), கோகுலவதனன் (இத்தாலி), சுஜிதா - கிரிஷாந்தன் (கனடா), நிஷாந்தன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஹன்சிகா, யதுஷன் (கனடா), சஞ்ஜித் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (06.06.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்பிலாணை லேன்,
கோப்பாய் மத்தி,கோப்பாய். (2.6)(37969)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு வேலையாள்கள் தேவை.

★ சமையலாளர்கள்.
★ சமையல் உதவியாளர்கள்
★ உணவு பரிமாறுபவர்கள்
★ ரீமேக்கர்

தகுந்த சம்பளம், தங்குமிட வசதி உணவு வழங்கப்படும். 0779758997

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனை

கோப்பாய்- மானிப்பாய் வீதியில் இராஜ வீதி, உரும்பிராய் சந்திக்கு அருகில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு.
தொடர்புக்கு: (35395)(23-6-7)
0778297262- 021 2056029

## வீடு விற்பனைக்கு

கனகரட்ணம் வீதி, அரியாலையில் (மாம்பழம் சந்திக்கு அருகில்) சகல வசதிகளுடன் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771965548

## சுன்னாகத்தில் உங்கள் நளின்....

எமது அனைத்து சேவைகளும் உள்ளடங்கலாக 116G K.K.S வீதி, சுன்னாகம். எனும் முகவரியில்.
வருகின்ற 9ம் திகதி முதல் சேவை மையத்துடன் கூடிய காட்சியறை.

**Nalin City Show Room**

OUR SERVICES:-
- LAPTOPS SALES & REPAIR
- BRANDED/ASSEMBLED PCS
- PRINTERS SALES & REPAIR
- TONERS & CARTRIDGES SALES
- OTHER COMPUTER ACCESSORIES SALES & REPAIR
- CCTV CAMERA SYSTEM INSTALLATION & MAINTENANCE
- NETWORKINNG & MAINTENANCE
- INTERCOM INSTALLATION & MAINTENANCE



NALIN INFORMATION TECHNOLOGIES (PVT).LTD
195/2,Palaly road, Parameswara Junction,Palaly Road,Jaffna.
TP:0212221121/1166 HOTLINE-0777667975
Nalin City Show Room
116 G, K.K.S Road, Chunnakam.
TP:0212242222


## விண்ணக வாழ்வில் 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 18 - 12 - 1956
இறைவன் அடியில் 21 - 04 - 2013

04.06.2013



### மரியதாஸ் அந்தோனிப்பிள்ளை

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று 04.06.2013 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இத்தாவில் புனித பார்பறம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

சதாபுரம் இத்தாவில், பளை.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கதிரவேலு ஐங்கரன்

(கரன் அன் சாமியார் பல்பொருள் வாணிபம், திருமுறுகண்டி)

சரவணையைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஐங்கரன் (கரன்) நேற்று (03.06.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பையா கதிரவேலு (சாமியார்), காலஞ்சென்ற நகுலாம்பிகை தம்பதியரின் மூத்த மகனும் பொன்னுத்துரை மகாலிங்கம் (பல.நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர், அக்கராயன்), சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும் யசோதாவின் அன்புக் கணவரும் மதுமிதாவின் அன்புத் தந்தையும் செந்தூரன், தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் றமேஸ் (சிவா- கண்ணன் களஞ்சியம் நாச்சிக்குடா, முழங்காவில்), துர்க்கா, சதீஸ்குமார், சபேஸ்குமார், பகீர்தனா ஆகியோரின் மைத்துனரும் பிரணவியின் பெரியப்பாவும் குமரன், தர்சன், சுலக்சனா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஸ்கந்தபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொ.மகாலிங்கம்,
இல.243, முத்துமாரி அம்மன் வீதி,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
(37983)
தகவல்:
சுப்பையா கதிரவேலு
(சாமியார் பல்பொருள் வாணிபம், திருமுறுகண்டி)

## மரண அறிவித்தல்கள்



### முத்துக்குமாரு கனகசுந்தரம்

(மகிழுந்து ஓட்டுநர்)

தம்பாட்டி ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கனகசுந்தரம் நேற்று 03.06.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகரெத்தினம், ருக்குமணி, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கந்தையா, அன்னரெத்தினம் (செல்லக்கண்டு), காலஞ்சென்ற கந்தைஞானி (மனோன்மணி ஒலி, ஒளி அமைப்பு), தெய்வமணி, கனகமணி, பார்வதிப்பிள்ளை, ஞானசுந்தரம் (ஞானி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சசிகலா, கனகேஸ்வரி, கனகேஸ்வரன், யோகேஸ்வரன், கனகவதனி, கனகசூரியன், கனகராஜி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வாமதேவன், தவலிங்கம், சிவசோதிநாதன், கலாநிதி ஜெயகலா, நாகேந்திரன், கிஸ்ணவேணி ஆகியோரின் பாசமிகு மாமனும் இரத்தினம் (பிரான்ஸ்), தாமோதரம்பிள்ளை (அண்ணாவி), காலஞ்சென்ற சௌந்தரியம்மா, சரஸ்வதி, காலஞ்சென்ற புனிதவதி, வசந்தராணி, சிவனேசபிள்ளை, சந்திரன், உத்தமி, காலஞ்சென்ற சிவலிங்கம், காலஞ்சென்ற கிஸ்ணமூர்த்தி, கமலாதேவி, மகாதேவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மயூரதி, பிரசாந், தாரணி, பவிசன், கஜன், கஜிந்தன், யோபிதன், சபிஸகன், நஜிதா, நதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விறாட்டிமுனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பாட்டி, ஊர்காவற்றுறை.
(37975)
தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி வளர்மதி சோமசேகரம் அவர்களின் பாசமிகு தந்தை

### வே.குணரத்தினம்

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ நாவற்குழி ம.வி. கைதடி.
(சி/9590)

## மரண அறிவித்தல்

### டாக்டர் திருமதி இந்திராணி சத்தியநாதன்

(ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி, கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை, பொறுப்பதிகாரி NITM நாவின்ன மகரகம)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் திருமதி இந்திராணி சத்தியநாதன் நேற்று (03.06.2013) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முன்னாள் சுகாதாரப் போதனாசிரியரும் பாடநூலாசிரியருமான இளையதம்பி தர்மலிங்கம் பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் வயாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வயிரவப்பிள்ளை மயில்வாகனம் சாவித்திரி தம்பதிகளின் மருமகளும் சத்தியநாதனின் அன்பு மனைவியும் லௌமீகரன் (லண்டன்), பிங்களன் ஆகியோரின் அன்புத் தாயும் சுகந்தினி (லண்டன்), தக்ஷினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆர்த்திக் (லண்டன்), வைசிக்கா, சயுந்தன், அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லோகராணி பாலேந்திரன், விஜயராணி பத்மநாதன், யோகராணி, வன்னியசேகரம், தர்மராணி ஜெகநாதன், சண்முகதாசன் (முன்னாள் முகாமையாளர் ஹற்றன் நஷனல வங்கி), யுகேந்திரராஜா, நந்தகுமாரன் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான சிறிஸ்கந்தராஜா, தயாபரன், முரளிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி பத்மாவதி நன்னித்தம்பி, செல்வி தேவி அம்பலவாணர் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2013) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு ஊரெழுவில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.350, பலாலி வீதி,
(ஊரெழு பிள்ளையார் கோயில் அருகில்),
ஊரெழு கிழக்கு, ஊரெழு. 0777494941
(37980)
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி யோகேஸ்வரி முத்துக்குமாரசுவாமி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி முத்துக்குமாரசுவாமி கடந்த (01.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசுவாமியின் (Registrar - Suprem Court- Colombo) அன்பு மனைவியும் நித்திலா (Finlays Insurance Brokers, Jaffna), சுஸ்ருதன் (Srilanka Telecom- Jaff-na), சுதாகரன் (Germany), அனந்தன் (London), தேவசேனை (Norway) ஆகியோரின் அன்புத் தாயும் விநோதினி (Srilanka Telecom- Jaffna), சுகந்தினி (Ger-many), மாதினி (London), சிவகுமார் (Norway) ஆகியோரின் அன்பு மாமியும் சேரன், வர்த்தனி, சுபன், ரிஷபன், வைஷ்ணவி, சுவப்னா, சுவர்ணா, அபிரா, வராகி, அர்ஜீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.18, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.
(37982)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒட்டுசுட்டான் பொலிஸ் அணி சம்பியன்

முல்லைத்தீவு, ஜூன் 4

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான மாபெரும் கிரிக்கெட் போட்டி முல்லை மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஒட்டுசுட்டான் பொலிஸ் அணியினர் சம்பியனாகத் தெரிவாகினர்.

வெற்றி பெற்ற அணிக்கான வெற்றிக் கிண்ணங்களை முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் வழங்கினார்.

(ற-500)



### 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான மேசைப்பந்து

# சுந்தரபுரம் அ.த.க. சம்பியன்



சம்பியனாகத் தெரிவாகிய வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணியினர்.

வவுனியா, ஜூன் 4

வடமாகாணக்கல்வித்திணைக்களத்தால் மாகாண கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டிகளில் வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வட மாகாண சம்பியாகத் தெரிவாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பான நடைபெற்ற ஆட்டத்தில் முதலாம், மூன்றாம், ஐந்தாம் செற்களை வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வெற்றி கொள்ள, இரண்டாம், நான்காம் செற்களைப் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வெற்றிகொண்டது.

ஆட்ட நிறைவில் வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 3:2 என்ற செற் அடிப்படையில் வெற்றி பெற்று மாகாண சம்பியனாகத் தெரிவாகியது. (ற-86-23)



இரண்டாம் இடத்தைப் பெற்ற வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினர்.

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 4

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு நடந்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்றுசெவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள்:-

மாலை 3.30 மணி

மனோகரா விளையாட்டுக் கழகம் எதிர் றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம்.

மாலை 4.30 மணி

யங் லயன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

(ற-23)

### நக்கீரன் விளையாட்டுக் கழக உதைபந்தாட்டத் தொடர்

# டைமன்ஸை வீழ்த்தி பொமர்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன், அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக் கழகம் நடந்திய உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகமும், வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதல் பாதிஆட்டம் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இரு அணியினரும் எதிரணியின் கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

டைமன்ஸ் அணி வீரர் வீமா தனக்குக்கிடைத்த வாய்ப்பை கோலாக மாற்றி அணியை முன்னிலைப்படுத்தினார். பதிலுக்கு கோல் பெறும் பொமர்ஸ் அணியினரின் முயற்சிகள் டைமன்ஸ் கழக வீரர்களால் முறியடிக்கப்பட்டன.

இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது டைமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் தமது வியூகத்தை மாற்றினர் பொமர்ஸ் அணி வீரர்கள். பொமர்ஸ் அணியினரின் கோல் பெறும் முயற்சிகள் ஒவ்வொன்றும் டைமன்ஸ் வீரர்களால் தடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பொமர்ஸ் அணிக்கு தானாகவே ஒரு சந்தர்ப்பம் வந்து வாய்த்தது. ஆட்டத்தின் 17 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் அணி வீரர் ஆட்ட விதியை மீறியமையால் பொமர்ஸ் அணிக்கு தண்டனை உதை வாய்ப்புக் கிடைத்தது. அதைக் கோலாக மாற்றினார் பொமர்ஸ் அணி வீரர் கோபிநாத்.

இரு அணிகளும் 1:1 என்ற சமனிலை பெற்றதால் இரு அணிகளும் கோல் பெற வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டன. டைமன்ஸ் வீரர்களும் முன்னேறத் தொடங்கினர்.

வியூகத்தை மாற்றி விளையாடிய பொமர்ஸ் அணிக்கு 21 ஆவது நிமிடத்தில் எதிர்பார்த்த சந்தர்ப்பம் வாய்த்தது. தனக்குக் கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தினார் பொமர்ஸ் அணி வீரர் சாரங்கன். அவர் பெற்றுக் கொடுத்த கோலோடு பொமர்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலையானது.

ஆட்டம்முடியும்வரை டைமன்ஸ் அணியின் கோல் பெறும் பிரயத்தனம் பொமர்ஸ் அணியினரால் தடுக்கப்பட்டது. ஆட்டநேர முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் பொமர்ஸ் அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

சிறந்த ஆட்டக்காரராக பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் கோபிநாத்தும், தொடர் ஆட்டநாயகனாக அதே கழகத்தைச் சேர்ந்த சாரங்கன், சிறந்த கோல் காப்பாளராக டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

')

## பெண்கள் பிரிவுகளுக்கான கராத்தே போட்டிகள் இன்று

வலி.வடக்கு, ஜூன் 4

வடமாகாணத் திணைக்கத்தால், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 15, 17, 19 வயதுப் பெண்களுக்கான கராத்தேப் போட்டிகள் இன்று யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

15 வயது பெண்கள் ஒற்றையர் பிரிவில், காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் இம்முறை ஆறு பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

கடந்தாண்டு இடம்பெற்ற காட்டா, குமித்தே போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் முறையே வடமராட்சி துன்னாலை சிவப்பிரகாசம் வித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் கிளிநொச்சி மகா வித்தியாலய விராங்கனைகள் பெற்றுக்கொண்டனர்.

17 வயது பெண்கள் ஒற்றையர் பிரிவில் காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் இம்முறை மூன்று பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

கடந்தாண்டு இடம்பெற்ற போட்டிகளில்முதலாம்இடத்தை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய வீராங்கனையும், காட்டாவில் இரண்டாம் இடத்தை கைதடி நவீல்ட் பாடசாலை வீரங்கனையும், காட்டாவில் மூன்றாம் இடத்தையும் குமித்தேயில் இரண்டாம் இடத்தையும் முல்லைத்தீவு மகா வித்தியாலய வீராங்கனையும், குமித்தேயில் மூன்றாம் இடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலய வீராங்கனையும் பெற்றனர்.

கடந்தாண்டு இடம்பெற்ற போட்டிகளில் சம்பியனாக கைதடி நவீல்ட் பாடசாலையும் இரண்டாம் இடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண் டன.

(ற-86)

### பத்திநாதன் அருளானந்தம் வெற்றிக் கிண்ணம்

## இறுதியில் மோதுகின்றன றோயல், ஞானமுருகன்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நாவாந்துறை சென்.நீக்கிளஸ் விளையாட்டுக் கழகம் நடந்தும் பத்திநாதன்அருளானந்தம் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட் டுக் கழக அணி மோதியது.

அதில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழக அணி களமிறங்கியது. இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் கோல் எதனையும் பெறாத நிலையில், வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்கான 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 4.3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

(ற-23)



நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம், மணிவிழாவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. முதலாவது ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்கொண்ட வல்வை அணி 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

இரண்டாவது ஆட்டத்தில் தொண்டமானாறு ஒற்றுமை அணியை எதிர்கொண்ட ஆதிசக்தி அணி 4:0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா பிரதேச செயலக விளையாட்டு முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வவுனியா பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**கரப்பந்து (ஆண்கள்)**
முதலாமிடம் யங்ஸ்ரார் வி.க.
இரண்டாமிடம் ஈஸ்வரன் வி.க.

**கரபந்து(பெண்கள்)**
முதலாமிடம் யங்ஸ்ரார் வி.க.
இரண்டாமிடம் தென்றல் வி.க.

**எல்லே (ஆண்கள்)**
முதலாமிடம் யங்ஸ்ரார் வி.க.
இரண்டாமிடம் பூவரசன் வி.க.

**எல்லே(பெண்கள்)**
முதலாமிடம் நியூ லயன்ஸ் வி.க.
இரண்டாமிடம் யங்ஸ்ரார் வி.க.

**கபடி(ஆண்கள்)**
முதலாமிடம் உதயதாரகை வி.க.
இரண்டாமிடம் சென்றலைஸ் வி.க.

**கபடி (பெண்கள்)**
முதலாமிடம் யங்ஸ்ரார் வி.க.
இரண்டாமிடம் தென்றல் வி.க.

**கிரிக்கெட்(ஆண்கள்)**
முதலாமிடம் வானவில் வி.க.
இரண்டாமிடம் பரலோக மாதா வி.க.

**கிரிக்கெட்(பெண்கள்)**
முதலமிடம் யங்ஸ்ரார் வி.க.
இரண்டாமிடம் தென்றல் வி.க.

**கூடைப்பந்தாட்டம்(ஆண்கள்)**
முதலாமிடம் யங்ஸ்ரார் வி.க.
இரண்டாமிடம் யுனிபைட் வி.க.

**கூடைப்பந்தாட்டம்(பெண்கள்)**
முதலாமிடம் யங்ஸ்ரார் வி.க.
இரண்டாமிடம் பமிலியன்ஸ் வி.க.

(தொடரும்)

# பதவி துறந்தார் (?) சீனிவாசன்



சென்னையில் நடந்த பரபரப்பான பி.சி.சி.ஐ. செயற்குழுக் கூட்டத்தில் சீனிவாசன் கை ஓங்கியது. பெயர் அளவுக்கு மட்டும் தான் அவர் தலைவர் பதவியில் இல்லை. இவரது ஆதிக்கம் அப்படியே தொடர்கிறது. ஐ.சி.சி. கூட்டங்களில் இந்தியாவின் பிரதிநிதியாக சீனிவாசனே தொடர்ந்து பங்கேற்க முடியும். மொத்தத்தில் சென்னையில் நடந்த செயற்குழு வெறும் கண் துடைப்பு கூட்டமாக அமைந்தது என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. அதில் சூதாட்டத்தையோ அல்லது கிரிக்கெட்டில் நடக்கும் ஊழலை ஒழிக்கவோ எந்த ஒரு உருப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### டால்மியா தலைவர்

சீனிவாசன் தலைமைப் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, விசாரணைகள் முடிவடையும் வரை ஜக்மோகன் டால்மியா தலைமைப் பொறுப்பில் இருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சீனிவாசன் கருத்து

''செயற்குழுக் கூட்டத்தில் யாரும் என்னைப் பதவி விலகுமாறு கோரவில்லை. எனினும் சூதாட்ட விசாரணைகள் நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு அது வரை தலைமைப் பதவியில் இருந்து விலகியிருக்கத் தீர்மானித்துள்ளேன்'' என்று சீனிவாசன் கூறுகின்றார்.

இதுகுறித்து கருத்துக் கூறும் போது சீனிவாசன்,

''கிரிக்கெட் சூதாட்ட விசாரணை முடியும் வரை கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியில் இருந்து நான் ஒதுங்கி இருப்பேன்.

ஆனால் அந்த காலகட்டத்தில் கிரிக்கெட் சபை இயங்க வேண்டும் என்பதால் அந்தப் பணிகளைக் கவனிக்கும்படி டால்மியாவை கேட்டுக்கொண்டு இருக்கிறோம். செயற்குழுவில் என்னை பதவி விலகும்படி எந்த உறுப்பினரும் கேட்கவில்லை.

### பிரிந்தவர்கள் சேர்வர்

அத்துடன் கிரிக்கெட் சபைச் செயலாளர் மற்றும் பொருளாளர் பதவியில் இருந்து விலகிய சஞ்சய் ஜக்தாலே, அஜய் ஷிர்கே, ஐ.பி.எல். இயக்குநர் பதவியில் இருந்து விலகிய ராஜீவ்சுக்லா ஆகியோர் தங்கள் பதவியில் தொடர வேண்டும் என்று கேட்டிருக்கின்றோம்.

அவர்கள் விரைவில் பதவிக்கு திரும்புவார்கள் என்று நம்புகிறேன். செயற்குழு கூட்டத்தில் என்னை பதவி விலகும் படி பிந்த்ரா கோரவில்லை.

### எதிர்க்கவில்லை

கூட்டம் சுமுகமாகவே நடந்தது. யாரும் ஆக்ரோஷமாக நடந்து கொள்ளவில்லை. இந்திய கிரிக்கெட் சபை எதிர்கொண்டுள்ள சவால்களை சமாளிக்க ஊக்கம் அளிக்கும் வகையில் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். அஜய் ஷிர்கேவின் கருத்துக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. ஷிர்கே, ஜக்தாலே கிரிக்கெட் சபைக்குத் திரும்ப வேண்டும் என்பது எங்களின் ஒருமித்த முடிவாகும். ஷிர்கே எனது சிறந்த நண்பர்.

### குற்றச்சாட்டு இல்லை

சூதாட்ட விசாரணை முடியும் வரை இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியில் இருந்து நான் ஒதுங்கி இருப்பேன். எனக்கு எதிராக எந்த குற்றச்சாட்டும் கிடையாது'' -என்றார். (ற)

## இவர்தான் டால்மியா

பல்வேறு ஊழல் தொடர்பான சர்ச்சைகளில் சிக்கிய ஜக்மோகன் டால்மியாவிடம், பி.சி.சி.ஐ., இடைக்கால தலைவர் பொறுப்பு மீண்டும் ஒப்படைக்கப்பட்டது வேடிக்கையான விடயம். மேற்கு வங்கத்தை சேர்ந்த இவர் 1997 ஆம் ஆண்டு பி.சி.சி.ஐ. தலைவராக தேர்வு செய்யப்பட்டார். இவரது பதவிக் காலத்தில்தான், இந்தியக் கிரிக்கெட் பணம் கொழிக்கும் விளையாட்டாக மாறியது.

போட்டிகளை, தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கான உரிமங்களை வழங்கியதன் மூலம் பி.சி.சி.ஐக்கு ஏராளமான பணம் குவித்தது. அந்த உரிமங்கள் வழங்கியதில் முறைகேடு நடந்ததாக எழுந்த குற்றச் சாட்டை அடுத்து டால்மியா பதவி விலகினார். ஆனாலும் 2001 ஆம் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் தலைவரான டால்மியா 2004ஆம் ஆண்டுவரை தலைவர் பதவியில் நீடித்தார்.

இவர், 1996ஆம் ஆண்டு நடந்த ஐ.சி.சி., தலைவருக்கான தேர்தலில் 25-13 என்ற கணக்கில் வெற்றி பெற்ற போதிலும், கிரிக்கெட் விளையாடும் நிறைய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. இருப்பினும் 1997-2000 ஆம் ஆண்டுவரை ஐ.சி.சி. தலைவராகப் பணியாற்றினார்.

1996ஆம் ஆண்டு நடந்த உலக கோப்பை தொடருக்கான நிதியை மோசடி செய்தார் என்று பி.சி.சி.ஐ. இவரை நீக்கியது. அதையடுத்து 2007 ஆம் ஆண்டு மும்பை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தை நாடினார். இவருக்கு எதிராகப் போதிய ஆதாரங்கள் இல்லாததால் விடுவிக்கப்பட்டார். 2007 ஆம் ஆண்டு கொல்கத்தா உயர் நீதிமன்றம் இவர் மீதான தடையை நீக்கியது. பின் பெங்கால் கிரிக்கெட் சங்க தேர்தலில் வெற்றி பெற்று, தலைவராக பணியாற்றி வருகிறார்.

# சச்சின் இல்லாதது இழப்புத்தான்

## அனில் கும்ளே கூறுகின்றார்

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் சச்சின் பங்களிப்பு இல்லாதது இந்திய அணிக்கு பெரும் இழப்பாகவே அமையும் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரும் சுழற்பந்து வீச்சாளருமான அனில் கும்ளே.

சர்வதேச ஒருநாள் தொடர்களில் இருந்து இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் விலகிய பின்னர் இந்திய அணி சந்திக்கும் மிகப் பெரிய தொடராக சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் அமைகின்றது.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே கும்ளே இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறும் போது,

''சச்சின் இல்லாமல், இந்திய அணி தற்போதுதான் பெரிய ளவிலான தொடரில் கலந்து கொள்கிறது. இவரது இடத்தை நிரப்புவது எளிதானதல்ல. ஆடுகளத்தில் இவரின் பங்களிப்பை அணி இழக்கும். எனினும், இளம் வீரர்கள் அணியை வெற்றி பெறச் செய்வர் என நம்புகிறேன். சம்பியன்ஸ் தொடரைப் பொறுத்தவரை, ஒவ்வொரு ஆட்டமும் முக்கியமானது. இங்கிலாந்தின் தட்பவெப்ப நிலையில் விளையாடுவது வித்தியாசமானது. அடுத்த உலக கிண்ணத் தொடருக்கான பயிற்சியாக இந்தத் தொடரை இந்திய அணி எடுத்துக் கொள்ளலாம்'' என்று அவர் குறிப்பிட்டார். (ற)





# காலிறுதியில் செரீனா

பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், இத்தாலியின் ராபர்டா வின்சியை சந்தித்தார். அதில் அபாரமாக ஆடிய செரீனா 6:1, 6:3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு 4ஆவது சுற்றுப் போட்டியில் ரஷ்யாவின் கஸ்னட்சோவா, ஜெர்மனியின் கெர்பர் மோதினர். முதல் செற்றை 6:4 எனக் கைப்பற்றிய கஸ்னட்சோவா, இரண்டாவது செற்றை 4:6 என இழந்தார். பின் எழுச்சி கண்ட ரஷ்ய வீராங்கனை, வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றை 6:3 என தன்வசப்படுத்தினார். இறுதியில் கஸ்னட்சோவா 6:4, 4:6, 6:3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார். (ற)



# கண்காணிப்பு வளையத்தில் சவான் திருமணம்



ஐ.பி.எல். சூதாட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள அங்கீத் சவானின் திருமணம் பொலிஸாரின் கண்காணிப்பு வளையத்துக்குள் நடைபெற்று முடிந்தது.

ஐ.பி.எல். கிரிக்கெட் ஆட்டங்களில் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கீத் சவான், இடைத்தரகர்கள் மற்றும் சில கிரிக்கெட் வீரர்கள் ஆகியோரை மும்பை பொலிஸார் கடந்தமாதம் கைது செய்தனர்.

அவர்களில் அங்கீத் சவான், 'தமக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் பிணையில் விடுவிக்க வேண்டும்' என்று டெல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். குறித்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி, எதிர்வரும் 6ஆம் திகதி வரை நிபந்தனை பிணை வழங்கினார்.

அதையடுத்து மும்பை தாதர் அருகே உள்ள சானே குருஜி பள்ளியில் 8ஆவது மாடியில் உள்ள கோஹினூர் விருந்து மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை மணமகள் நேஹா சம்பாரி கழுத்தில் அங்கீத் சவான் தாலியை அணிவித்தார்.

திருமண நிகழ்ச்சியில் உறவினர்கள், நண்பர்கள் சுமார் 500 பேர் பங்கேற்றனர். மராட்டிய பாரம்பரியப்படி நடைபெற்ற திருமண விழாவுக்கு வந்தவர்களுக்கு சைவ விருந்து வழங்கப்பட்டது.

விருந்தினர்களில் கிரிக்கெட் சூதாட்ட இடைத்தரகர்கள் யாராவது காணப்படுகின்றனரா என்பதை சாதாரண உடையில் இருந்த பொலிஸார் இரகசியமாக கண்காணித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் வாழும் இலங்கைத் தமிழ்த் தம்பதி சென்னையில் கடத்தப்பட்ட பின் மீட்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையைச் சேர்ந்த பிரிட்டன் பிரஜைகளான கணபதி பிள்ளை தவராஜா (வயது-59). இவரது மனைவி சலஜா ஆகியோர் தொழில் அதிபர்களாக உள்ளனர்.

இவர்கள் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் இருந்து வெளியேறி பிரிட்டனில் குடியேறினர். அந்த நாட்டின் குடியுரிமையையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கு தர்ஷினி என்ற மகள் உள்ளார். அவரும் லண்டனில் வசித்து வருகிறார்.

தவராஜா தனது மனைவியுடன் கடந்த மாதம் 25 ஆம் திகதி இலங்கைக்கு வந்தார். தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக இருவரும் கடந்த 29 ஆம் திகதி கொழும்பில் இருந்து சென்னைக்கு விமானத்தில் சென்றனர். அதன் பின்னர் அவர்கள் எங்கு சென்றனர் என்பது மர்மமாக இருந்தது.

இந்த நிலையில் லண்டனில் உள்ள தவராஜாவின் மகள் தர்ஷினிக்கு மர்ம நபர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டுபேசினார். பெற்றோரை தாம் கடத்தி வைத்துள்ளதாகவும், அவர்களை விடுவிக்க வேண்டுமாயின் 3 லட்சம் பவுண்ட்ஸ் வழங்கவேண்டும் என்றும் மிரட்டியுள்ளார்.

இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த தர்ஷினி இது தொடர்பில் சென்னை கொளத்தூரில் உள்ள தங்கள் குடும்ப நண்பர் குமாரிடம் தகவல் கொடுத்ததுடன் லண்டன் பொலிசாரிடமும் முறைப்பாடு செய்தார்.

அதன் பேரில் லண்டன் பொலிசார் சென்னைப் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு விபரங்களை அறிவித்துள்ளனர்.

இந்தியப் பொலிஸார் நடத்திய விசாரணையில் தவராஜாவின் லண்டன் சுப்பர் மார்க்கெட்டில் பணிபுரியும் இலங்கைத் தமிழரான அஜந்தன் என்பவர் இந்தக் கடத்தலுக்கு மூளையாகச் செயல்பட்டமை தெரிய வந்தது. அவர் தன் நண்பரான திருச்சியைச் சேர்ந்த ரமேஷ் மூலம் இந்தக் கடத்தலை அரங்கேற்றி உள்ளார்.

பொலிஸார் திருச்சி சென்று ரமேசின் நண்பர் கண்ணன், தலைமை ஆசிரியை இந்திரா அந்தோனி மேரி, மதியழகன், பிரபு, சரவணன், சதீஷ்குமார், வசந்த், இளங்கோ உள்ளிட்ட 9 பேரைக் கைது செய்தனர். (த)

# சீனாவுடனான கூட்டு நாட்டுக்குப் பாதகம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடும், நாட்டு மக்களும் பாதிக்காத வகையில் வேலைத் திட்டங்களையே மேற்கொள்ள வேண்டும். மாறாக நாட்டு மக்களைக் கடனாளிகளாக்கி நாட்டைக் குட்டிச் சுவராக்கி விடக் கூடாது என ஐ.தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் சீனாவுக்கான உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அதன் பிராதன நோக்கம் கடன் பெறுவதே அன்றி வேறொன்றும் இல்லை.

இவ்வாறு சீனா 2.2 பில்லியன் டொலர்களைக் கடனாக இலங்கைக்கு வழங்கி முன்வந்துள்ளதாக தெரியவருகிறது. இதற்கு முன்னரும் சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளிலும் பெருந்தொகை கடனுதவிகளை இந்த அரசு பெற்று வந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என்றார். (த-ரி)

**விற்பனைக்கு**

NP PPxxxx தொடரிலக்கமுடைய Body உடன் கூடிய Dimo Batta விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:
T.P: 0777 360 656
(37963) (10,6)

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 10 : 10 : 1938
மறைவு 08 : 06 : 2010

அமரர் **சுந்தரம் விநாயகமூர்த்தி**

திதி : பூர்வபக்க ஏகாதசி

எங்கள் வாழ்வில் இன்பத்தைப் பெருக்கி
இன்னலைக் களைந்திட எமக்கு இறைவனால்
பரிசளிக்கப் பட்டவர் நீங்கள்
உங்களுக்கு நாம்பட்ட கடன் எத்தனை
பிறவி எடுத்தாலும் தீர்க்க முடியாதப்பா.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மீசாலை வடக்கு,
மீசாலை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# படையினர் விளக்கமும் பத்திரிகை விளக்கமும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

என்றாலும் இதன் உண்மை நிலைவரமானது. இராணுவத்தினரின் அனுமதியுடன் கடல் அட்டை பிடிப்பதிலோ அல்லது வேறு கடற்றொழில் நடவடிக்கையிலோ எவரும் ஈடுபடவில்லை. கடற்றொழில் மற்றும் கடல்வள அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள 5 குழுக்கள் கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபட்டுள்ளதுடன் இராணுவத்தின் பணியானது அவ்வாறு கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நபர்கள் அனுமதியளிக்கப்பட்டவர்களா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதாகும்.

மேலும் தங்கள் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களின்படி, மக்கள் இராணுவத்தினர் பற்றித் தப்பபிப்பிராயம் கொள்ளலாம் என்பதால் இது பற்றிய தெளிவுபடுத்தல் செய்தியை, மேற்படி செய்திக்கு வழங்கிய முக்கியத்துவத்தை வழங்கி பிரசுரித்துதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி பலாலி ஊடக அதிகாரிக்குப் பதிலாக கப்டன் டி.பி. விக்கிரமஆராச்சி அனுப்பிய விளக்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:

★ சுண்டிக்குளம் கடல் பகுதியில் கடல் அட்டை பிடிப்பதற்கு 3 குழுக்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் கடல்வள அமைச்சு 'உதயன்' பத்திரிகைக்கு உறுதிப்படுத்தியது. 'அஸ்லாம் என்ரபிரைசஸ்', 'சென்லிஷியா', 'ஏ.எல்.எம். என்ரபிரைசஸ்' ஆகியனவே அந்தக் குழுக்கள். ஆனால் 5 குழுக்கள் அட்டை பிடித்து வருவதை இராணுவம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் அனுமதியளிக்கப்பட்டதற்கு மேலதிகமாக இரு குழுக்கள் சட்டவிரோதமாக கடல் அட்டை பிடிப்பதை இராணுவமே ஏற்றுக் கொண்டுள்ளது.

★ இந்த மூன்று குழுக்களின் அனுமதியைக் காட்டிக் கொண்டு அங்கு சுமார் 12க்கும் மேற்பட்ட குழுக்களைச் சேர்ந்தவர்கள் அட்டை பிடிப்பில் ஈடுபடுகிறார்கள் என்பதை உள்ளூர் மீனவர்களும் மீனவர் சங்க பிரதிநிதிகளும் 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினர்.

★ வடமராட்சி சங்கங்களுடன் நடத்திய கலந்துரையாடலில் சுண்டிக்குளம் கடல் எல்லைக்கு வெளியே தென்பகுதி மீனவர்கள் கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபடுவார்கள் என்று மீனவர் சங்கங்களுக்கு இராணுவம் உறுதியளித்தபோதும், அதற்கு மாறாக சுண்டிக்குளம் கடலில் சட்டவிரோதமாகத் தொழில் செய்பவர்களுக்கு இராணுவம் பாதுகாப்பை வழங்கி வருவதாக அந்தப் பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர் என்றும் 'உதயன்' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாங்கள் அவ்வாறு உறுதி மொழி வழங்கியதை இராணுவம் தமது விளக்கத்தில் மறுக்கவில்லை. அதேநேரம் தாம் உறுதிமொழி வழங்கியதற்கு மாறாக சுண்டிக்குளம் கடலில் தென்னிலங்கை மீனவர்கள் தொழில் செய்கிறார்கள் என்பதை ஒத்துக் கொண்டுள்ள இராணுவம், அவர்களிடம் அதற்கான அனுமதி இருக்கிறதா இல்லையா என்பதைத் தாம் சோதிப்பதாகவும் தெரிவித்துள்ளது. அதேவேளை, மூன்று குழுக்களுக்கு அமைச்சால் அனுமதியளிக்கப்பட்டுள்ளபோதும் 5 குழுக்கள் அங்கு அட்டை பிடிப்பதாகவும் தெரிவித்துள்ளது. கடற்றொழிலில் ஈடுபடுபவர்களைச் சோதனையிடும் தேவை இராணுவத்தினருக்கு ஏன் வந்தது? அவ்வாறான தேவை ஏற்பட்டால் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களமே அது தொடர்பான சிவில் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். அப்படியிருக்கும் போது இராணுவம் ஏன் இந்தப் பணியில் ஈடுபடுகிறது? இவ்வாறான நிலையில் இராணுவத்தின் பாதுகாப்புடன்தான் இந்தத் தொழில் நடக்கிறது என்று மக்கள் குற்றஞ்சாட்டுவதில் என்ன தவறு இருக்க முடியும்?

# ஹோமாகம நீதிவானுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 4
ஹோமாகம மாவட்ட நீதிவான் சுனில் அபேசிங்கவை 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய நேற்று உத்தரவிட்டுள்ளார். மூன்று இலட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொள்வதற்கு முயன்ற வேளை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளினால் இவர் கடந்த 30ஆம் திகதி கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

**க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான வரலாற்றுப் பாட கருத்தரங்கு**

இடம்: யூனிவேர்சல் கல்வி நிலையம்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
காலம்: 05.06.2013 புதன்கிழமை
நேரம்: 9.00-3.00 மணி வரை
அலகு: பகுதி I, படவேலை
(37947)(6.11)

**ஆசிரியர் S.S தாஸ் B.A (Hons)spl**

**SUCCESS INSTITUTE**
K.K.S. Road, Kondavil
(உப்புமடப் பிள்ளையார் கோயில் அருகில்)

A/L 2014, 2015 பிரிவுகளுக்கான கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகளுக்கான புதியதோர் உதயம்

யாழ் கொழும்பு நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

| கணித, உயிரியல் பிரிவு | | கலைப்பிரிவு | |
|---|---|---|---|
| இரசாயனவியல் | : M.A. நிரோஜன் | பொருளியல் | : NB. கஜிதரன் |
| பௌதிகவியல் | : S. பார்த்தீபன் | தமிழ் | : A.K. கீர்த்திராஜன் |
| இணைந்தகணிதம் | : P. விமலநாதன் | இந்துநாகரிகம் | : K.S. இறமணன் |
| உயிரியல் | : S. சுதா | அரசியல் | : A.K. றொபின்சன் |
| **வர்த்தகப் பிரிவு** | | அளவையியல் | : S. ரமணன் |
| | | புவியியல் | : S. சபரிதன் |
| பொருளியல் | : NB. கஜிதரன் | வரலாறு | : M. வசந்தன் |
| வணிகக்கல்வி | : S.K. பாலசபேஷ் | கிறிஸ்தவம் | : செல்வி S. ஜெஸ்மின் |
| கணக்கீடு | : உங்கள் ஆசிரியர் | நாடகமும் அரங்கியலும் | : செல்வி T. காயத்திரி |
| பொது ஆங்கிலம் | : S.K. விசாகன் | | |

ஆரம்பம் : நாளை (05.06.2013) புதன் மாலை 4 மணி
அனுமதிகள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**NEW DEGREE COLLEGE**
மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக
**சிங்களம்**
**புதிய பிரிவு**
ஆரம்பம் 05.06.2013 புதன் 04.00p.m
உயர்கல்வி மாணவர்கள், அரச, தனியார் திணைக்கள உத்தியோகத்தர் மாத்திரம்.
குறிப்பு:- சனி, ஞாயிறு தினங்கள் மட்டுமே வகுப்புகள்

**மரண அறிவித்தல்**

**வேலுப்பிள்ளை குணரத்தினம்**
**(மில் குணம்)**



சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குணரத்தினம் நேற்று (03.06.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், வளர்மதி (ஆசிரியை, யா/நாவற்குழி மகா வித்தியாலயம்), குணேந்திரன் (குணம் அரிசி ஆலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோமசேகரம் (தொ.நு.உ பௌதிகவியற்றுறை, யாழ் பல்கலைக் கழகம்), தர்ஷினி ஆகியோரின் மாமனாரும், செல்வராசா, துரைராசா, அன்னபூபதி காலஞ்சென்ற இராசபூபதி ஆகியோரின் சகோதரரும், பவித்திரன், கலைமகள், லசொந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (04.03.2013) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோலை அம்மன் கோயிலடி
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.
(35059) (6.11)

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.